Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 22 ஞாயிற்றுக்கிழமை (08.12.2013) பக்கங்கள் 20 ஓசை – 069




## திருடர்களின் கோடரி வெட்டு; உயிரிழந்தார் மகன்

உடுவில் பகுதியிலுள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்களால் கோடரி வெட்டுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட தாய், தந்தை, மகன் உட்பட்ட மூவரில் மகன் சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் உயி ரிழந்தார்.

உடுவில் கற்பகப் பிள்ளையார் கோவிலடி தோட்டவெளிப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கொள்ளை முயற்சியின் போது திருடர்களின் கடுமையான தாக்குதல்களினால் தலைப்பகுதியில் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யாழ். இந்துக் கல்லூரியில் க.பொ.த உயிரியற்பிரிவு (2012) மாணவன் ச.யதுசன் (வயது-20) என்பவரே சிகிச்சை பலனின்றி (19) பக்கம் பார்க்க...

## இன நல்லிணக்கத்திற்கு எதிராக செயற்படுகின்றது கூட்டமைப்பு

### அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் வளர்ச்சியடைவதன் மூலமே இனங்களுக்கிடையிலான சம உரிமைகளும் பிறக்க வாய்ப்பு ஏற்படும். ஆனால் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிராகவே செயற்பட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது, (19) பக்கம் பார்க்க...

# இலங்கைக்கு எதிரான பிரேரணை சர்வதேச விசாரணைக்கு வழி வகுக்கும்

## எச்சரிக்கிறது ஐ.தே.க.



(கொழும்)

இலங்கை தொடர்பான பிரிட்டன் பிரதமர் கமரூனின் கருத்தை இலகுவாக நினைக்கக் கூடாது. இலங்கைக்கு எதிரான பிரேரணை எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் நிறைவேற்றப்பட்டால் நாடு சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடலாமென எச்சரித்துள்ளது ஐ. தே.க.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் இடம்பெற்ற வெளிவிவகார அமைச்சர் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நல நோன்புகை அமைச்சர்) மற்றும் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது ஐ.தே.க. எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தென்னாபிரிக்காவில் யுத்தம் முடிந்த பின்னர் உயிரிழப்புக்களுக்காக நெல்சன் மண்டேலா மக்களிடம் மன்னிப்புக் கோரினார். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? உயிரிழப்புக்காக பாற்சோறு உண்டு வெற்றி விழா கொண்டாடினீர்கள்.

அடுத்த மார்ச் மாதம் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்களுக்கு அரசு எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றது.

சிறுபான்மை இனத்தவர்களையும் விமர்சிக்கின்றீர்கள். வெளிநாடுகளையும் விமர்சிக்கின்றீர்கள் ஏன் தேர்தலுக்காக. ஆபிரிக்க நாடுகளில் 19இல் 7 நாடுகளே மாநாட்டுக்கு வந்தன. (19) பக்கம் பார்க்க...

## கடற்றொழிலுக்குச் செல்வதை தவிர்க்குமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பகுதிகள் குறிப்பாக பருத்தித்துறைக் கரையோரப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதால் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு வடமராட்சி கடற்றொழில் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதை (19) பக்கம் பார்க்க...

## நெடுந்தீவுப் பகுதியிலிருந்து ஈ.பி.டி.பி. வெளியேறக்கூடாது

### மக்கள் ஆர்ப்பாட்டம்




(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்திலிருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் வெளியேறக் கூடாதெனத் தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத் தியுள்ளனர்.

நேற்று மாலை நெடுந்தீவு துறைமுகத்தடியில் ஒன்றுகூடிய பொதுமக்கள் தமக்கு பாதுகாவலர்களாகவும், துன்ப துயரங்களிலிருந்து தம்மை மீட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியே வெளியேறாதே, நெடுந்தீவிலிருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேறி எமக்கு தண்டனை தராதே போன்ற சுலோக அட்டைகளுடன் பேரணியாக ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு அலுவலக முன்றலினை சென்றடைந்தனர்.

அங்கு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரினிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவுப் பிரதேசத்திலிருந்து வெளியேறக்கூடாது (19) பக்கம் பார்க்க...

## அனைத்து வித உரிமை மீறல்களும் முடிவுறுத்தப்பட வேண்டும்



### மீளவும் வலியுறுத்தும் அமெரிக்கா

இலங்கையில் தொடரும் மனிதஉரிமை மீறல்கள், ஊடக சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகள், சிறுபான்மை மதங்களுக்கு எதிரான வன்முறைகள் என அனைத்துமே முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென அமெரிக்கா கூறியுள்ளது. வோஷிங்டனில் நேற்று முன்தினம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் மேரி ஹாப் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த கொமன்வெல்த் மாநாட்டின் போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, 30 வருட போர் முடிவடைந்த நிலையில், நல்லிணக்கத்தை ஏற்படுத்த காலஅவகாசம் தேவைப்படுவதாக குறிப்பிட்டிருந்தார்.

ஐ.நா.வும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் அதற்கு அவசரப்படுத்தக்கூடாது என்றும் அவர் கூறியிருந்தார்.

வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவரும் கூட, அமெரிக்காவும், ஐ.நாவும் காலஅவகாசம் கொடுக்க வேண்டும் என்று கூறி வருகின்றார்.

எனவே, மனிதஉரிமைகள் மற்றும் இலங்கையின் ஏனைய நிலைவரங்கள் தொடர்பாக, தற்போது (19) பக்கம் பார்க்க...

## நிபந்தனைகளை ஏற்றால் அரசுக்கு உதவத் தயார்

### கூறுகிறது கூட்டமைப்பு



(கொழும்பு)

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் விவகாரத்தில் அரசாங்கத்திற்கு உதவிகளை வழங்கத் தயார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது, (19) பக்கம் பார்க்க...

## விக்கியின் புதுடில்லிப் பயணம் அடுத்த வாரம் வாய்ப்பில்லை

### என்கிறது இந்தியா

வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனின் புதுடில்லிப் பயணம் எப்போது என்ற கேள்விக்கான பதிலை முன்கூட்டியே எதிர்பார்க்கக் கூடாது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற, இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், சையட் அக்பருதீனிடம், மாலைதீவு அதிபர் மற்றும் விக்னேஸ்வரனின் இந்தியப் பயணம் குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லையா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர், சையட் அக்பருதீன்,

சரியான நாள்கள் தொடர்பாக, மாலைதீவு அரசுடன் கலந்துரையாடி வருகிறோம். பயண நாள் தொடர்பாக (19) பக்கம் பார்க்க...

03




பாதிப்பு

12



விக்கினம்



சாவகச்சேரி விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்றுவரும் பிள்ளையார் பெருங்கதை படிப்பின் 20 ஆம் நாளான நேற்று மாலை கஜமுக சூர சங்கார விழா வெகு சிறப்பாக இடம்பெறுவதைக் காணலாம்.

(படங்கள்- ஆர்.இராஜகுமார்)

# வீதி விபத்தில் இளைஞர் காயம்

(வடமராட்சி)

அல்வாய் கிலக்கடிப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் இராணுவ வாகனத்துடன் மோதியே இந்த இளைஞர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்தில் நிருபன் (வயது 24) என்ற இளைஞரே காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (116)

# விக்கிரகங்கள் திருட்டு ஐவருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பகுதிகளில் பல இலட்சக் கணக்கான பெறுமதியான விக்கிரங்கள் ஆலயமணி, ஐம்பொன் சிலை ஆகியவற்றை களவாடிய 5 பேர் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட வேளை ஐவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்

கைது செய்யப்பட்ட மூவர் நெச்சியாகம பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் எனவும் ஏனையவர்கள் பரந்தன் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிசார் தெரிவித்ததுடன் மேற்படி நபர்களுக்கு எதிராக வவுனியாவிலும் வழக்குகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளனர் (170

# அதிபரின் அறை திருடர்களால் உடைப்பு

(கொடிகாமம்)

கடந்த 3 ஆம் திகதி கொடிகாமம் பொலிஸ் பிரிவில் உள்ள மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய அதிபரின் அறை திருடர்களால் உடைக்கப்பட்டு அங்கிருந்து எட்டாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவுபோயிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து முறைப்பாடு ஒன்று குறித்த பாடசாலை அதிபரினால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாட்டை அடுத்து கொடிகாமம் பொலிஸார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளதுடன் இதுவரை சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படவில்லை. என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இச்சம்பவம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# நிரந்தர நியமனத்திற்காக ஏங்கும் பட்டதாரிப் பயிலுநர்கள்

(அச்சுவேலி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் நூற்றுக் கணக்கான பட்டதாரிகள் பயிலுநர்கள் என்ற ரீதியில் பத்தாயிரம் ரூபா சம்பளத்துடன் வருடக்கனக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள நிலையில் குறித்த ஒரு தொகுதிப பட்டதாரிப் பயிலுநர்களுக்கும்,, போட்டிப்பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதியினருக்கும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதானது தமக்கு மிகுந்த ஏமாற்றத்தினையும், கவலையினையும் அளிப்பதாக பாதிக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

ஏனைய மாவட்டங்களில் அநேக பட்டதாரிகள் நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் மட்டுமே சொற்ப அளவான ஆளணியினர் மட்டும் நிரந்தர நியமனத்திற்குள் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கும் நிரந்தர நியமனத்திற்கு உள்வாங்கப்படாத பட்டதாரிப் பயிலுநர்கள், தாம் இன்னும் எத்தனை வருடங்கள் இவ்வாறு சொற்ப சம்பளத்திற்கு கௌரவமற்ற வகையில் பணியாற்றுவது என்ற கேள்வியினையும் எழுப்பியுள்ளனர்.

தொடந்தும் தாம் இவ்வாறான ஓர் நிலையில் பணிகளை தொடரும் போது சமூகத்திலும் தமக்கு ஓர் நல்ல அந்தஸ்து கிடைககாமல் போகலாம் எனக் கருதுவதால் இவ்விடயத்தில் அதிகாரிகள் அதிக கரிசனையுடன் செயற்பட்டு தமக்குரிய நிரந்தர நியமனத்தினை பெற்றுக் கொடுக்க வழிசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைக்கின்றனர்.

# மத்தியஸ்த சபை விசாரணை இன்று

பூநகரி மத்தியஸ்த சபை விசாரணைகள் இன்று பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக மத்தியஸ்த சபைத் தவிசாளர் வி.சொக்கநாதன் தெரிவித்துள்ளார்.

பூநகரி மத்திய கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறும் இந்த விசாரணைகள் க.பொ.த சாதாரண தரப் பரட்சை முடிவுறும் வரை பிரதேச செயலகத்திலேயே இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (112)

# பரிசளிப்பு விழா

தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி சத்தியபாமா நவரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கலந்துகொள்ளவுள்ளார். (109)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 211 | திகதி 2013.12.06 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

02 09 21 62 ◯

பரிசுத் தொகை ரூபா 13,221,080/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| [illegible] | 1,000,000/- | - | - |
| [illegible] | 50,000/- | 10 | 500,000/- |
| [illegible] | 1,000/- | 210 | 210,000/- |
| [illegible] | 1,000/- | 355 | 355,000/- |
| [illegible] | 60/- | 8911 | 534,660/- |
| [illegible] | 40/- | 4661 | 186,440/- |
| [illegible] | 20/- | 117377 | 2,347,540/- |
| [illegible] | 20/- | 17165 | 343,300/- |
| [illegible] | 13,221,080/- | | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,476,940/- |

ரூபா 13,450,640/-

2013.12.10ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்டுகளாகும்

நியத்த ஜய

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3211)


# வினாத்தாள் தயாரிக்கும் செயலமர்வு நாளை

க.பொ.த (உ.த) மாணவர்களுக்கான முன்னோடிப்பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கும் செயலமர்வு நடைபெறவுள்ளது.

வட மாகாணக் கல்விக்கழகத்தின் ஏற்பாட்டில் வடமாகாணக கல்வித் திணைக்களத்தில் இச் செயலமர்வு நடைபெறவுள்ளது. நாளை தொடக்கம்-வியாழக்கிழமை வரையான நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இச் செயலமர்வில் க.பொ.த உயர்தரத்தின தமிழ்ப் பாட மாதிரி வினாத்தாள்கள் தயா ரிக்கப்படவுள்ளன.

தினமும் 8.30 தொடங்கி 4.30 வரை நடை பெறவுள்ள இச் செயலமர் வில் கலந்து கொள்ளும் ஆசிரி யர்களுக்கான கடிதங்கள் அவர்களுக்கு தனித் தனியே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது (17)

# கொக்குவில் பொது நூலகத்தின் கட்டடப் பணிகள் மந்தகதியில்

## மக்கள் விசனம்

கொக்குவில பொது நூலகத்தின் கட்டட வேலைகள் சுமார் இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலும் இன்னமும் நிறைவு செய்யப்படாமல் இருப்பது பற்றிப் பொதுமக்களினால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் பல பிரிவுகளையும் அடங்கியதாக நடைபெற்று வந்த இந்த நூலகத்தின் செயற்பாடுகள் தற்போது முடங்கிப் போன நிலையில் காணப்படுகின்றன. பத்திரிகைகள் படிக்கும் பகுதிகூட சில பத்திரிகைகளுடன் மட்டும் இருளடைந்த நிலையில் உள்ளது.

ஆரம்பத்தில் மாடிக் கட்டடமாகக் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட இக் கட்டட வேலைகள் தொடங்கப்படுவதும் பின்னர் விடுபட்டுப் போவதுமாக நடைபெற்று வந்தது. அதற்குப் பிறகு வேலைகள் நடைபெறுவதாகவே தெரியவில்லை எனப் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கிவந்த இந்நூலகம் தொடர்ந்தும் மக்களுக்கான சிறந்த சேவையைத் தொடர வேண்டும் என்பது பொதுமக்களின் விருப்பமாகும்.

அதனைக் கருத்தில் கொண்டு இந்நூலகத்தின் கட்டட வேலைகள் மக்களுக்கு கிடைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பல அபிமானிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (137)

# இனந்தெரியாத நோய்த்தாக்கம்

# திராட்சை செய்கை பாதிப்பு

## நஷ்டத்தில் விவசாயிகள்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய், ஊரெழு, சுன்னாகம் போன்ற பிரதேசங்களில் திராட்சைப்பழச் செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில் தற்போது இனந்தெரியாத நோய்த் தாக்கத்தினால அறுவடைக்கு தயாராகவுள்ள பழங்கள் நிலத்தில் வீழ்வதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

பொதுவாக செப்ரெம்பர் முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் திராட்சைக் கொடிகள் அதி உச்ச விளைச்சலைக் கொடுப்பது வழமையாகும். எனினும் இம்முறை இக்காலப்பகுதியில் கண்ணுக்குப் புலப்படாத ஒருவகை நோய்த்தாக்கத்தினால் பழங்களும் முதிர்ந்த காய்களும் தாமாகவே நிலத்தில் விழுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

4 பரப்பு நிலம்கொண்ட தோட்டத்தில் 2000 முதல் 3000 கிலோ வரை இக்காலப்பகுதியில் திராட்சைப்பழம் அறுவடை செய்யப்படும் நிலையில் இத்தகைய நோய்த்தாக்கத்தால் விவசாயிகள் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட சில விவசாயிகளின் தோட்டங்கள் முற்று முழுதாக பாதிக்கப்பட்ட நிலையில் முழுமையாக அதனை கைவிட்டுவிட்டு அடுத்த கட்டத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது ஒருகிலோ திராட்சை 150 ரூபாவிற்கு விற்பனையாவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ள நிலை. யில் இதற்குத் தீர்வுகாணும் வகையில் விவசாயத் திணைகளம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (120)

# தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் 5 பேருக்கு தலா 10000 ரூபா வீதம் வழங்கவென தற்செயல் நிவாரணக் கொடுப்பனவை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ளது.

எதிர்பாராத தீ விபத்து, கடும்மழை, சூறாவளி, சுழிகாற்று போன்றவற்றால் வீடுகள் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கே இக் கொடுப்பனவைப் பிரதேச செயலாளர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இரண்டாம் கட்டக் கொடுப்பனவை கந்தசாமி சந்திரவதனி, 45 கணேசபுரம் அருணாசலம் கதிராயி, ஊற்றுப்புலம், சதாலிங்கப்பிள்ளை இந்திராணி, டி3, பன்னங்கண்டி ஆகியோர் பெறவுள்ளனர்.

முதலாம் கட்டக் கொடுப்பனவை இருவர் பெறவுள்ளனர். இராசு மரியாய், அரை ஏக்கர் திட்டம், ஊற்றுப்புலம், நாராயணன் சுப்பிரமணியம், நாவலர் பண்ணை, ஊற் றுப்புலம் ஆகியோர் பெறவுள்ளனர்.

கொடுப்பனவு பெறவுள்ளவர்கள் தமது குடும்பஅட்டை, அடையாள அட்டை சகிதம் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். இதேவேளை கண்டாவளைபிரதேச செயலர் பிரிவிலும் 4 பேர் இத் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவைப் பெறுவதற்குரிய நிதியை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப்பணிப்பாளர் அனுப்பிவைத்துள்ளார். (90)

# மாதாந்தக் கூட்டம்

சண்டிலிப்பாய் பிரதேச, இளைஞர் கழக சம்மேளனத்தின் இம் மாதத்திற்கான விசேட கூட்டம் இன்று பிற்பகல் 2 மணியளவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில், இடம்பெறவுள்ளது.

அடுத்தாண்டுக்கான செயற்றிட்டங்கள், இடம்பெற்ற செயற்றிட்டங்களின் ஆய்வு, இடம்பெற்றுக் கொண்டிருக்கும் 2014ஆம் ஆண்டிற்கான இளைஞர் கழகங்களின் புனரமைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. இது சம்பந்தமாக அனைத்து கழங்களிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி.க.சரவணபவன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஓய்வு நிலை முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் குகநேசன், சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் எஸ். நாகையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இந்திய பாடகர்களின் பக்தி அருளிசை



நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தில் விநாயக விரதத்தை முன்னிட்டு இந்தியப் பாடகர்களின் பக்தி அருளிசை அண்மையில் இடம்பெற்றது.

விநாயக விரத பெருவிழாவினை முன்னிட்டு நடைபெற்ற இப் பக்தி அருளிசை நிகழ்வில் இந்திய பிரபல பக்திப் பாடகர் வீரமணிதாசனின் வாழ்த்துக்களுடன் கலைமணி கே.வீரமணி ஆசியுடன் தென்னிந்திய பிரபல பக்திப் பாடகர் ஆத்மாலய பிரணவ ஒலி பக்திமாமணி சாஸ்தாசன் குழுவினர் பக்தி அருளிசையை வழங்கினர். இந்நிகழ்வில் பல விநாயக அடியார்கள் கலந்து கொண்டு அருளிசையை கேட்டு மகிழ்ந்தனர்.




# சுதந்திரன் பத்திரிகை வளர்த்த தலைவர்களை இன்றுள்ளோர் அறிவீரா?

தமிழ் ஊடக உலகம் தமிழ் அரசியல் உலகத்தையும் விட இருண்டது.

இதற்குக் காரணம், தமிழ் ஊடகவியலாளர்கள் தமிழ் அரசியல்வாதிகளை விடப் பெரும் போர் வீரர்களும் பென்னாம் பெரிய தேசியவாதிகளும் ஆகிவிட்டதே.

தமிழ் அரசியல் உலகம் எப்படி இருண்டதோ அப்படியே இந்த பொய்த் தேசியவாதம் பேசுவோரினால் தமிழ் ஊடக உலகமும் இருண்டு விட்டது.

ஆனால், தமிழ் அரசியலில் துரோகி தியாகி என்ற பிரிகோடு மெல்லக் கரைந்து கொண்டு வருகிறது.

தமிழ் ஊடகத்துறையில் இது நேர்மாறாக உள்ளது. அங்கே இன்னும் அது வலுப்பெறுகிறது.

அப்படியாக அது இருப்பதால் மெல்ல மாற்றம் கண்டு வரும் தமிழ் அரசியலையும் தமிழ் ஊடகத்தளம் மறுத்துப் பிழவாதம் பண்ணுகிறது.

ஊடகத்தளத்தில் பொய்யான 'தியாகிகள்(?)' கூட்டமே தமிழ் ஊடகத்தைக் கட்டி ஆள்கிறது. தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஊடகதர்மம் பற்றியோ ஊடகத்தின் அடிப்படைகளைப் பற்றியோ, ஜனநாயகம் பற்றியோ அரிச்சுவடி கூடத்தெரியாது.

அரசியல் அறிவு, வரலாற்று அறிவு கூடப் பெரும்பாலான ஊடகத்தினருக்குக் கிடையாது.

அவர்கள் ஒரு போதும் சுதந்திரன் பத்திரிகையைப் படித்ததும் கிடையாது. அதைப் பார்த்ததும் கிடையாது.

சுதந்திரன் பத்திரிகை முன்னர் தனக்கு உவப்பில்லாத அத்தனைபேரையும் திட்டித்தீர்த்தது.

எதிராளிகளைப் பந்தாடியது.

தன்னுடைய தலைவர்களைத் தலையின்மேலே வைத்துக்கொண்டாடியது. அன்றைய தமிழ்த் தலைவர்கள் சொன்னதையும் சொல்லாததையும் முன்பக்கத்திலே பென்னாம் பெரிய கொட்டை எழுத்திலே போட்டு, அரசாங்கத்தைக் கலங்கடித்தது.

இறுதியில் அதே தலைவர்கள் தமிழ்ச் சமூகத்தினால் நிராகரிக்கப்பட்டார்கள்.

இது மட்டுமல்ல, இன்றைய ஊடகவியலாளர்களிற் பலருக்கு ஆகாசவாணி, மாநிலச் செய்திகளின் கதைகளும் தெரியாது. ஏன், வெங்கடேஸ்வரன், ஜி. பார்த்தசாரதி போன்ற இந்தியப் பிரதானிகள் ஈழத்தமிழர்களுக்குப் பாலூட்டிய கதைகளும் தெரியாது.

எனவேதான் இப்பொழுது பிரிட்டன், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளின் தலைவர்களும் பிரதானிகளும் ஈழத்தமிழருக்கு கஞ்சி வார்ப்பதைப் பற்றிக் கதைவிடுவதையெல்லாம் முன்பக்கத்துக்குக் காவிக் கொண்டு வந்து போடுகிறார்கள்.

இவர்களைப்பொறுத்தவரை தாங்கள் விரும்புவதே செய்தி. தாங்கள் கொடுப்பதே தகவல். அதற்கப்பால் எதுவும் இல்லை.

யாரும் ஒன்றும் கேட்கமுடியாது. அப்படி யாராவது கேள்வி கேட்டால் அவ்வளவுதான். அவர் துரோகியாக்கப்படுவார். அந்த அளவுக்கு ஊடக அராஜகம் தமிழ்ச் சூழலில் கோலோச்சுகிறது.

புலிகளாவது பிற்காலத்தில் கொஞ்சம் விட்டுக்கொடுத்து நடந்தார்கள். மற்றவர்களையும் அனுசரித்தார்கள். அப்படி அவர்கள் அனுசரித்த படியால்தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே உருவானது.

ஆனால் இந்த ஊடகத்தலைவர்கள் எதையும் விட்டுக்கொடுக்கவோ யாரையும் அங்கீகரிக்கவோ தயாரில்லை.

கையில் துவக்கை வைத்திருந்தவர்கள் செய்த வன்முறைகளை விட இவர்கள் கையில் பேனாவையும் மனதில் நஞ்சையும் வைத்துச் செய்கிற வன்முறைகள் மிக மோசம்.

ஊடகதர்மத்தின்படி அனைத்துத் தரப்பினரின் செய்திகளுக்கும் கருத்துகளுக்கும் இடமளிக்கப்படுவதே முறையாகும்.

இங்கே பல தரப்பினரும் அரசியற் பணிகளைச் செய்கிறார்கள். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்திகள் – கருத்துகள் மட்டும்தான் இந்த ஊடகங்களில் வரும்.

அனைத்துத் தரப்பினருக்கும் இடமளித்தால்தான் அது மக்களுக்கான ஊடகங்களாகவும் ஜனநாயகத் தகுதியைக் கொண்டனவாகவும் இருக்கும். இதுதான் ஊடக அரிச்சுவடி.

ஆனால் அப்படித் தமிழ் ஊடகங்கள் இருப்பது குறைவு.

இதை தமிழ்ப்பெருங்குடி மக்களும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொண்டு விடுகிறார்கள்.

அவர்கள் இந்த ஊடகங்கள் ஏன் மற்றவர்களின் செய்திகளை வெளியிடுவதில்லை என்று கேட்பதும் இல்லை. தங்களுக்குள் யோசிப்பதும் இல்லை.

அனைத்துத் தரப்பின் செய்திகளையும் கருத்துகளையும் வெளியிடும் ஊடகங்களை அரசாங்கத்தின் ஊதுகுழல்கள் என்று முத்திரை குத்திவிடுகிறார்கள்.

இப்படித் தவறுகளுக்கெல்லாம் இடமளித்தபடியால்தான் கடந்த காலத்தில் பெரும் தண்டனைகளை தமிழ்ச் சமூகம் அனுபவித்தது.

இண்டைக்கும் தன்னுடைய கீழ் நிலையிலிருந்து மேலெழ முடியாமல் தமிழ்ச் சமூகம் தடுமாறிக்கொண்டேயிருக்கு.

இன்னும் அது இப்படியே தப்பும் தவறுமாக இருந்தால் இப்போதைக்கு மட்டுமல்ல எப்போதைக்குமே மீள முடியாது.

என்ன பேசுவது என்று தயக்கம் தோன்றும் போது உண்மையைப் பேசுங்கள் - ட்வெயார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இருவர் சமாதானமாவது எப்படி?

பிறரிடம் நமக்குப் பிடிக்காத குணங்களே பெரிதாகத் தெரிகின்றன. நம்மால் சகித்துக்கொள்ள முடியாதளவிற்கு அவர்களது பிழைகள் எல்லாம் நமக்குப் பெரிதாகத் தெரிகின்றன. அவையே திரும்பத் திரும்ப நமக்கு நினைவூட்டப்படுவதால், அது பற்றிய ஆவேசத்தில் நம் தவறுகள் நம் நினைவில் வருவதேயில்லை.

நமக்குத் தெரியாதவை, அறியாதவை பற்றியெல்லாம் நினைவில் வருவதில்லை ஆதலால், நம் நினைவிலுள்ள மற்றவர்களின் பிழைகளே நமக்குப் பிழைகளாகத் தெரிகின்றன.

நாமும் தவறுகள் செய்திருக்கிறோமா, அநீதிகள் செய்திருக்கிறோமா, மற்றவர்கள் துன்பப்படவும் அச்சப்படவும் செய்திருக்கிறோமா என்பதெல்லாம் பற்றி நாம் யோசிப்பதேயில்லை.

அப்படி ஏதாவது யோசிக்கும்படி ஆகிவிட்டால் கூட, நம்மை விட மற்றவர்கள் செய்ததே ஆகப்பெரும் கொடூரம் என்று சமாதானம் செய்துகொண்டு அந்த சங்கடமான நினைவுகளை விலக்கி விடுகிறோம். அவர்கள் ஆயிரமாயிரமாய்க் கொலை செய்தார்கள்; நாம் சில நூறுதானே செய்திருப்போம் என்கிற குரூர நியாயத்திற்கு நாம் பழக்கப்பட்டு விட்டோம்.

அதனால்தான் எந்த உறுத்தலுமில்லாமல் நாம் மற்றவர்கள் செய்த கொலைகளைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருக்க முடிகிறது. அந்தக் கொடூரக் குற்றவாளிகளோடு சமதையாக நமக்கென்ன பேச்சு என்ற இறுமாப்பை நியாயப்படுத்திக் கொண்டிருக்க முடிகிறது.

நாம் குற்றமற்றவர்கள் என்று நாமாக வளர்த்துக்கொண்ட எண்ணம், மற்றவர்களோடு இணங்க முடியாத அகங்காரிகளாக்கி விடுகிறது நம்மை!

ஒன்பது அப்பாவிகளைக் கொலை செய்தவனோடு ஒப்பிட்டால் ஒரு அப்பாவியைக் கொலை செய்தவன் குற்றவாளி இல்லை என்று சொல்லிவிடலாமா? ஒன்று செய்தவன் ஒன்பது செய்தவனைக் குற்றம் சாட்டுவது போல, ஒன்பது செய்தவனுக்கும் குற்றம் சாட்ட உலகளாவியதாய் ஒரு லட்சம் கொலைகளைச் செய்தவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள்!

“சீஸரின் மனைவி சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவள்” என்பது போல நமக்கு நாமே உருவாக்கிக் கொண்ட புனிதப்படுத்தலே, மற்றவர்களோடு பேச முடியாதவர்களாக இணக்கம் காண முடியாதவர்களாகச் செய்துவருகிறது நம்மை!

நாம்தான் பெரிதாகப் பாதிக்கப்பட்டவர்கள் என்ற எண்ணம் நமது பழிவாங்கும் உணர்ச்சியை நியாயப்படுத்திவருகிறது. அது, இணக்கத்திற்கு நம்தரப்பில் செய்ய எதுவுமில்லை என்ற மறதிக்குள்ளும் மறுப்பிற்குள்ளும் தள்ளுகிறது.

நாம் செய்ததெல்லாம் அவர்கள் செய்ததற்குப் பதில்தான் என்றும் எங்களது தற்காப்புக்கானது என்றும் நியாயப்படுத்திக் கொள்கிறோம். அதுபோன்ற நியாயங்களெதையும் அவர்களும் வைத்துக் கொண்டிருந்தால் அதில் கொஞ்சமும் நியாயமில்லை என்று நாங்களாகவே நினைத்துக் கொள்கிறோம்.

இதுபோன்ற ஒருபக்கச் சிந்தனைகளோடு, இருதரப்புச் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினைக்குத்தான் தீர்வு காணமுடியும்? மறுதரப்புச் சொல்வதைக் கேட்க விரும்பாமலே, பாதிக்கப்பட்டிருப்பது நாங்களே, எனவே நாங்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும், நாங்கள் கேட்பதைத்தான் தர வேண்டும் என்று நாண்டு நிற்பது, ஒரு தரப்பை அழித்தோ அடிமைப்படுத்தியோதான் பிரச்சினைக்குத் தீர்வுகண்ட குகைமனிதர் காலத்து வழிமுறையல்லவா?

பகை நிறுத்தி சமாதானமாக வாழ விரும்பும் மனிதர் செய்ய வேண்டிய காரியங்களைத்தான் நாம் செய்து கொண்டிருக்கிறோமா? பேசிக் கொண்டிருக்கிறோமா?

- ஆசிரியர்.

# வடக்கு கடலில் வலுவடைகிறது “மடி” சூறாவளி அபாயம்

வங்காள விரிகுடாவில் கடந்த சில நாட்களாக காணப்பட்ட தாழமுக்கமானது தற்போது அயன மண்டல சூறாவளியாக வலுவடைந்துள்ளது என வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தச் சூறாவளிக்கு மாலைதீவு நாட்டினால் பிரேரிக்கப்பட்ட ‘மடி’ எனும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இது தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்காக 330 கிலோமீற்றர் தூரத்திலும், திருகோணமலையிலிருந்து வடகிழக்காக 370 கிலோமீற்றர் தூரத்திலும் சென்னையிலிருந்து தென்கிழக்காக 500 கிலோமீற்றர் தூரத்திலும் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இச்சூறாவளி, இலங்கையை விட்டு அப்பால் இந்தியாவை நோக்கி வடக்குத் திசையில் மிக மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. இது அடுத்த 24 மணிநேரத்தில் மிகவும் வலுவான சூறாவளியாக மேலும் வலுவடைந்து வடக்கு-வடகிழக்குத் திசையில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் தாக்கத்தினால் காற்றுடனான காலநிலை நாட்டிலும் சூழவுள்ள ஆழ்கடல் பிரதேசங்களிலும் முக்கியமாக மத்தியமலைப் பிரதேசத்தின் கிழக்கு சரிவுகளிலும் காணப்படும்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களின் பல இடங்களில் இடையிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படும். பிற்பகல் அல்லது இரவு வேளைகளில் நாட்டின் அனேகமான பகுதிகளில் இடியுடன்கூடிய மழை காணப்படும் என வளிமண்டலவியல் ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரி க.சூரியகுமாரன் தெரிவித்தார்.கடல் பிராந்தியங்களில் காற்றுடன்கூடிய மழை கொண்ட காலநிலை காணப்படும். முக்கியமாக பொத்துவில் முதல் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஊடான மன்னார் வரையான ஆழ்கடல் பகுதிகளில் காற்றுடன்கூடிய மழை கொண்ட காலநிலை காணப்படும்.

கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகமானது மணித்தியாலத்திற்கு 30 கிலோமீற்றர் முதல் 50 கிலோமீற்றர் வரையான வேகத்தில் வடகிழக்குத் திசையிலிருந்து காற்று வீசும். இந்தக் காற்றின் வேகமானது சில சந்தர்ப்பங்களில் மணித்தியாலத்திற்கு 80 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசும்.

இதனால் இந்தக் கடல் பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன் அபாயகரமானதாகவும் இருக்கும். ஏனைய ஆழ்கடல் பகுதிகள் ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என்றார்.

## நாடாளுமன்ற அமர்விலும் மண்டேலாவுக்கு அஞ்சலி

இனவெறிக்கு எதிராகப் போராடிய தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு நேற்று நாடாளுமன்றத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. சபாநாயகர் சாமல் ராஜபக்ஷவினால் மண்டேலாவின் மறைவுக்கு கவலை வெளியிடப்பட்டது.

நெல்சன் மண்டேலா உலக ஜனநாயகத்துக்காக தன்னை அர்ப்பணித்தவர் என்று சபாநாயகர் தெரிவித்தார்.தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, நெல்சன் மண்டேலாவின் மறைவுக்கு, அரசாங்கத்தின் சார்பிலும், மக்களின் சார்பிலும் அனுதாபத்தை தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

இதன் போது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்கா மக்களுக்கு பெற்றுக் கொடுத்த சுதந்திரம் பெறுமதி வாய்ந்தது என்று தெரிவித்தார். அவரது புகழ் என்றும் மங்காது என்றும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

# கொரிய மொழியில் சித்தியடைந்தோருக்கு அடுத்த வருட இறுதிக்குள் தொழில் வாய்ப்பு

தொழில் வாய்ப்புக்காக கொரியா செல்லும் நோக்கில் கொரிய மொழி பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கு அடுத்த வருட இறுதிக்குள் தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை சுமார் ஆறாயிரம் இலங்கையருக்கு கொரிய அரசு தொழில்வாய்ப்புக்களை வழங்கி வருகிறது. எனினும் கடந்த 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011ஆம் ஆண்டில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளது. எனவே அனைவருக்கும் தொழில்வாய்ப்பை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுப்பது நாம் அல்ல. அவர்களை இணையத்தளத்தினூடாக கொரிய அரசே பணிக்கு இணைத்துக்கொள்கிறது.

கடந்த 2012ஆம் ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்தோர் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் அந்நாட்டுக்குச் செல்லும் சந்தர்ப்பத்தைப் பெறுவர். பரீட்சையில் சித்தியடைந்த அனைவரும் தொழில்வாய்ப்பை பெறுவர் என்று நான் நம்புகிறேன்.

தற்போது இ-10 விசா பற்றிய பேச்சொன்று பரவி வருகிறது. அப்படியெல்லாம் எதுவும் இன்னமும் நடைமுறைக்கு வரவில்லை. மீன்பிடிக் கட்டுமானம் போன்ற பணிகளுக்கு மொழிப் பரீட்சையில் சித்தி அவசியமென்பதில்லை என்பது எனதும், ஜனாதிபதியினதும் கருத்து. அதற்காக அந்நாட்டு அரசாங்கத்துடன் நாம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். அந்த முயற்சி வெற்றியளிக்குமானால் மட்டுமே இ 10 என்ற புதிய விசா என்ற நடைமுறை பரீட்சை எழுதாதவர்களுக்காக அறிமுகப்படுத்தப்படும். அப்படி மாற்றம் வருமாக இருந்தால் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்து நாம் மக்களுக்கு அறிவிப்போம்.

கொரியா செல்வதற்கு கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அப்படியில்லாம் பணத்தைக் கொடுத்து போகலாம் என்று சொல்வதில் எவ்வித உண்மையும் இல்லை. எனவே சித்தியடையாதவர்களாயிருந்தாலும் சித்தியடைந்தவர்களாயிருந்தாலும் முகவர்களிடமோ, இடைத்தரகர்களிடமோ பணத்தைக் கொடுத்து ஏமாற வேண்டாம்.

# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவது காலத்தின் தேவை

மன்னார் மாவட்டத்தில் கட்டாக்காலி மாடுகளினால் விவசாயிகள் அசௌரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதுடன் வீதி விபத்துக்களும் இடம்பெறுகின்றன எனவே, இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது காலத்தின் தேவையாகுமென மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ். தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

பெரும்போக நெற்செய்கை தொடர்பாக மன்னார் மாவட்ட விவசாயிகளுடனான கலந்துரையாடல் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

மன்னார் மாவட்டத்தில் பருவமழையின்மையால் விவசாயிகள் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கட்டுக்கரைக்குளம் விவசாயி

### மன்னார் அரச அதிபர்

கள் மழையை நம்பி சுமார் மூவாயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொண்டுள்ளனர்.

இவற்றுக்கு போதிய நீர்ப்பாசன வசதியின்றித் தவிக்கும் விவசாயிகள் கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகளுக்கும் ஆளாகியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதுடன் வீதி விபத்துகளும் நாளாந்தம் அதிகரித்துள்ளன. இவற்றுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும்.

ஆகவே, இவ்விடயம் குறித்து கால்நடை உரிமையாளர்களுக்கு தெளிவூட்டப்பட வேண்டும். இதனையும் மீறிச் செயற்படும் கால்நடை உரிமையாளர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியேற்படும் என்றார்.

# மாகாண சபைக்கு எதிராக கூட்டமைப்பின் சதி




**மாகாண சபை அதன் பிரதான நோக்கமான அரசியல் தீர்வை நோக்கி நகர வேண்டும் என்ற இந்திய அழுத்தத்தைத் தவிர்க்க வேண்டுமானால் மாகாண சபை செயற்படாதிருக்க வேண்டும். அதையே முதலமைச்சரும் மற்றையோரும் செய்கின்றார்கள். சாதாரணமான முறையில் இதைச் செய்தால் மக்களுக்குச் சந்தேகம் ஏற்படலாமென்பதால் சில நொண்டிச் சாட்டுகளைச் சொல்கின்றார்கள்... ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குக் கூட்டமைப்பின் தனித்தலைமைக்கு இடமளிக்காதது சதி என்று இவர்கள் கூறுவார்களேயானால் அது இவர்களின் முட்டாள் தனத்தையே வெளிப்படுத்தும். நாட்டின் மற்றைய மாவட்டங்களில் எது நடைமுறையில் இருக்கின்றதோ அதுதான் இங்கேயும் நடைமுறையில் இருக்கவேண்டும்.**

சங்கர சிவன்

வடமாகாண சபைத் தேர்தல் களத்தில் கால்பதித்த வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களிடம் ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்தது. அபிவிருத்தி, அரசியல் தீர்வு என்று நம்பிக்கையூட்டும் பல பேச்சுக்களைக் கூட்டமைப்புத் தலைவர்கள் பேசினார்கள். நீதியரசர் விக்னேஸ்வரன் தன்னால் எல்லாம் முடியும் என்ற தோரணையில் பேசினார். இராணுவத்தை வெளியேற்றப் போவதாகச் சொன்னார். இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றப்போவதாகச் சொன்னார். வெளிநாட்டு உதவி பெற்று அபிவிருத்திப் புரட்சியை நடத்தப்போவதாகக் கூறினார். இன்னும் என்னென்னவோ வாக்குறுதிகள் அளித்தார். மக்கள் அவற்றை முழுக்க முழுக்க நம்பினார்கள். ஆனால், இன்று எல்லாம் தலைகீழாகவே நடக்கின்றன.

முதலமைச்சரும் மாகாண அமைச்சர்களும் ஊடகப் பிரபல்யம் தேடுவதில் காலத்தைக் கழிக்கின்றார்களே . யொழிய இவர்களுக்கு என்ன நடந்தது என்று மக்கள் கேட்கும் அளவுக்கு எல்லாமே ஸ்தம்பித்துப்போய் இருக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிஜ முகத்தை அறிந்தவர்களுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கான பதில் புரியும். வடமாகாண சபை கூட்டமைப்பின் அதிகாரத்துக்குள் இருப்பதால் கூட்டமைப்பின் அரசியல் பாதையிலிருந்து மாகாண சபை விலகிச் செல்ல முடியாது. எத்தனை ஜாம்பவான்கள் வந்தாலும் அந்தப் பாதையிலேயே பயணிக்க வேண்டும்.

நீதியரசர் விக்னேஸ்வரன் கூட்டமைப்பு அரசியலுக்குப் புதியவர். கூட்டமைப்பின் நிஜமுகம் பற்றிய புரிகை ஆரம்பத்தில் அவரிடம் இருக்கவில்லை. அதனால் சில காரியங்களைச் சுயமாகச் செய்து கடுங்கோட்பாட்டாளர்களின் கண்டனத்துக்கு உள்ளாகினார். ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தது அவற்றுள் ஒன்று. மாதமொரு தடவை அமைச்சரவைக் கூட்டங்களில் மற்றைய முதலமைச்சர்களுடன் தானும் கலந்துகொள்வதாக ஜனாதிபதிக்கு ஒப்புதல் அளித்தது மற்றது. இதற்குக் கடுங்கோட்பாட்டாளர்கள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்ததால் இரண்டு நாட்கள் ஆஸ்பத்திரியில் படுத்து நிலைமையைச் சமாளித்தார். இப்படியான சம்பவங்களுக்கூடாகக் கூட்டமைப்பின் நிஜமுகத்தைச் சரியாகப் புரிந்துகொண்ட முதலமைச்சர் கடுங்கோட்பாட்டு அலையுடன் சேர்ந்து நீந்துவதுதான் தனது அரசியல் இருப்புக்கு உத்தரவாதம் என்பதை உணர்ந்து அந்த வழியில் கச்சிதமாகச் செயற்படுகின்றார்.

தமிழ் மக்களின் நலனுக்காகவே எல்லாம் செய்வதாகத் தோற்றப்பாடு காட்டி அவர்களின் வாக்குகளைப் பெறுவதும் பின்னர் தமிழ் மக்களுடைய பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாகச் செயற்படுவதும்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிஜமுகம். இனப்பிரச்சினைக்குச் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டபோது அதை முறியடிக்கும் ஒப்பந்தத்தை ஏற்று உருவாகியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. சந்திரிகாவின் அரசாங்கம் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தது. எப்படியாவது அதை முறியடிக்க விரும்பிய புலிகள் தமிழ்க் கட்சிகளை ஒன்று சேர்த்துக் கூட்டமைப்பை உருவாக்கி அந்தப் பொறுப்பை அவர்களிடம் கையளித்தார்கள். கூட்டமைப்பு அதைச் செய்து முடித்தது. அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததை இன்று வரை இவர்களால் நியாயப்படுத்த முடியவில்லை. அன்று அந்தத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தவர்களே இன்றைய அரசாங்கம் அந்தத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அண்மையில் கோரிக்கை விடுத்தார்கள். தமிழ் மக்களின் நலனைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் வீம்புக்காகவே சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை எதிர்த்தார்கள் என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

புலிகளுடன் ஒட்டிக்கொண்டிருந்த காலத்தில் வெளிப்படையாகவே அரசியல் தீர்வுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்த கூட்டமைப்புத் தலைவர்கள் புலிகளின் தோல்விக்குப் பின் புலிசார்ப்புப் புலம்பெயர் அமைப்புகளின் செல்வாக்கு வட்டத்துக்குள் சென்று அவர்களின் தப்புத் தாளத்துக்கு ஆடுகின்றார்கள். இந்தப் புலம் பெயர் அமைப்புகள் கூட்டமைப்புக்குத் தாராளமாக நிதியுதவி வழங்குகின்றன. கூட்டமைப்பின் செல்வழியையும் இப்புலம் பெயர் அமைப்புகளே தீர்மானிக்கின்றன. தனிநாட்டு மாயையிலிருந்து இன்னும் விடுபடாத இப்புலம் பெயர் அமைப்புகள் இலங்கையில் அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதை விரும்பவில்லை. எப்போதோ ஒரு நாள் தமிழீழம் அமையும் என்ற கற்பனைக் கனவிலே மிதக்கின்ற புலம்பெயர் அமைப்புகளின் ஆணையை நிறைவேற்றும் முகவராகவே கூட்டமைப்பு இப்போது செயற்படுகின்றது. இணையத்தளமொன்றுக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் வழங்கிய நேர்காணலை இங்கு நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும். கூட்டமைப்பு விரும்பும் அரசியல் தீர்வை அரசாங்கம் முன்வைக்காதிருக்கும் வரை புலம்பெயர் சமூகத்தின் கோரிக்கைகளை நிராகரிக்க வேண்டிய தேவை கூட்டமைப்புக்கு இல்லை என்று அந்த நேர்காணலில் அவர் கூறினார். அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதைத் தவிர்க் கும் வகையில் கூட்டமைப்பு செயற்படுவது புலம்பெயர் சமூகத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காகவே.

பின்வரும் வழிமுறைகளைக் கையாள்வதன் மூலம் அரசியல் தீர்வுக்குச் சாதகமற்ற சூழ்நிலையைக் கூட்டமைப்பு உருவாக்குகின்றது. அரசியல் தீர்வுக்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்காமல் அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது, அரசியல் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரிப்பது, நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைப்பது, தீவிரமான எதிர்ப்பு அரசியலை முன்னெடுப்பது.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளின் தீர்வுக்காகச் செயற்படுவதாக வெளித் தோற்றத்துக்குக் காட்டிக்கொண்டு பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்குத் தடையாகச் செயற்படுகின்ற கூட்டமைப்புத் தலைமை, மாகாண சபையையும் அந்தப் பாதையிலேயே வழி நடத்துகின்றது. இது இயல்பானதே. தலைதானே வாலை ஆட்டும்.

இனப்பிரச்சினைக்கு மாத்திரமின்றி மற்றைய பிரச்சினைகளுக்கும் தீர்வு இல்லாதிருப்பதையே தனிநாடு பற்றிக் கனவு காணும் புலம்பெயர் அமைப்புகள் விரும்புகின்றன. இந்த விருப்பத்தை மாகாண சபை நிறைவேற்ற வேண்டும் என்பதே கூட்டமைப்பை ஊட்டி வளர்க்கும் புலம் பெயர் அமைப்புகளின் எதிர்பார்ப்பு.

மாகாண சபை முறைப்படி செயற்படும் பட்சத்தில் அரசியல் தீர்வை நோக்கிய நகர்வைத் தவிர்ப்பது அவ்வளவு இலகுவானதாக இருக்காது. மாகாண சபை அதன் பிரதான நோக்கமான அரசியல் தீர்வை நோக்கி நகர வேண்டும் என்ற இந்திய அழுத்தத்தைத் தவிர்க்க வேண்டுமானால் மாகாண சபை செயற்படாதிருக்க வேண்டும். அதையே முதலமைச்சரும் மற்றையோரும் செய்கின்றார்கள். சாதாரணமான முறையில் இதைச் செய்தால் மக்களுக்குச் சந்தேகம் ஏற்படலாமென்பதால் சில நொண்டிச் சாட்டுகளைச் சொல்கின்றார்கள். தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள் மாகாண சபையை முடக்குவதற்குச் சதி செய்வதாக முதலமைச்சரும் வடமாகாண சபையைச் செயற்படவிடாமல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஆளுநரும் தடுக்கின்றார்கள் என்று சுரேஷ் பிரேமச்சந்திரனும் மொட்டையாகக் கூறினாலும் என்ன விதத்தில் சதி செய்கின்றார்கள் என்றோ எந்தெந்த வேலைகளைச் செய்யவிடாமல் தடுக்கின்றார்கள் என்றோ சொல்லவில்லை.


ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்குக் கூட்டமைப்பின் தனித்தலைமைக்கு இடமளிக்காதது சதி என்று இவர்கள் கூறுவார்களேயானால் அது இவர்களின் முட்டாள் தனத்தையே வெளிப்படுத்தும். நாட்டின் மற்றைய மாவட்டங்களில் எது நடைமுறையில் இருக்கின்றதோ அதுதான் இங்கேயும் நடைமுறையில் இருக்கவேண்டும். மாகாண சபை அதன் சட்டபூர்வ அதிகாரங்களைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுப்பதை ஒருவரும் தடுக்கவில்லையே.

புலம் பெயர் அமைப்புகளின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதும் அதற்காக மாகாண சபையின் செயற்பாட்டை முடக்க வேண்டும் என்பதும் உங்கள் விருப்பம். அதை மக்கள் அறியக் கூடாது என்பதற்காகச் சதி என்றும் தடை என்றும் கரடி விடுகின்றீர்கள். என்ன மாதிரியான சதி என்றோ எப்படியான தடை என்றோ உங்களால் கூற முடியாது என்பதால் மற்றவர்கள் மீது பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டைக் கூறி மக்களின் தலையில் மிளகாய் அரைக்கப் பார்க்கின்றீர்கள். ●

**தமிழ் மக்களின் நலனுக்காகவே எல்லாம் செய்வதாகத் தோற்றப்பாடு காட்டி அவர்களின் வாக்குகளைப் பெறுவதும் பின்னர் தமிழ் மக்களுடைய பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாகச் செயற்படுவதும் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிஜமுகம். சந்திரிகாவின் அரசாங்கத்தால் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டபோது அதை முறியடிக்கும் ஒப்பந்தத்தை ஏற்று உருவாகியதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததை இன்று வரை இவர்களால் நியாயப்படுத்த முடியவில்லை. அன்று அந்தத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தவர்களே இன்றைய அரசாங்கம் அந்தத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அண்மையில் கோரிக்கை விடுத்தார்கள். தமிழ் மக்களின் நலனைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் வீம்புக்காகவே சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தை எதிர்த்தார்கள் என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.**

# மனிதத்தை மதித்த புனிதர்

# மண்டேலா மறைவுக்கு அஞ்சலி



(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின ஜனாதிபதியான நெல்சன் மண்டேலாவின் மறைவிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மகிந்த விடுத்துள்ள அந்த அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மறைந்த நெல்சன் மண்டேலா உலகளவில் அழிக்கமுடியாத புகழ்வாய்ந்த புனிதராவார். 1994 ஆம் ஆண்டில் தென்னாபிரிக்கா, பொதுநலவாயத்தில் மீண்டும் இணைந்ததனால் பொதுநலவாயம் மேலும் வளப்படுத்தப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

மறைந்த தலைவர் விட்டுச்சென்ற முதுசம் விஞ்சமுடியாததென என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மறைந்த மண்டேலா, நிகழ்கால வரலாற்றில் மனித கௌரவம் மற்றும் உன்னத தலைமைத்துவ பண்பு ஆகியவற்றின் உருவகமாக திகழ்ந்தார்.

இவர் வெறுப்புக்குரிய நிறவெறி ஆட்சியை முடிவுக்கு கொண்டுவருவதற்காக தனது இலட்சிய வாழ்வின் பெரும் பகுதியை சிறையிலேயே கழித்தார்.

இவர் தென்னாபிரிக்க மக்களுக்கு மட்டுமன்றி தென்னாபிரிக்க மக்கள் யாவருக்கும் புதிய வாழ்வு, கௌரவம், சுதந்திரம் என்பவற்றை கொண்டு வந்தார்.



இந்த மாமனிதனுக்கு நாம் செலுத்தக்கூடிய அதிகூடிய அஞ்சலி அவர் நேசித்த ஜனநாயகம், பல்வகைமை, ஒற்றுமை என்பவற்றை பாதுகாப்பதாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அனுதாப செய்தி தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சுமாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு அமைச்சுக்கு சர்வதேச தரச்சான்றிதழ்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு சிறப்பான சேவைகளையும் திட்டமிட்ட முகாமைத்துவத்தையும் வழங்கியமைக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சுக்கு ISO 9001: 2008 சர்வதேச தரச் சான்றிதழ் கிடைத்துள்ளது.

இவ்வாறானதொரு சர்வதேச தரச சான்றிதழ் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சுக்கு கிடைத்தது இதுவே முதல் முறையாகும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா இச்சான்றிதழை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கடந்த வியாழக்கிழமை கையளித்தார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் அமைச்சின் செயலாளர் நிஸ்ஸங்க விஜயரத்னவும் கலந்துகொண்டார்.



## பாடசாலைகளில் அரசியல் வேண்டாம்

## கல்வி அமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைகளு க்குச் சென்று அரசியல் பேசுவதை அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் அவ்வாறு செய்யும் படசத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்குச் செல்லும் அரசியல்வாதிகள் "அரசியல செருப்புக்களை" கழற்றி வைத்துவிட்டு அங்கு செல்லவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். பாடசாலைகளுக்கு செல்பவர்கள் அரசியல் பேசுவதை தவிர்த்து கல்வி சார்ந்த விடயங்களை பேசவேண்டும் என்றும் தெரிவித்தார். வரவு செலவுத் திட்டததில் கல்வி, உயர் கல்வி, கல்விச் சேவைகள் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

பாடசாலைகளுக்குச் சென்று அரசியல்வாதிகள் அரசியல் பேசுவதை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனறு நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் தனது உரையின் போது கல்வி அமைச்சரிடம் விடுத்த கோரிக்கைக்கு குறுக்கிட்டு பதிலளிக்கும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குழுக்களின் பிரதித் தலைவர் இங்கு முன்வைத்த கோரிக்கை பின்வருமாறு, பாடசாலைகளுக்கு சென்று மாணவர்களை திசைத் திருப்பும் வகையில் விசமத்தனமான கருத்துக்களை அரசியல்வாதிகள் தெரிவித்து வருவதை தடுக்க வேண்டும்.

இவ்வாறான அரசியல் செயறபாடுகளை தவிர்க்க அரசாங்கம், கல்வி அமைச்சு விஷேட சுற்று நிருபம் ஊடாக உரிய நடவடிககை எடுக்கவேண்டும். அப்போது தான் மாணவர்களின் மனதை திசைத்திருப்புவதை தவிர்க்க முடியும் என்றார்.

## மிதிபலகைப் பயணம் மரணத்தில் முடிந்தது

(கொழும்பு)

மட்டக்களப்பு, கிரான்குளத்தில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்தின் வாயிலிலிருந்து தவறிவிழுந்த பேருந்து சாரதி ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் களுவாஞ்சிக்குடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்துகொண்டிருந்த பேருந்தின் வாயிற் படியில் நின்றபடி வந்துகொணடிருந்த மற்றுமொரு பேருந்தின் சாரதி ஒருவரே இவ்வாறு தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பேருந்தின் நின்றபடி வெற்றிலை மென்றுகொண்டிருந்த சாரதியான செட்டிபாளையத்தைச் சேர்ந்த சுரேந்திரன் (44) என்பவர், ஓடிக்கொண்டிருந்த பேருந்தின் சாரதியிடம் தண்ணீர் வாங்கி வாய் கொப்பளிக்க (வாய் கழுவ) முயன்ற வேளையிலேயே தவறி விழுந்து மரணமாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்து தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாட்டுக்கு பொருந்தாத கல்விக்கொள்கை

## அரசு மீது சாடுகிறது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

நாட்டுக்கு உகந்த சரியான கல்விக் கொள்கை ஒன்றைப் பின்பற்ற அரசு தவறிவிட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி அரசு மீது குற்றம் சாட்டியுள்ளது.

உயர்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ அரசு மீது மேற்படி கண்டணத்தைத் தெரிவித்தார்.

கல்வி, உயர்கல்வி, தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி ஆகிய அமைச்சுகளுக்கான வரவு-செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

தொடக்கத்தில் விவாதத்தை ஆரம் பித்துவைத்து உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம், கல்வித் துறை மீது கடும் விமர்சனங்களை முன் வைத்தார்.

இதனையடுத்து இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க, சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான வழிமுறைகளின் முக்கியத்துவம் குறித்து கருத்துகளை தெரிவித்தார். இதேவேளை, கிழக்குப் பல் கலைக்கழகத்திற்கு என சட்டபீடம் ஒன்று உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா வலியுறுத்தினார்.

கல்விக்காக 125 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதாக அரசாங்கம் கூறுகின்ற போதிலும், அது சந்தேகத்திற்குரிய விடயமாகும் என்பதுடன் சிறந்த கல்விக் கொள்கையொன்று காணப்படவில்லை என்றும் இதன்போது ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

## பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் செய்தால் கடும் நடவடிக்கை தொடரும்

### வதந்தி பரப்புவோருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் வதநதகளைப் பரப்புவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் தகவல்களை வெளியிடும் தனிப்பட்ட நபர்கள் மற்றும் குழுக்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலோ அல்லது அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையிலோ செயற்படும் தனிப்பட்ட நபர்கள் அல்லது குழுக்களை கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, புலனாய்வுப் பிரிவினருக்கு இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

தெற்கு கடும்போக்குடைய சிங்கள அமைப்புக்கள் அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மற்றும் முஸ்லிம் கடும்போக்கு அமைப்புக்கள் தேச விரோத வதந்திகளை பரப்பி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புக்கள் புலிகளின் பெயரில் கடந்த காலங்களில் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நெடுஞ்சாலைகளில் அவதானம் தேவை தவறு செய்தால் சட்டம் பாயும்

### உஷார் நிலையில் பொலிஸார்

(கொழும்பு)

ஒருவரின் கவனயீனம் மற்றும உதாசீனம் காரணமாக ஏற்படும் விபத்துக்களால் இன்னொருவர் மரணமடைய நேரிடுமாயின் மரணத்துக்கு காரணமானவருக்கு எதிரான சட்டங்கள் இனிமேல் கடுமையாக செயற்படுததப்படுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

உதாரணமாக வழியிலிருந்த கல்லொன்றில் தடக்கி வீழுந்த ஒருவர் மண்டை சிதறி உயிரிழபபாராயின் அவர் தடக்கி விழும் வகையில் கல்லை பாதையில் போட்டவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் விளக்கமளித்துள்ளது.

நிறுவனங்களுக்கும் இந்த நடைமுறை பொருந்தும் என்று கூறியுள்ள பொலிஸ் தலைமையகம், உதாரணமாக வீதி திருத்த வேலையின்போது ஒரு கிடங்கு இருப்பதை தடுப்பு மூலம் காட்டத் தவறி, அதனுள் ஒரு குழந்தை விழுந்து இறக்குமாயின் அதற்கு பொறுப்பான நிறுவனம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தச் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவருமாறு சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்னவினால் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித்ரோஹன கூறினார்.

## அதிக தரத்துடன் பெற்றோல் பாவனைக்கு வருகிறது

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒக்ரேன் 90 பெற்றோலுக்கு பதிலாக ஒக்ரேன் 92 பெற்றோல் நாடுபூராகவும் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டன் 90 பெற்றோலைவிட ஒக்ரேன் 92 பெற்றோல் தரமானது எனினும் தற்போது ஒக்டேன் 90 விற்பனை செய்யப்படும் அதே விலையில் இதனையும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.





யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழாவின் முதலாம்நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் உரையாற்றுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (105)

# பிரதேசத்தின் கலைகள் வளர்வதற்கு கலைஞர்களின் பங்களிப்பு அவசியமானது

## யாழ்.மாவட்டமேலதிக அரசாங்க அதிபர்



(வடமராட்சி)

ஒவ்வொரு பிரதேசத்திலும் கலைகள், பண்பாடுகள் தனித் தனியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. அந்தவகையில் இக் கலைகள் மற்றும் பண்பாடுகளை மேலும் வளர்த்தெடுப்பதற்கு உள்ளூர் கலைஞர்கள் பெரும் பங்காற்ற வேண்டும் என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசார பேரவை நடத்திய கலை, இலக்கி விழாவும் திருவுடையாள் - 4 மலர் வெளியீடும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கரவெட்டி பிரதேசசெயலர் எஸ்.சிவஸ்ரீ தலைமையில் மூத்தவிநாயகர் ஆலயமண்டபத்தில் நடை பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பாரம்பரிய கலைகளை வளர்த்தெடுப்பதில் கரவெட்டி பிரதேச கலைஞர்களின் பங்கு காத்திர□□மானதாகும். இக்கலைஞர்களின் நாடகங்கள், நூல்கள் என்பன இதற்கு உதாரணமாக கூறலாம்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுபவர்கள் தமது பிரதேசத்தின் கலைகளை வளர்ப்பதற்குரிய பணிகளை ஆற்ற வேண்டும், இதற்கு கலைஞர்களின் ஒன்றிணைந்த செயற்பாடும் அவசியமானதாகும். அந்த வகையில் பிரதேச கலைநிகழ்வுகளில் கூடுதலாக மாணவர்களின் பங்களிப்பே அதிகம் காணப்படும். ஆனால் இக்கலாசார விழாவில் மாணவர்கள் மட்டுமல்லாது கலைஞர்கள், சனசமூக நிலையத்தினர், சமூக சேவை அலுவலர்கள், கிராம அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை மகிழ்ச்சியளிக்கிறது. இதேபோன்று ஏனைய பிரதேசங்களிலும் கலைகள் வளர்த்தெடுக்கப்படவேண்டும் என அவர் தெரிவித்தார். (109)

# முழுநிலா சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

(வடமராட்சி)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாத முழுநிலா நாளில் மலரவுள்ள முழுநிலா முத்து சஞ்சிகைக்கு சகல பாடசாலை கல்வி சமூகத்தினரிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

மலர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் தரமான ஆக்கங்கள் முழுநிலா சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் எனவும் ஆக்கங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ மாகாணக்கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம், உரும்பிராய் வீதி, மருதனார்மடம் என்ற முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்பவேண்டும் எனவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் முழுநிலா சஞ்சிகைக்கான ஆக்கம் எனக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும் என வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (109)

# புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

மாபெரும் புத்தகக்கண்காட்சியும் மலிவு விற்பனையும் இன்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா, சிறப்பு விருந்தினராக யாழ்.உயரப்புலம் மெ.மி.வித்தியாலய அதிபர் கு.திலீபன், யாழ்.மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் பா.ரமேஷ் கண்ணா, 'நமது முரசொலி' பிரதம ஆசிரியர் ஏ.ரஞ்சித்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக மல்லாவி ஹற்றன் நஷனல் வங்கி திட்ட நிறைவேற்று அதிகாரி யோ.பாலகுமார் கொக்குவில் இலங்கை வங்கி முகாமையாளர் பி.செல்வகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மாற்றுத்திறனாளிகளின் மேம்பாடு கரைச்சியில் செயலமர்வு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் சமூகசேவைகள் அமைசசின் சி.பி.ஆர்.திட்டத்தின் கீழ் செயலமர்வு ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சி.பி.ஆர். தொண்டர்கள், மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனுள்ள பிள்ளைகளைக் கொண்ட பெற்றோர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வளவாளர்களாக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், மாவட்ட உளவள அதிகாரி தேவராஜா துஸ்யந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாற்றுத் திறனாளிகளின் மேம்பாடு தொடர்பான கருத்துக்கள் கலந்துரையாடல்கள் இச் செயலமர்வில் இடம் பெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் ஏனைய 3 பிரதேச செயலர் பிரிவுகளில் இச் செயலமர்வு நடைபெற்றுள்ளது. சமூக சேவைகள் அமைச்சு தலா 20, 000 ரூபா வீதம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஒதுக்கியுள்ளது. (90)

# பரிசளிப்பு வைபவம்

(கரணவாய்)

கரவை சிந்தாமணி விநாயகர் முன்பள்ளியின் கலைவிழா இன்று காலை 9 மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மார்க்கண்டு சிவபாலன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் கி.கிருஷ்ணாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பரிசில்களை திருமதி.செல்வராணி சிவபாலன் வழங்கிக்கௌரவிப்பார். (18)

## முரசின் இன்றைய பலன்



(08.12.2013 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 22 ஆம் திகதி.
விநாயக சஷ்டி விரதம். அவிட்ட நட்சத்திரம் மு.இ. 9.16 வரை.
பின் சதயம். மரணயோகம்/ஷஷ்டி.
இராகுகாலம் 04.47 - 06.17 வரை. சுபநேரம் 09.17 - 10.47 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பழைய நண்பரின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் நிறைதல், தேக நலத்தில் அதிகூடிய கவனமெடுத்தல. |
| ரிஷபம் | சட்டவிரோத செயற்பாட்டில் மாட்டிக்கொள்ளல், அயலவரிடையே சமூகமான உறவைப் பேணல். |
| மிதுனம் | சகோதரர் மத்தியில் நிலவிய சொத்துப் பிரச்சினை இணக்கப்பாட்டை அடைதல், தகுந்த சிகிச்சையால் நோய் குணமடைதல். |
| கடகம் | சக ஊழியர்களைத் தட்டிக் கொடுத்ததால் சுலபமாக காரியங்கள் முடிவடைதல், கவனமாக செயற்பட்டதால் தீங்கு ஏற்படுவதை தவிர்தல். |
| சிம்மம் | குடும்ப மகிழ்வுதக்க வைத்திருப்பதை உணராமை, நீரிழிவு ஏற்படுவதை தவிர்க்க முன் எச்சரிக்கையாக நடந்து கொள்ளல். |
| கன்னி | நீண்டநாள் கவலைக்கு முடிவு கிட்டும், கடன் பிரச்சினையை தீர்க்க உதவி கிடைத்தல். |
| துலாம் | விவாகப் பேச்சு முறிவடையும், எதிர்பாராத செயற்பாடுகள் நன்மையளிக்கும். |
| விருச்சிகம் | நீண்ட நாள் நட்பு கடன் பிரச்சினையால் முறுகல் ஏற்பட்டு உறவு கைவிடப்படல், பிறரின் விமர்சனங்களைப் பொருட்படுத்தாது செயற்படல். |
| தனுசு | விவாகரத்து வழக்கில் இருபகுதியினரும் இணங்கிப்போக சம்மதித்தால் பிரச்சினை விலகி விடல், புதிய உத்தியால் கையாண்டு விற்பனையில் சாதனை. |
| மகரம் | ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளால் மனம் வருந்துதல், நீண்ட நாள் பிரச்சினை சுமுகமுடிவிற்கு வந்ததால் மகிழ்வு. |
| கும்பம் | புதிய தொழில் நுட்பமுறைகள் பயில பங்கு கொள்ளல், மனைவியின் வார்த்தையை உதாசீனஞ் செய்ததால் பயண அசௌகரியம் ஏற்படல். |
| மீனம் | வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் மாறியதால் நிலுவையைப் பெறுவதில் இடர்ப்பாடு, தரங்குறைந்த பொருளைப் பெற்று கவலைப்படல். |


# ஜோன்சன் வேகத்தில் சுருண்டது இங்கிலாந்து



ஜோன்சனின் வேகத்திற்கு தாக்குப் பிடிக்க முடியாமல் திணறிய இங்கிலாந்து அணி 172 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான வரலாற்று சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. முதல் இனிங்ஸிற்காக ஒரு விக்கெட்டை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை இங்கிலாந்து அணி தொடர்ந்தது. இதில் கார்பெறி, ரூத் நிதானமாக ஆட முற்பட்டனர். இருப்பினும் ரூத், நட்சத்திர வீரர் கெவின் பீற்றர்சன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த இயன் பெல், கார்பெறி இணை மிகவும் நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க முற்பட்டது. இந்த ஜோடி 45 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ஒரு முனையில் இயல் பெல் போராடியபோதும், மறுமுனையில் ஜோன்சனின் வேகத்திற்கு இங்கிலாந்து வீரர்கள் இரையாகிக்கொண்டிருந்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் கார்பெறி 144 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் அடங்கலாக 60, ரூத் 80 பந்துகளை எதிர்கொண்டு 15 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது இறுதி வரை போராடிய இயன் பெல் 106 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 72 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜோன்சன் 17.2 ஓவர்கள் பந்து வீசி ஓட்டு ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 40 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

398 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் அவுஸ்ரேலிய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை மூன்று விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டேவிட் வோர்னர் 117 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 83, எஸ். ஸ்மித் 23 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுள்ளனர். பந்து வீச்சில் அண்டர்சன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும். அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 570/9

# மண்டேலாவுக்கு விளையாட்டு உலகம் அஞ்சலி




(டுபாய்)

தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா மறைவுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை, சர்வதேச ஒலிம்பிக் சபை உட்பட பல்வேறு சர்வதேச விளையாட்டு அமைப்புகளும், பிரபல வீரர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இனவேறுபாடு காரணமாக ஒலிம்பிக்,கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்க தென்னாபிரிக்காவுக்குத் தடை விதிக்கப்பட்டது. பின் மீண்டும் விளையாட்டு உலகில் தென்னாபிரிக்கா காலடி எடுத்து வைக்க உறுதுணையாக இருந்தார் மண்டேலா. தென்னாபிரிக்காவில் 1995 இல் ரக்பி உலக கோப்பை, 1996இல் ஆபிரிக்க கால்பந்து போட்டி, 2010இல் பிபா உலக கோப்பைக் கால்பந்துத் தொடர் போன்ற மெகா விளையாட்டுகள் வெற்றிகரமாக நடாத்த முக்கிய காரணமாக இருந்தார்.

இந்நிலையில் மண்டேலா மறைவிற்கு விளையாட்டு உலகம் இரங்கல் தெரிவித்துள்ளது. அதன் விபரம் வருமாறு:

செப் பிளேட்டர்: சர்வதேச கால்பந்து கூட்டமைப்புத் தலைவர் (பிபா) மண்டேலா நம் காலத்தில் வாழ்ந்த மனித நேயமிக்க தலைவர். நாங்கள் இரு வரும் கால்பந்து ஆட்டத்தின் மூலம் மக்களை ஒருங்கிணைப்பது, நட்புறவு ஏற்படுத்துவது குறித்து பேசியுள்ளோம்.

தோமஸ் பெக் (சர்வதேச ஒலிம்பிக் சபைத் தலைவர்): மண்டேலா காட்டிய பாதையை பின் தொடர்வோம். ஐ.ஓ.சி., கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப் படும்.

அலன் ஐசக் (சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர்) மண்டேலா எதிர்த்து போராடுவதின் அடையாளம். தனது கொள்கைகளை ஒரு போதும் சமரசம் செய்து கொள்ளாதவர். நீதியிலும், சம உரிமையிலும் நம்பிக்கை உடையவர்.

டைகர் வூஸ் (அமெரிக்கா கோல்ப் வீரர்.): தென்னாபிரிக்காவில் நிலவிய இனவெறியை எதிர்த்துப் போராடிய நாயகன் மண்டேலா. இவ்வளவு புரட்சி செய்து, இவரைப் போல அடக்கமாக உள்ள மனிதரை பார்த்தது கிடையாது.

ஹமில்டன் (இங்கிலாந்து பார்முலா-1 வீரர் ): இவரை நேரில் சந்தித்ததுதான் என் வாழ்வின் மிகப்பெரிய நாளாக கருதுகிறேன். நான் பார்த்ததில்தான், இவர் தான் சிறந்த மனிதர் என்ற பேச்சுக்கு மாற்றுக் கருத்து கிடையாது.

முகமது அலி (அமெரிக்க குத்துச் சண்டை ஜாம்பவான்): நாம் அனைவரும் சகோதரர்கள் என்பதை புரிய வைத்தார். இவர் யாரையும் பழி வாங்கும் எண் ணம் இல்லாத, புத்துணர்வு உள்ள ஒரு ஆன்மா.

சச்சின் (இந்திய அணியின் முன் னாள் வீரர்): ஊக்கம் தரும் மாமனிதர் மண்டேலா. இவரை சந்தித்த காலத்தை மறக்க முடியாது. இவர் என்றும் என் மனதில் நிலைத்து இருப்பார்.

டேவிட் பெக்காம் (இங்கிலாந்து முன்னாள் கால்பந்து வீரர்): தென்னாபிரிக்க மக்களை நினைத்துத்தான் வருந்துகிறேன். தைரியமான, உண்மையான நாயகனை இழந்துவிட்டோம். இவருக்கு மரியாதை செலுத்துகிறேன்.

இதேவேளை,மண்டேலா இறப்பை அடுத்து, தென்னாபிரிக்காவில் துக்கம் அனுசரிக்கப்படுகிறது. இதனால், இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தொடர் பாதிக்கப்படாது. இந்தப் போட்டியை மண்டேலாவுக்கு அர்ப்பணிப்ப தாக, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தெரி வித்தது. இதற்கிடையே, ஆஷஸ் தொட ரின் 2ஆவது டெஸ்ட் போட்டி அடிலெய்ட் மைதா னத்தில் நடைபெற்று வருகின்றது. அவுஸ்ரேலியா, இங்கிலாந்து வீரர்கள் சில நிமிடம், மண்டேலாவுக்கு மௌன அஞ்சலி செலுத்தினர். அதே போல, மேற்கிந்தியத்தீவுகள் - நியூசிலாந்து அணிகளின் வீரர்களும் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

# மே.தீவுக்கு வாழ்வளித்த வருண பகவான்
# முதல் டெஸ்ட் சமநிலை

(டினிடின்)

நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான டினிடின் டெஸ்டின் கடைசி நாள் ஆட்டம் மழையால் பாதியில் கைவிடப்பட்டதால், போட்டி சமநிலையானது.

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகின்றது. முதல் டெஸ்ட் டுனிடினில் நேற்று நிறைவடைந்தது. முதல் இனிங்ஸில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்கு 609 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்தியது. முதல் இனிங்ஸில் 213 ஓட்டங்களுக்கு சுருண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணி பாலோ-ஓன் பெற்றது. இரண்டாவது இனிங்ஸில் எழுச்சி கண்ட மேற்கிந்தியத்தீவு அணிக்கு டரன் பிராவோ இரட்டைச் சதம் அடித்து கைகொடுக்க, 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக்கெட்டுக்கு 443 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் நேற்றைய ஐந்தாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 507 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டரன் பிராவோ 416 பந்துகளை எதிர்கொண்டு 31 பவுண்டரிகள் அடங்கலாக 218, டரன் சமி 145 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 80 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரிம் சௌத்தி இரண்டு வெக்னர் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 112 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றவேளை மழையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக போட்டி தொடர முடியாத நிலையில் கைவிடப்பட்டது. இதன் காரணமாக இப்போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவுக்கு வந்தது. இதில் ரெய்லர் 16, சி. அண்டர்சன் 20 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் ஸ்லிங்போர்ட் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக டரன் பிராவோ தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி வெலிங்டனில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்று 2ஆவது ஒரு நாள்

தென்னாபிரிக்க, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி இன்றைய தினம் டர்பனில் நடைபெறவுள்ளது. இத்தொடரின் முதல்போட்டியில்வெற்றிபெற்றதென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# உலக கிண்ண கால்பந்து; வெளியானது போட்டி அட்டவணை

(ரியோ டி ஜெனிரோ)

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பிபா) உலகக் கிண்ணக் கால்பந்து தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டது. இதில், டி பிரிவில் இங்கிலாந்து அணி முன்னாள் சம்பியன்களான உருகுவே, இத்தாலி அணிகளுடன் கடின பிரிவில் இடம் பெற்றுள்ளது. எனவே டி பிரிவு குரூப் ஓப் டெத் என அழைக்கப்படுகிறது.

பிரேசிலில், ஆண்களுக்கான 20ஆவது பிபா உலக கிண்ணக் கால்பந்து தொடர் அடுத்த ஆண்டு ஜூன் 12ஆம் திகதி முதல் யூலை 13ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில், ஸ்பெயின், ஜேர்மனி, இங்கிலாந்து உள்ளிட்ட 32 அணிகள் விளையாடுகின்றன. பிரேசில் அணியை தவிர மற்ற அணிகள், தகுதிச் சுற்றின் மூலம் இடம்பிடித்தன. இறுதிப், அரையிறுதி உட்பட மொத்தம் 64 போட்டிகள், பிரேசிலில் உள்ள 12 முக்கிய நகரங்களில் நடத்தப்படவுள்ளது. தவிர முதன்முறையாக உலக கோப்பை தொடரில் கோல் லைன் டெக்னாலஜி பயன்படுத்தப்படவுள்ளது.


மொத்தமுள்ள 32 அணிகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு முதல் சுற்றில் விளையாடும். ஒவ்வொரு பிரிவிலும் முதலிரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள், இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும். இதில் காலிறுதிக்கு முந்தைய சுற்று, காலிறுதி, அரையிறுதி, இறுதிப் போட்டிகள் விலகல் முறையில் நடைபெறும். இறுதிப் போட்டி அடுத்த ஆண்டு யூலை 13ஆம் திகதி ரியோ டி ஜெனிரோவில் நடைபெறும்.

இத்தொடருக்கான அட்டவணை நேற்று முன்தினம் பிரேசிலில் வெளியிடப்பட்டது. இதில் ஒவ்வொரு அணிகளும் எந்த பிரிவில் இடம் பெறும் என்பதை குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டன. இதன்படி போட்டியை நடத்தும் பிரேசில் அணிக்கு ஏ பிரிவில் இடம்கிடைத்தது. பிரேசில் அணியுடன் ஏ பிரிவில் குரோஷியா, மெக்சிக்கோ, கமரூன் அணிகளும் இடம் பிடித்துள்ளன. அடுத்த ஆண்டு யூன் 12ஆம் திகதி நடைபெறவுள்ள தொடரின் முதல் போட்டியில் பிரேசில், குரோஷியா அணிகள் மோதவுள்ளன.

நடப்பு சம்பியன் ஸ்பெயின் அணி பி பிரிவில் இடம் பிடித்தது: இம்முறை ஸ்பெயின் அணி நடப்பு சம்பியன் அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்ள கடுமையாக போராட வேண்டும். ஏனெனில் ஸ்பெயின் அணி, மூன்று முறை (1974,






78, 2010) இறுதிப் போட்டி வரை முன்னேறிய நெதர்லாந்து, அவுஸ்ரேலியா, சிலி அணிகளுடன் இடம் பெற்றுள்ளது. கடந்த 2010இல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெயினிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுக்க நெதர்லாந்து அணிக்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. டி பிரிவில் இங்கிலாந்து அணி, முன்னாள் உலக சம்பியன்களான இத்தாலி, உருகுவே அணிகளுடன் இடம் பெற்றுள்ளது. எனவே இங்கிலாந்து அணிக்கு இம்முறை கடின சுற்றாக அமைந்துள்ளது. இதனால் டி பிரிவு குரூப் ஓப் டெத் என அழைக்கப்படுகிறது. இப்பிரிவில் காஸ்டா ரிகா அணியும் உள்ளது. ஜேர்மனி, போர்த்துக்கல் அணிகள் ஜி பிரிவில் உள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் இடம் பெற்றுள்ள அணிகளின் விபரம்:
ஏ பிரிவு: பிரேசில், குரோஷியா, மெக்சிக்கோ, கமரூன்
பி பிரிவு: ஸ்பெயின், நெதர்லாந்து, சிலி, அவுஸ்ரேலியா
சி பிரிவு: கொலம்பியா, கிரீஸ், ஐவரி கோஸ்ட், ஜப்பான்
டி பிரிவு: உருகுவே, காஸ்டா ரிகா, இங்கிலாந்து, இத்தாலி
இ பிரிவு: சுவிஸ், எகுவடார், பிரான்ஸ், ஹோண்ட்ராஸ்
எப் பிரிவு: ஆர்ஜென்ரீனா, போஸ்னியா, ஈரான், நைஜீரியா
ஜி பிரிவு: ஜேர்மனி, போர்த்துக்கல், கானா, அமெரிக்கா
எச் பிரிவு: பெல்ஜியம், அல்ஜிரியா, ரஷ்யா, தென்கொரியா

# கோட்ட மட்ட கால்பந்து யூனியன் கல்லூரி சம்பியன்

(அளவெட்டி)

தெல்லிப்பளைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டியில் யூனியன் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

தெல்லிப்பளைக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும், மகாஜனக் கல்லூரி அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இதேவேளை, 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதி போட்டி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நிறைவுற்றதும் நடைபெறும் எனப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(93)

## விரைவில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள பிரிவு மூன்றின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் விரைவில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டித் தொடருக்கான அணிகள் நிரலிடப்பட்டுள்ள நிலையில் க.பொ.த. சாதாரண பரீட்சைகள் நிறைவுற்றதும் இப்போட்டிகள் நடைபெறும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் யாழ். மாவட்ட பாடசாலைகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. இதில் சென். பற்றிக்ஸ், சென். ஜோண்ஸ், யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உள்ளிட்ட அணிகள் மோதவுள்ளன.

இதேவேளை, இப்போட்டித் தொடர் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிக்கப்படவேண்டும் எனவும் இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)




வடமாகாண கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்ற மஞ்சிக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடரின் ஆண்கள் பிரிவில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட மன்னார் சென். மேரிஸ் அணியைக் காணலாம். அண்மையில் மன்னார் பொது விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மன்னார் சென். ஆன்ஸ் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (93)

## உலகக் கிண்ண கால்பந்து பரிசுத் தொகை அறிவிப்பு

2014ஆம் ஆண்டு பிரேசிலில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள உலகக் கிண்ண கால்பந்து போட்டித் தொடருக்கான வெற்றிப் பணப் பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளின் போது, பரிசுத் தொகையாக 420 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டன.

எனினும் இந்த முறை அதனை 37 சதவீதத்தால் அதிகரித்து, 576 மில்லியன் டொலர்கள் என்று சர்வதேச கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதன்படி உலகக் கிண்ணத்தொடரை கைப்பற்றும் அணிக்கு 35 மில்லியன் டொலர்களும், இரண்டாமிடத்தைபெறும் அணிக்கு 25 மில்லியன் டொலர் களும் வழங்கப்படும்.

இதனை விட வழமைபோன்று தங்கக் காலணி, தங்கக் கையுறை போன்ற விருதுகளும் வழங்கப்படும் எனவும் சர்வதேச கால்பந்துச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

# அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்து இறுதியில் வேலணை, ஊர்காவற்றுறை

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு வேலணை மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச அணிகள் தகுதி பெற்றுள்ளன.

யாழ். மாவட்ட ஊழியர் நலன்புரி சங்கத்தினால் பிரதேச செயலக பணியாளர்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் யாழ். அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணியும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இறுதியில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக அணி 16-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வேலணைப் பிரதேச செயலக அணியும், சங்கானைப் பிரதேச செயலக அணியும் மோதின. இப்போட்டி விறுவிறுப்பு மிக்கதாக நடைபெற்றது. இதில் வேலணைப் பிரதேச செயலக அணி 16-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மற்றும் பூப்பந்தாட்டப் போட்டிகளே நடைபெறவுள்ளதாகவும் இப்போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள அணிகள் தொடர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கால்பந்து, மென்பந்து கிரிக்கெட், கரப்பந்தாட்டம் உள்ளிட்ட பெருவிளையாட்டுப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் இப்போட்டித் தொடரின் நிறைவு நாளில் நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு மிகவும் சிறப்பான முறையில் இந்தப் போட்டிகளை நடாத்தவுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (எஸ்.பி.)






மட்டுவில் மத்தி சோமஸ்கந்தா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் முன்பள்ளி முன்றலில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வுகள் பல நடைபெற்றன. இப்போட்டியில் பங்குகொண்ட அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டது. சி. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. நிமலதாசன் கலந்துகொண்டு சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், பெரியோர், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்துகொண்டு சிறார்களை உற்சாகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (இ)

நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எல்.ரீ.ரீ.ஈ யின் ஆவிகளை உயிர்ப்பிக்க முயலுகிறதா?

- என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.



சிறீதரன் எல்.ரீ.ரீ.ஈ யினையும் அதன் தலைவர் பிரபாகரனையும் மகிமைப்படுத்திப் பேசியது, தங்கள் கட்சியின் குரலாக அல்ல என்றும் அதை தமது கட்சியின் கொள்கையாக கருத வேண்டாம் என்று ரி.என்.ஏ யின் தலைவர், ஆர்.சம்பந்தன் தெளிவுபடுத்தியுள்ளார்.

எனினும் போருக்கு பிந்தைய காலத்தைக் காட்டிலும், பொது நலவாய அரச தலைவர்களின் மாநாட்டுக்கு பிந்தைய இசைவான காலப்பகுதியில், எல்.ரீ.ரீ.ஈ யின் ஆவிகளுக்கு உயிரூட்டும் சாத்தியத்தை அதனால் நிறுத்திவிட முடியாது.

ஒரு கடும் போக்காளரும், மிதவாத ரி.என்.ஏ தலைவரை எப்போதும் நேருக்கு நேர் காண்பதை தவிர்ப்பவருமான சிறீதரனின் நாடாளுமன்ற பேச்சு, பிரபாகரனின் பிறந்த நாளுடன் - எல்.ரீ.ரீ.ஈயின் வருடாந்த மாவீரர் தினத்தை அனுட்டிக்கும் நிகழ்வுடன் - ஒத்துப்போகிறது. நீண்ட காலத்துக்குப் பிறகு ஒருமுறை, ஆளும் ஸ்ரீ.ல.சு.க மற்றும் எதிர்க் கட்சியான ஐ.தே.க என்பனவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதைக் கண்டிப்பதில் ஒற்றுமையாக இருந்துள்ளார்கள். ஊடகங்கள் தெரிவிக்கும் தகவல்களின்படி அவரது தயாரிக்கப்பட்ட உரையை முற்றாக பேசி முடிப்பதற்கு அவர்கள் அனுமதித்துள்ளார்கள்.

சிறீதரன், பிரபாகரனை, "தமிழ் மக்களுக்காக வீரச் சாவடைந்த ஒரு விடு தலைப் போராளி" என குறிப்பிட்டிருப்பதை "அது கட்சியின் வரிகள் அல்ல" என்று சம்பந்தன் சொல்லியுள்ளார். "தேர்தல்களின்பொழுது அந்த வரிகளை சிறீதரன் பிரசாரம் செய்யவில்லை அது கட்சியின் வரிகள் அல்ல. அதை நாங்கள் அனுமதித்திருக்க மாட்டோம்" என்பதையும் சம்பந்தன் நினைவு படுத்தியுள்ளார்.

இருந்தாலும் விவேகமுள்ள ஒரு தலைவர் அந்த நாளில் அப்படி பேசுவதை அதைரியப் படுத்தியிருக்க வேண்டும்.

எனினும் இதில் சிறீதரன் தனியாக இல்லை. ரி.என்.ஏயின் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஒரு மிதமான வழியில் இதை முன்னெடுப்பதற்காக, எல்.ரீ.ரீ.ஈ யின் மாவீரர் தினத்துக்கு ஒத்து வரத்தக்கதாக அந்நாளில் கல்வி அமைச்சு வளாகத்தில் ஒரு மர நடுகையை நடத்தியுள்ளார். இந்த தற்செயலான ஒற்றுமையை புலிகள் நோக்கத்துக்கு ஆதரவு வழங்கும் தமிழ்த்தேசிய வாத குழுக்களால், அந்த நாளை நினைவுபடுத்தும் வகையில் மரம் நாட்டும் வைபவம் மாகாணம் முழுவதும் நடத்தப்பட்டது. அரசாங்கமும் ஆயுதப் படைகளும் அன்றைய தினத்தில் பொது இடங்களில் பொது வைபவங்களை நடத்துவதை தடை செய்வதாக அறிவித்ததன் பின்னர் அவர்கள் தனியார் காணிகளை அதற்காக தெரிவு செய்தார்கள்.

சுயாதீனமான அவரது நடவடிக்கையையும் மற்றும் அந்த விழாவையும் விக்னேஸ்வரன் தடுத்திருக்க முடியும் மற்றும் தடுத்திருக்க வேண்டும். குறிப்பாக கட்சியின் கொள்கை என்னவென்று தெரிந்ததின் பின்னர், குறைந்தது அவரது அவதானிக்கும் தகுதிகளின் ஒரு பகுதி தீவிர கவனத்தை பெற்றிருக்கும்போது.

பொதுவாக ரி.என்.ஏ யின் தலைமை, இல்லாவிட்டால் முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் ஒன்றில் பொது நலவாய மாநாட்டுக்கு பிந்தைய இசைவான காலப்பகுதியின் நடவடிக்கையிலிருந்து, அல்லது அவர்களுக்குரிய பொறுப்பின் பங்கிலிருந்து தப்பிவிட முடியாது.

குறிப்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இல்லாவிட்டால் பெரும்பான்மை தமிழ்ச்சமூகம் என்பன இனப்பிரச்சினையில் தாங்கள் எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும். மாறாக உறுதியான மற்றும் வெளிப்படையான அறிவிப்புகள் இல்லாதபோது, அவர்களது எதிர்ப்புகள் விரைவிலேயே நம்பகத்தன்மை

# பிழையின்றித் தமிழ் 60

**தெரிந்தும் தெரியாமலும்:**

தெரிந்து செய்யும் பிழைகள், தெரியாமல் செய்யும் பிழைகள் என இரண்டு உண்டு. நம் வாழ்வில் நம் செயல்களில் நேர்கின்ற பிழைகள் மட்டுமல்ல.

மொழியை எழுதுவதிலும் இப்பிழைகள் இரண்டும் நேர்கின்றன.

கணபதி என்பது ஒருவர் பெயர் (வடமொழிப் பெயர்தான்). இதனை ஆங்கிலத்தில் மிடுக்காக புயலியவா - கணபத் என்று சொல்லத் தொடங்கினர். இப்போது "கணபத்"தும் போய் (பத்துக் கண்கள் அல்ல) "கண்பட்" ஆகிவிட்டதே! இதுதான்
கொடுமை; இது தெரிந்தே செய்யும் பிழை.

இவ்வாறே பழனிச்சாமி என்ற அழகிய தமிழ்ப் பெயரை "alanisamy என்று ஆங்கிலத்தில் எழுதி அதிலுள்ள Palani என்பதையும் சுருக்கி Pal - பால் என்றாக்கி, பால் சகோதரர்கள் 'Pal Brothers' என்று வணிக நிலையத்துக்குப் பெயர் வைக்கிறார்கள். மனம் தாங்காத இப்பிழையும் தாங்கித்தான் வாழுகிறோம்.

**முயல்வுகள் என்பது சரியா?**

முனைவர் பட்டம் பெற்ற ஒருவரின் நல்ல நூலில் இந்தச் சொல் காணப்படுகிறது. பார்த்த - படித்தவுடனே நம் மனத்தில் இது பிழை என்ற எண்ணம் உண்டாதல் இயற்கை. முயற்சிகள் என்றுதான் நாம் எழுதி வருகிறோம். இது புதிதாக இருக்கிறதே!

முயற்சி ஒரு தொழில் பெயர். பயிற்சி, தளர்ச்சி, வளர்ச்சி என்பன காண்க. மகிழ்ச்சி என்பதும் இதுபோன்ற ஒரு சொல்லே. இதன் பொருள் என்ன? மகிழ்வடைதல் என்பதுதானே? மகிழ்வடைதலில் உள்ள முதற்சொல் மகிழ்வு. அடைதல் வந்து சேர்ந்து மகிழ்வடைதல் என்றாகிறது. மகிழ்ச்சியடைதல் என்பதும், மகிழ்வடைதல் என்பதும் ஒரே பொருளைத்தான் தருகின்றன.

மகிழ்ச்சி - மகிழ்வு, தளர்ச்சி - தளர்வு, அயர்ச்சி - அயர்வு. இச்சொற்களைப் போலவே முயற்சி - முயல்வு எனக் கொண்டால், "எல்லா முயல்வுகளும்" என்னும் எழுத்தில் பிழையில்லை என அறியலாம்.




முயற்சிகள் என்று மட்டுமே எழுதியும் பேசியும் கேட்டும் பழக்கப்பட்ட நமக்கு முயல்வுகள் புதிதாகத் தோன்றுவது இயல்பே.

விடம் (விஷம்) என்பதும், நச்சு என்பதும் ஒன்றே. குழந்தையாய் இருந்த கண்ணனைக் கொல்ல பூதகி எனும் அரக்கி முலைப்பால் கொடுத்தாள், கண்ணனோ அவள் உயிரையே உறிஞ்சி எடுத்துவிட்டான். இந்நிகழ்வை ஆழ்வார்ப் பாசுரம் "பேய்ச்சி விட நச்சு முலை" எனும் தொடரால் குறிக்கிறது.' விட-முலை எனினும் நச்சு முலை எனினும் ஒன்றே! பின் ஏன் இரண்டு சொற்களும் வந்தன? விட என்பதற்கு விடம் எனக் கொள்ளாது பேய்ச்சி (உயிரை)விட - நச்சு முலை - என்று
பொருள் காண வேண்டும்.

"குஞ்சியழகும்
கொடுந்தானைக் கோட்டழகும்"
என்று தொடங்கும் பாடலை நாமறிவோம்.

"வண்டார் இருங்குஞ்சி
மாலை தன் வார் குழல் மேல்
கொண்டாள் தழீஇக்
கொழுநன்பால்"

என்பது சிலப்பதிகாரம். குஞ்சி (குடுமி) ஆடவர்க்குரியது. குழல் (கூந்தல்) மகளிர்க்குரியது.

சிலம்பு விற்க மதுரைக்குப் புறப்பட்ட கோவலனைக் கண்ணகி தழுவினாள். கோவலன் தன் குடுமியில் (குஞ்சி) சூட்டியிருந்த மாலையினை எடுத்துக் கண்ணகியின் கூந்தலில் (குழல்) சூட்டிப் பிரியா விடைபெற்றான். மிக விளக்கமாக எழுத வேண்டிய இடம் இது. இலக்கியக் கட்டுரை ஆகிவிடும் ஆதலின், வேண்டிய செய்தியை மட்டும் காண்போம்.

குழந்தைக் கண்ணனைப் பாடும் ஆழ்வார், "மை வண்ண நறுங் குஞ்சி குழல் பின் தாழ" என்று பாடியுள்ளார். இங்கே குஞ்சி, குழல் இரண்டு சொற்களும் ஏன் வந்தன? எப்படி இது பொருத்தமாகும்? இரண்டு சொற்களும் ஒன்றையே குறிப்பதாயினும் சிறிய பொருள் வேறுபாடுண்டு.

குஞ்சி - முன் குடுமி, குழல் - பின் தொங்கும் கூந்தல்.

குழந்தைக் கண்ணனுக்கு முன் குடுமியும் உண்டு. பின்னால் தொங்கும் கூந்தலும் உண்டு என்று பொருள் தரும் வண்ணம் மேற்கண்ட பாடல் வரி சிறப்படைகிறது.

முன்னாளில் ஆண்களும் குடுமி வைத்திருந்தனர் என்பதைச் "சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்னும் பழமொழி கொண்டு அறியலாம்.

நம் பழந்தமிழ்ச் சொற்கள் பல வடமொழியில் இணைந்துள்ளன. (வடசொல் தமிழில் கலந்தது போலவே) மதங்கம் என்னும் பழந்தமிழ்ச் சொல்லின் திரிபே மிருதங்கம். அவ்வாறே மெது, மென்மை மெத்து மெத்தென்று என்பன எல்லாம் தூய தமிழ்ச் சொற்கள். தமிழின் மெது என்பதே "மிருது" எனத் திரிந்தது. மனம் என்னும் தூய தமிழ்ச் சொல்லிலிருந்தே மனஸ், மனசு, மனது என்பன தோன்றின. துறக்கம் என்னும் தூய தமிழ்ச்சொல்லே சொர்க்கம் என்றாயிற்று என மொழி நூல் அறிஞர் உரைப்பர்.

அற்றதாக மாறிவிடும்-பொதுமக்கள் மத்தியிலும் கூட

அரசாங்கமும் நாட்டின் இனப்பிரச்சினை திரும்பவும் பழைய நிலைக்கே கீழ் நோக்கிச் சரியும்படியாக தோன்றியுள்ள அச்சுறுத்தலை, நாட்டின் உள்ளேயேயும் மற்றும் வெளியேயும் உள்ள மற்றவர்கள் மீது பழிபோடுவதால் நிறுத்திவிட முடியாது. அது முன்னைக் காட்டிலும் அதிகம் கடினமானதாக இருக்கும். பிரித்தானிய மற்றும் கனேடிய பிரதம மந்திரிகள் போல, அவைகள் எப்போதும் முனைகளை கூர்மையாக்கவே விரும்புகின்றன. அதற்கான குறுக்கு வழியாக அவர்கள் கொழும்பு தலைமையை பார்க்கிறார்கள்.

சிலருக்கு அது எல்.ரீ.ரீ.ஈயின் ஆன்மா. மற்றும் சிலருக்கு அது எல்.ரீ.ரீ.ஈயின் ஆவி. இலங்கை ஒரு செங்குத்தான மலையுச்சியின் விளிம்பிலிருந்து கீழே நழுவிக் கொண்டிருக்கிறது. யாருமே அதை கவனிக்க விரும்பவில்லை. எவரும் அதை ஒப்புக்கொள்ளவும் போவதில்லை. மேற்கு ஒரு அரசியல் தீர்வைப் பற்றி பேசுவதில்லை. அவர்கள் கிட்டத்தட்ட பிரத்தியேகமாக மையப்படுத்தியிருப்பது யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றியே.

ரி.என்.ஏ யும் ஒரு அரசியல் தீர்மானம் பற்றி மட்டுமே பேசுகிறது. இரு தரப்புமே அரசியல் தீர்வு பற்றிக் குறிப்பிடவில்லை.

தமிழ் தேசியவாத புலம்பெயர் அமைப்பு அதற்கு தேவையானது எது மற்றும் அதை எப்படி அடைவது என்பதை நன்கறியும். சர்வதேச சமூகத்தால் அதே போல் கூறமுடியாது. அவை இரண்டுக்கும் இடையில் அகப்பட்டுள்ள ரி.என்.ஏ கூட இப்போது ஏறக்குறைய பிரத்தியேகமான முறையில் மனித உரிமைகள் மீறல்கள், இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் சிங்கள குடியேற்றம் பற்றி பேசுகிறது. அரசாங்கம் அரசியல் தீர்வு அல்லது வடக்கிலிருந்து இராணுவத்தை மீளப் பெறுதல் என்பன பற்றி தீவிரமாகப் பேசுவதை நிறுத்திவிட்டது அல்லது குறைந்த பட்சம் அது இருக்க வேண்டிய தீவிரத்தன்மையிலிருந்து இறங்கிவிட்டது. மாறாக் அரசாங்க தலைவர்கள் கண்ணாடி வீட்டுக்குள்ளிருந்து கல் வீசுபவர்களைப் பற்றியே அதிகம் பேசும் வழியில் செல்கிறார்கள். இலங்கையின்மீது கல்வீசுபவர்கள் விடயத்தில் அவர்கள் சொல்வது சரியானது.

இலங்கை இன்னமும் நலிந்த மற்றும் உடையக்கூடிய கண்ணாடி வீட்டுக்கு உள்ளேயே இருக்கிறது. மத்தியோ அல்லது மாநிலமோ, சிங்களவர்களோ அல்லது தமிழர்களோ, ஆயுதப் படையினரோ அல்லது அரசியல் கட்சிகளோ, அதற்குள் இருந்து கொண்டு அதன்மீதே கல் வீசக் கூடாது. அதையும் விட மோசமானது என்னவென்றால் நீங்கள் மற்றவர்களுக்கு கற்களை வழங்க முடியாது, அல்லது அவர்களின் தோள்கள்மீது அமர்ந்தபடியே உங்களால் கல் வீச முடியுமா? இலங்கை கடந்த காலத்தில் அதை செய்தது. எதிர்காலத்தில் அதனால் இனிமேலும் அதனை தாங்கிக்கொள்ள முடியாது.




# கடவுளே.. அப்படியேதும் நேரக்கூடாது...

- சுரேஷ் கண்ணன் -

கடவுளே.. அப்படியேதும் நேரக்கூடாது என்று எனக்கு நம்பிக்கையில்லா விட்டாலும் பிரார்த்தனை செய்து கொள்கிறேன்.

"தலைமுறைகள்" என்கிற திரைப்படத்தில் பாலுமகேந்திரா நடிக்கிறார் என்கிற செய்தியைக் கேள்விப்பட்டதிலிருந்தே ஏதோ சங்கடமொன்று வயிற்றைப் பிசைகிறது.


தமிழ் சினிமாவில் மிகச்சிறந்த இயக்குநர்களாக நான் கருதுவதும் மதிப்பதும் இருவரைத்தான். மகேந்திரன் மற்றும் பாலுமகேந்திரா. தமிழ் சினிமா இயங்கும் அபத்தமான சூழலின் சாத்தியத்திற்குள் அதன் எல்லைக்குள் மிகச்சிறந்த இயக்கத்தினை தந்தவர்கள்.

இயக்குநர்கள், நடிகர்களாக உருமாறுவதில் எனக்கொன்றும் பிரச்சினையில்லை. சேரன், மிஷ்கின் போன்றவர்கள் ஓரளவிற்கு சகிக்கும்படியே நடித்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் இதற்கு முந்தைய தலைமுறையினரான பாலச்சந்தர் மற்றும் பாரதிராஜா ஆகிய இருவர் மீதும் கொண்டிருந்த மதிப்பு அவர்கள் நடிப்பதாகச் சொல்லி கொடுமைப்படுத்திய பிறகு சற்று இறக்கம் கண்டதென்னமோ உண்மை.

பாரதிராஜா "கல்லுக்குள் ஈரம்" எனும் திரைப்படத்தில் ஒரு திரைப்பட இயக்குநராகவே நடித்திருக்கிறார். அதில் ஒரு காட்சியில், ஒரு நபருக்கு பிச்சைக்காரனாக நடிக்க, நடிப்பு சொல்லித்தரும் காட்சியில் அப்போது திரையரங்கமே உணர்ச்சிவசப்பட்ட காலமுண்டு. இப்போது அதை நினைக்கும் போது காமெடியாக இருக்கிறது. மிகையான, செயற்கையான நடிப்பு அது. தாவணிக் கனவுகளிலும் கூட இயக்குநராக நடித்திருந்தார். பிறகு ஆய்த எழுத்து - இதைக் கூட சகித்துக் கொள்ளலாம். சமீபத்திய திரைப்படமான "பாண்டிய நாட்டில்"".... அய்யகோ...

இவர் இப்படியென்றால் பாலச்சந்தர் இன்னுமொரு கொடுமை. தொலைக்காட்சித் தொடர் ஒன்றிலும் "பார்த்தாலே பரவசம்" என்கிற திரைப்படத்திலும் (சின்னப்பா தேவரை இமிடேட் செய்திருப்பார்) இவர் நடித்தவைகளை நினைத்தால் இப்போது கூட நெஞ்சு பதறுகிறது. இப்படி இவர்கள் இரண்டு பேருமே சேர்ந்து கொடுமை செய்த திரைப்படமான "ரெட்டச்சுழி"யை நினைத்தால்....

அந்த வரிசையில் "தலைமுறைகள்" திரைப்படத்தில் நான் மிகவும் மதிக்கும் பாலுமகேந்திரா ஏதும் சொதப்பிவிடக்கூடாதே..என்று கவலையாயிருக்கிறது. எப்போதுமே தொப்பி அணிந்திருப்பதுதான் பாலுமகேந்திராவின் அடையாளம். இந்தப் படத்திற்காக அந்த நிரந்தர அடையாளத்தைக் கூட அவர் துறக்க துணிந்திருப்பது பாராட்டத்தக்கது. இன்னும் சில நாட்களில் அவர் நடித்திருப்பது பற்றி தெரிந்து விடும். காத்திருக்கிறேன்.



# பிரபஞ்சன் பதில்

**கேள்வி**: "தமிழ்ச் சூழலில் முழுநேர எழுத்தாளராக இருப்பது சரியா... தவறா?"

எழுத்தாளர் பிரபஞ்சன் பதில்: "அது ஒரு தற்கொலை முயற்சி! மக்கள், இன்னும் இலக்கியத்தையும் இலக்கிய ஆசிரியரையும் அடையாளம் காணவில்லை. நாலாம்

தரங்களில் அவர்கள் திருப்தி காண்கிறார்கள்.

அவர்களின் சேகரிப்பில் பாரதி, புதுமைப்பித்தன் முதல் இன்றைய நல்ல எழுத்தாளர்கள் இல்லை. என்னிடம் வருகிற இளைஞர்கள் பலரை ஊருக்கு அனுப்பி இருக்கிறேன். "அவமானப்படாமல், சோற்றுக்கும் ஒரு கூரைக்கும் ஏதோ ஒரு வேலையைச் செய்துகொண்டு, பிறகு இலக்கியம் படையுங்கள்"

என்றே சொல்கிறேன். வாழ்க்கைக்கு உத்தரவாதம் தேடிக்கொள்ளாதவர்கள், நல்ல இலக்கியத்தைக் குறைவாகவே படைக்க முடியும். எதன் பொருட்டு பட்டினியையும் அவமானத்தையும் எழுத்தாளன் ஏற்கிறானோ, அந்தப் படைப்புக் காரியமே சாத்தியமாகாமல் போகும். முத்தம் கொடுத்துப் பசியாற முடியாது பசியோடு காதலிக்கவும் முடியாது.

ஒரு நல்ல எழுத்தாளன், பட்டினியால் சாவது இல்லை; அவமானத்தால் சாகடிக்கப்படுகிறான். தமிழ்ச் சூழல் இப்போது பயங்கரமானதாக மாறிக்கொண்டிருக்கிறது. சாதி, குழு மனப்பான்மை, துரோகம், புறக்கணிப்பு போன்றவை, படைப்புலகில் இன்று கொசுக்கள் போல அடர்ந்து இருக்கின்றன. கவசங்களோடும் ஆயுதங்களோடும் வாழவேண்டிய காலம் சமீபித்துக் கொண்டிருக்கிறது!"

**(நன்றி: ஆனந்த விகடன்)**



# இருக்கும் நன்மதிப்பையும் இழந்து கொண்டிருக்கும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்!!

சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலமது. நல்லிணக்கம் சம்பந்தமான கூட்டமொன்று கொழும்பில் சந்திரிகா தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. மேடையிலே அனுரா பண்டார நாயக்க உட்பட அமைச்சர்கள் வீற்றிருந்தார்கள். முன்வரிசையில் அமர்ந்திருந்த சம்பந்தன் அவர்களுக்கு தண்ணீர் தேவைப்பட்டது. மேடையில் அமர்ந்திருந்த அனுரா பண்டாரநாயக்க இறங்கி வந்து தண்ணீர் போத்தலை சம்பந்தனிடம் கொடுத்தார். சம்பந்தனின் வேண்டுகோளுக்கிணங்க புலிகளிடம் இருந்து சம்பந்தனை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக சந்திரிகா அம்மையார் அவர்கள் குண்டு துளைக்க முடியாத கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான வாகனத்தை கொடுத்தார். பாதுகாப்புக்காக ஆரம்பத்தில் கொடுத்த அதிரடிப்படையினர் போதாது என்று சம்பந்தன் கூற மேலதிகமாக பத்து அதிரடிப்படையினரை கொடுத்தார்.

மேற்கூறியன போன்று எத்தனையோ தனிப்பட்ட சலுகைகளையெல்லாம் எல்லாம் சம்பந்தனுக்கும் ஏனைய தமிழ் தலைவர்களுக்கும் சிங்கள தரப்பினர் செய்திருக்கின்றார்கள். காரணம் ஒருகாலத்தில் இவர்கள் மேல் இருந்த நன்மதிப்பின் காரணமாக. இனப்பிரச்சினை தீர்வுக்கு இவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கையின் காரணமாக.

ஆனால் அன்று தமிழ் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் மீது இருந்த நன்மதிப்பு இன்று சிங்கள தலைவர்கள் மத்தியில் அறவே இல்லாமல் போய்விட்டது. இவர்களை சந்தர்ப்பவாதிகளாகவே பார்க்கிறார்கள்.

இனப்பிரச்சினையானது தீராப்பிரச்சினையாக இருக்கவேண்டும் என்பதையே தமிழ் தலைமை விரும்புகின்றது. எனவே இனப்பிரச்சினை சம்பந்தமாக இந்த தலைமையுடன் பேசிப்பயனில்லை என்னும் முடிவிற்கும் வந்துவிட்டார்களோ என்று எண்ண தோன்றுகின்றது. இதனால் தான் தற்போதைய வரவு செலவு திட்ட விவாதத்தில் சம்பந்தன் உரையாற்றும் போது அவரை பேசவே முடியாதவாறு "முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்ட போது கூட்டமைப்பினரின் நிலைப்பாடு, புலிகளுடனான அவர்களின் உறவு" சம்பந்தமான கேள்விக்கணைகளை தொடுத்து குழப்பிக்கொண்டிருந்தார்கள்.

முன்னரும் கூட்டமைப்பினர் பேசும் போது கூச்சல்கள் இடம்பெற்றிருந்த போதிலும் சம்பந்தனின் அரசியல் வரலாற்றில் இதுவரை காலமும் இப்படியாக ஒரு அவமானம் ஏற்பட்டதாக தெரியவில்லை. தங்களுள் ஒருவரான சிறீதரனின் கருத்து அவரின் தனிப்பட்ட கருத்தேயொழிய கட்சியின் கருத்தல்ல எனவும் தனது பேச்சை தொடர விடுமாறு சபாநாயகரை கெஞ்சும் நிலை சம்பந்தனுக்கு ஏற்பட்டிருந்தது.

தெற்கிலே மட்டும் இவர்களது சாயம் வெளுக்கவில்லை. வட, கிழக்கிலும் இவர்களை நம்பி வாக்களித்த மக்கள் மத்தியில் இதே நிலைதான். அண்மையில் பிரித்தானிய பிரதமர் கமரூன் யாழ்ப்பாணம் சென்றிருந்த வேளை யாழ் நூலகத்திற்கு முன்னால் காணாமல் போனவர்களின் பெற்றோர், உறவினர்கள். தங்களது காணாமல் போனோரின் பட்டியலை கமரூனிடம் கையளித்து சில நிமிடங்கள்ஆவது கதைத்தால் "சர்வதேசம்" மூலம் தங்களுக்கு தீர்வு கிட்டும் என எண்ணி கால் கடுக்க காத்து நின்றனர். உண்மையிலேயே சம்பந்தன் அவர்கள் நினைத்திருந்தால், கமரூன் அவர்களை சில நிமிடங்களாவது காணாமல் போனோரின் உறவுகளை சந்திக்க வைத்திருக்க முடியும்.

ஆனால் காணாமல் போனோர் விவகாரத்தை தமது அரசியல் இலாபத்திற்கு மட்டும் பயன்படுத்தும் சம்பந்தன் தனது சொகுசு வாகனத்தில் அங்கிருந்து புறப்பட முயன்றபோது அங்கு நின்றவர்களால் அவரது வாகனம் சுற்றி வளைக்கப்பட்டது. ஆத்திரமடைந்த மக்கள் "வெயிலுக்குள் நாங்கள் குளிரூட்டப்பட்ட வாகனத்தினில் நீங்கள், எங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் என்னாச்சு" போன்ற கோஷங்களை எழுப்பி வாகனத்தை நகர விடாது தடுக்க முற்பட்டனர். சம்பந்தனின் பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியுடன் சம்பந்தன் தப்பி சென்றுவிட்டார். மக்கள் வெளிப்படையாக தமது அதிருப்தியை காட்ட முற்பட்டுவிட்டார்கள் என்பதால் கிலி கொண்ட சம்பந்தன் கால் விறைக்க விறைக்க வலி வடக்கு போராட்டத்தில் கலந்து கொண்டார்.

"தோன்றில் புகழோடு தோன்றுகின்றோமோ இல்லையோ அவமரியாதையுடன் சிவபதமடையாதிருப்பது நன்று".

- பொன்.வாதவூரன் கட்டுரையிலிருந்து.



அம்பன் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றபோது. விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் அதிபர் வி.பரமேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினரான வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ். நந்தகுமார் மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (10)

# நோயாளியின் போக்குவரத்துக்கு பிரயாண செலவுக் கொடுப்பனவு

## சமூக சேவை திணைக்களம் ஏற்பாடு

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் பாரிய நோய்ச் சிகிச்சைக்காக அரச மருத்துவமனைக்கு தூர இடங்களுக்கு செல்லும் வறிய நிலையிலுள்ள 8 பேருக்கு பிரயாணச் செலவுக் கொடுப்பனவாக தலா 1500 ரூபா வீதம் வழங்க நிதி கிடைக்கப் பெற்றுள்ளது.

பிரதேச செயலர் கோபால பிள்ளை நாகேஸ்வரனின் கோரிகைக்கு அமைய சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் பேரில் வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் நிதியை வழங்கியுள்ளது.

பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி கிராம அலுவலர்களின் ஒத்துழைப்புடன் தகுதி வாய்ந்த பயனாளிகளை தெரிவு செய்தார். கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, கண்டி போன்ற வைத்தியசாலைகளுக்கு செல்லும் வறியவர்கள் இவ் உதவித் தொகையைப் பெற முடியும்.

வைத்தியசாலையில் கிளினிக் செல்லும் குறிப்புக் கொப்பியின் பிரதியுடன் உதவிப் பணப் படிவத்தினை. பூரணப்படுத்தி கிராம சேவகரின் சிபார்சு பெற்று, தமது நிலையை விளக்கும் கோரிக்கைக் கடிதத்தில் கிராம சேவகரின் சிபாரிசு பெற்று உதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

கிளிநொச்சியில் தூர கிராமங்களிலிருந்து கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு வருபவர்களும் இவ் உதவிப் பணத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (90)

# சமூகசேவை அலுவலர்களுக்கு டிப்ளோமா கற்கை நெறி

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சு சமூகஅபிவிருத்தி உத்தியோகத்தராக பிரதேச செயலகப்பிரிவுகளில் கடமையாற்றுவோருக்கு தேசிய சமூக அபிவிருத்தி டிப்ளோமா கற்கை நெறியைப் பயிலுவதற்கான வசதியைச் செய்து கொடுக்க முன்வந்துள்ளது.

இதற்கான அறிவுறுத்தல் கடிதங்களை உரிய உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலர்கள் ஊடாக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் சமூக சேவைகள் அமைச்சின் உத்தியோகத்தர்களின் வாண்மை விருத்தியின் ஊடாக சமூகத்திற்கு நல்ல சேவையை வழங்க வேண்டுமென்ற நோக்குடன் இத்திட்டத்தை செயற்படுத்தி உள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

கற்கை நெறிக்கான கட்டணமான 45000 ரூபாவையும் அமைச்சு உத்தியோகத்தர்களுக்காக செலுத்த முன்வந்துள்ளது. இக் கற்கை நெறியைப் பயிலுவது தொடர்பான அனுமதி பிரதேச செயலர்களினால் வழங்கப்பட உள்ளது. (90)

# யாழ். முஸ்லிம் சம்மேளனத்தின் வருடாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் வருடாந்தம் நடாத்திவரும் யாழ். முஸ்லிம் ஒன்று கூடல் எதிர்வரும் ஜனவரி மாதம் 11,12, 13 ஆகிய தினங்களில் நடைபெறவிருக்கின்றன.

இந்நாளில் நாட்டின் பல பாகங்களிலும் குடியேறிவாழும் யாழ். முஸ்லிம்கள் ஒன்றுகூடி தமது உறவுகளை பலப்படுத்த வேண்டுமென்ற நோக்கோடு இத்திட்டம் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

மீள்குடியேறியுள்ள மக்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்கும், மீள்குடியேறும் மக்களுக்கு உற்சாகம் அளிப்பதற்கும் வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தினங்களில் கலை நிகழ்சிகளும், விளையாட்டுப் போட்டிகளும், விருந்துபசாரமும் நடைபெறவிருக்கின்றன. அனைத்து யாழ். முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பு அளித்து வருகைதருமாறு யாழ். முஸ்லிம் சம்மேளனம் அழைப்பு விடுக்கின்றன. (105)

# இலஞ்சம் ஊழலுக்கு எதிராக விழிப்புணர்வுப் பேரணி

(மானிப்பாய்)

டிரான்ஸ்பரன்சி இன்ரநஷனல் மற்றும் ஸ்ரீலங்கா யூத் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான சர்வதேசதினம் கொழும்பில் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சர்வதேச தினத்திற்கு அமைவாகவே இந் நிகழ்வானது இலங்கையிலும் நடைபெறவுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டும், ஊழலுக்கு எதிராக இளைஞர்களின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதுடன், நாளைய இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கு ஊழலை ஒழிக்குமாறு இன்றைய தலைவர்களிடம் வேண்டுகோள் விடுப்பதும் இப் பேரணியின் நோக்கமாகும்.

லிப்டன் சுற்றுவட்டத்திற்கு அருகில் ஆரம்பித்து விகாரமாதேவி பூங்காவில் நிறைவடையும் வகையில் பேரணியொன்றும் இடம்பெறவுள்ளது.

பேரணியின் நிறைவில் இலங்கை இளைஞர்களினால் உருவாக்கப்பட்ட நேர்மைத்திறனிற்கான இளைஞர் சாசனம் கொள்கை வகுப்பாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் இலஞ்சம் மற்றும் ஊழல் குறைவென்றாலும் இலங்கையிலிருந்து இதனை முற்றாக ஒழிப்பதே இவ் விழிப்புணர்வுப் பேரணியின் நோக்கம் என இதனை ஏற்பாடு செய்துள்ள டிரான்ஸ்பரன்சி இன்ர நஷனல் நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர்.

இவ் விழிப்புணர்வுப் பேரணியில் பங்கு கொள்வதற்காக ஒவ்வொரு மாகாணத்திலிருந்து மாவட்டமொன்று தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் வட மாகாணத்திலிருந்து யாழ் மாவட்டம் லஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக விழிப்புணர்வுப் பேரணியில் பங்குகொள்ளவுள்ளது.

இப் பேரணியில் பங்கொள்வதற்காக 30 பேர் கொண்ட யாழ். மாவட்ட இளைஞர் குழுவினர் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை யாழிலிருந்து புறப் பட்டுச் செல்லவுள்ளனர். (48)

# விக்கினம் போக்கும் விநாயக ஷஷ்டி விரதம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான ஸ்ரீ விநாயகப் பெருமானின் திருவருள் பெற அனுட்டிக்கும் விரதம்தான் இந்த விநாயக ஷஷ்டி விரதம். இது ஒரு புனித புண்ணிய விரதமாகும். பிள்ளையார் பெருங்கதைப் படிப்பு முடிந்து இறுதி நாளில் வரும் இந்த விரதம் சைவ சமயிகளுக்கு ஒரு பிரதானமான விரதமாகும்.

இருபத்தோரிழையாலான காப்புநூல் கட்டி இருபத்தொரு நாள் அனுட்டித்து பிள்ளையார் பெருங்கதைப்படிப்பு விரதமானது இந்த விநாயக ஷஷ்டி விரதத்துடன் பூர்த்தியாகின்றது. விநாயகருடைய பெருமை பற்றி எடுத்தியம்பும் பிள்ளையார் பெருங்கதையில் பல்வேறு விடயங்களும், பல்வேறு சம்பவங்களும் மிக அழகாகக் கூறப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றி இன்றைய விநாயக ஷஷ்டி விரத்தை முறையாக அனுட்டித்தால் இப்பூவுலகில் சகலசௌ பாக்கியங்களுடன் கூடிய நல்வாழ்வு நிச்சயம் கிட்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.



*"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்*
*பெருவாக்கும் மீடும் பெருக்கும் - உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்*
*காதலால் கூப்புவர் தங்கை"*

என்ற பாடலுக்கிணங்க ஸ்ரீ விநாயகப் பெருமானைப் பக்தியுடன் வழிபாடியற்றி வணங்கினால் நினைத்த காரியம் கை கூடும்: புகழ் உண்டாகும். நல்ல வாக்கு வன்மை உண்டாகும். சுகமான நல்ல வாழ்வு கிடைக்கும். விக்கினமில்லாத விசேஷமான சுகவாழ்வு கிடைக்கவேண்டுமாயின் கணபதியைக் கைதொழ வேண்டும் அவருடைய திருவருட் பிரசாதம் கிடைக்க வேண்டுமாயின் இன்றைய நல்விரதமான விநாயக ஷஷ்டி விரதத்தை முறையாக அனுட்டிக்கவே வேண்டும். வி.என்றால் மேலான, நாயகன் என்றால் தலைவன் என்று பொருள் அதாவது தனக்குமேல் வேறு தலைவன் இல்லாதவர் என்பதே கருத்து கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்குவதால் கணபதி என்றும் விக்கினங்களை நீக்குபவராதலால் விக்கினேஸ்வரர் என்றும் ஐந்து கரங்களையுடையவராதலால் ஐங்கரன் என்றும் ஆனைமுகங்கொண்டவராதலால் ஆனைமுகன் என்றும் அழைக்கப்படுகின்றார்.

இந்த விநாயப் பெருமானுடைய திருவருள் வசத்தால் நன்மையடைந்தோர் பலர் குறிப்பாக ஔவையார், அகத்தியர், நம்பியாண்டார்நம்பி முதலானோரைக் குறிப்பிடலாம்.

இவரை வணங்காமல் எந்தக்காரியமும் நடைபெறாது. சிவபெருமான் திரிபுர தகனத்துக்குப் புறப்பட்டபோது விநாயகரை வணங்காது சென்றதால் அவரது தேர் அச்சு முறிந்தது. முருகன் இவரை வணங்காது சென்றதால் வள்ளியை மணக்க முடியவில்லை. பின்பு யானையாக வந்தே வள்ளிதிருமணம் நடந்தது.


ஆகவே,

சைவமக்கள் ஒவ்வொருவரும் இன்றைய விநாயக ஷஷ்டி விரதத்தை முறையாக அனுட்டித்து இவ்வுலகில் சகல சௌபாக்கியங்களும், பெற்று வாழ்வதற்குத் தம்மைத்தாமே தயார்ப்படுத்திக்கொள்வார்களாக.

"தெய்வத்தமிழ்ச்சுடர்"
- இராசையா ஸ்ரீதரன்.

# சுன்னாகம் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு





(சுன்னாகம்)

வலி.தெற்கு சுன்னாகம் பிரதேசசபையின் சுன்னாகம் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் சுன்னாகம் பொது நூலக பொறுப்பதிகாரி ந.கனேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மருதனார்மடம் இரமநாதன் கல்லூரி அதிபர் கமலா ராணி கிருஸ்ணபிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக வலிதெற்கு பிரதேசசபைத்தவிசாளர் தி.பிரகாஷ் உடுவில் சமுர்த்தி மகாசங்க முகாமைத்துவப்பணிப்பாளர் ஆனந்தகௌரி ஜெயக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

கலைநிகழ்வுகளாக ஐயனார் முன்பள்ளி இனுவில் பொது நூலக முன்பள்ளி மாணவர்களின் நடனநிகழ்வு புத்தாக்க அரங்க இயக்கத்தின் (ஐ.ரி.எம்) எஸ்.ரி.குமரன் எஸ்.ரி.அருள்குமரனின் நெறியாள்கையில் வாசிப்பை நேசிப்போம் நாடக ஆற்றுகையும் இடம்பெற்றது.

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வலிதெற்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேச பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

# ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சிறுகதைப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(மானிப்பாய்)

ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி சிறுகதைப் போட்டி ஒன்றினை இலங்கை வாழ் எழுத்தாளர்களிடத்தே நடத்தவுள்ளது

இலங்கை வாழ் தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளிக்கொணர்ந்து அவர்களைக் கௌரவிக்கும் முகமாக இம்முறை சிறுகதைப் போட்டியினை நடத்த முன்வந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்..

போட்டிக்கான கதைகளில் தெரிவுசெய்யப்படும் மூன்று சிறுகதைகளுக்கு பணப்பரிசுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும். மேலும் தெரிவு செய்யப்படும் பன்னிரெண்டு சிறுகதைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. கிடைக்கப்பெறும் சிறுகதைகளில் பிரசுரிப்பதற்குத் தகுதியான கதைகள் யாவும் தொகுக்கப்பட்டு நூலாக வெளியீடு செய்யப்படும் எனவும் இச் சங்கம் அறிவித்துள்ளது.

சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையிலான சிறுகதைகள் எதிர்பார்க்கப்படுவதாக ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

முதலாவது பரிசாக 25,000 ரூபாவும், இரண்டாம் பரிசாக 15,000 ரூபாவும், மூன்றாம் பரிசாக 10,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

இந்தச் சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் இலங்கையில் வாழ்பவராக இருக்க வேண்டும் என்பதுடன் பங்குபற்றுபவர்களுக்கு வயதெல்லைகள் கிடையாது. இந்தப் போட்டிக்கென அனுப்பப்படும் சிறுகதைகள் சொந்த ஆக்கமாக இருப்பதுடன் இதுவரை எந்த ஊடகங்களிலும் வெளிவந்திருக்கக் கூடாது. சிறுகதைகள் ஏ4 தாள்களில் கணனியில் தட்டச்சு செய்யப்பட்டு 5 - 6 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் சிறுகதைகள் கையெழுத்துப் பிரதியாக அமையும் பட்சத்தில் அவை எட்டுப்பக்கங்களுக்குள் அடங்கலாக இருக்க வேண்டும்.

ஆக்கங்களினை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பதாக v.sivaraja@arcor.de என்னும் மின்னஞ்சல் முகவரிக்கோ, அல்லது பொன். புத்திசிகாமணி

Mescheder Str - 19, 59846 Sundern என்னும் முகவரிக்கோ அனுப்ப முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (48)

# ஓய்வு நிலை ஆசிரியர்களுக்கு கௌரவிப்பு விழா



(மானிப்பாய்)

யாழ்•இந்துக் கல்லூரியிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும், இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்குமான கௌரவிப்பு வைபவம் ஆசிரியர் கழகத்தின் ஏற்பாட்டில் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்றுச் சென்ற ஆசிரியர்களான தெ.ஜெயபாலன், ம.சிறிதரன், ம.சி.சிவதாசன் ஆகியோரும் அதேவேளை வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான திருமதி.ச.சுரேந்திரன், சோ.கிருஸ்ணதாஸ் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு ஆசிரியர் கழகத்தினால் நினைவுச்சின்னமும் பணப்பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்லூரியின் தற்போதைய ஆசிரியர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், மாணவர்கள் பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (48)

# பிரமந்தனாறு பகுதியில் வழிப்பறிச் சம்பவம்

(கிளிநொச்சி)

தர்மபுரம் பிரமந்தனாறு பகுதியில் ஆசிரியர் ஒருவரிடம் வழிப்பறிச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரிடமமே இவ்வாறு வழிப்பறி இடம்பெற்றுள்ளது.

தர்மபுரத்திலிருந்து பிரமந்தனாறு மகாவித்தியாலய விடுதிக்கு நண்பரைச் சந்திக்கச் சென்ற ஆசிரியரை முகத்தை மறைத்து துணியால் கட்டிக் கொண்ட 5 பேர் அடங்கிய குழு தாக்கி, கைபேசி, பத்தாயிரம் ரூபா பணம், பெறுமதியான கைக்கடிகாரம், தலைக்கவசம், மேலங்கி என்பவற்றை பறித்துள்ளது. இந்நிலையில் வீதியால் வந்த படையினரைக்கண்டு அக்குழு அங்கிருந்து தப்பியோடியுள்ளது. பின்னர் படையினரின் உதவியுடன் இச்சம்பவம் குறித்து தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (12)

# மாதந்த உதவிக்கொடுப்பனவு

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் கோரி விண்ணப்பித்திருந்த 156 பேருக்கு நிதி ஒதுக்கீட்டின் சேமிப்பிலிருந்து ஒருவருடத்திற்கான உதவிப்பணம் இம்மாத கொடுப்பனவு பட்டியலுடன் வழங்கப்படுகின்றது.

தமது கிராமத்திற்கு அருகிலுள்ள தபாலகம், உப தபாலகம் மூலமாக இக் கொடுப்பனவைப் பெறக்கூடியதாக பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் ஏற்பாட்டைச்செய்துள்ளார்.

பொன்னகர் கிராம அலுவலர் பிரிவுமக்களும் இம்மாதம் முதல் திருமுறிகண்டி தபாலகம் மூலமாக கொடுப்பனவைப் பெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் 8கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகரத் தபாலகத்திற்குச் சென்ற கஸ்ட நிலையும் நீக்கப்பட்டுள்ளது. (90)

# பதிவிறக்கப் பெட்டகம்

உலகின் புகழ்பெற்ற குளிர்பான தயாரிப்பு நிறுவனங்களின் உற்பத்தி இரகசியங்கள் இரகசியமானவை. எந்தெந்த பொருட்களை எந்தெந்த விகிதத்தில் கலப்பதென்ற சூட்சுமத்தில்தான் அனைத்துமே தங்கியுள்ளது. உண்மையை சொன்னால் கூட்டமைப்பும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்தான். அவர்களது வெற்றிக்கு பிரதான காரணமாக இருப்பது அபரிமிதமான கலவைதான். தமிழீழ விடுதலைப்புலிகள் கொஞ்சம், அவர்களை நிராகரிப்பது கொஞ்சம், போர்க்குற்ற விசாரணை கொஞ்சம், அரசுடன் இணங்கிச்செயற்படுவது கொஞ்சம், அரசை எதிர்ப்பது கொஞ்சம், ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி கொஞ்சம், தனிநாட்டு கோரிக்கை கொஞ்சம் கலந்த கலவை மக்கள் மத்தியில் சக்கைப்போடு போட்டது. இதற்கு அனந்தியும் அவர்களிற்கு உதவினார். வாக்குப்பெறுவதற்கான கருவியாகவே தன்னை கூட்டமைப்பு பயன்படுத்தியதென்ற அதிருப்தி அனந்திக்கு தேர்தலின் பின்னர்தான் ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் அழிந்ததன் பின்னர் இது ‘மற்றது’களின் காலம். யாரெல்லாம் புலியாக இருக்கவில்லையோ அவர்கள் புலிகளாக வேடமிட்டுள்ளனர். யாரையெல்லாம் புலிகள் அசூசையுடன் பார்த்தார்களோ அவர்கள் புலிகளின் காதலர்களாக கூறிக்கொள்கிறார்கள். ஒருவகையில் பார்த்தால் இது கூத்தாடிகளின் காலம். அதனால்தான் கூட்டமைப்பு புலிவேடமிட்டது. அனந்தி புலியானார்.

**– யோ.கர்ணன்**

சர்வதேச நாடுகள் இப்பொழுது இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் தமிழர் நலன்பாலும் எடுத்துக் கொண்டிருக்கும் அக்கறை, தமது பூகோள அரசியல் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன் சம்பந்தமானது. அதனை நாம் அவதானித்து செயற்பட வேண்டும்.

ஆனால், அவை நம் உரிமைகளைப் பெற்றெடுத்துத் தரும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூறிக்கொண்டு திரிவது, வெறும் ஏமாற்று அரசியல். மக்களை ஒரு கனவுலகத்தில் சஞ்சரிக்க வைக்கும் செயல்.

மகிந்த ராஜபக்ச அரசு, சீனா, பாகிஸ்தான், ஈரான் சார்பு நிலையிலிருந்து விலகுமானால், அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய யூனியன் உள்ளடங்கிய சர்வதேச நாடுகளின் அக்கறையும் அற்றுப் போய்விடும். இப்பொழுது தமிழ் நாட்டில், கட்சிகள் எடுக்கும் நிலைமைகளும் 2014 இல் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததும் மங்கி விடும். திசை திரும்பி விடும். எனவே, சர்வதேச நாடுகளின் தற்போதைய அக்கறையை மட்டும் மையமாக வைத்து கூட்டமைப்பினர் தாம் எடுப்பதாகக் கூறி வரும் அரசியல் பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுடும் அரசியல்.

சிங்கள மக்களுடனும் அரசியல் சக்திகளுடனும் ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாற்றங்கள் இல்லை. அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்களுடனோ, சிங்கள அரசியல்வாதிகளுடனோ இணைந்து சகல இன சமூக மக்களின் நலன் சார்ந்த அரசியல் நடவடிக்கைகளையும் அணுகுமுறைகளையும் எடுப்பதோ அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முனைவதோ பயன் அளிக்காது என்ற பாணியிலேயே கூட்டமைப்பினர் செயற்படுகிறார்கள்

கூட்டமைப்பின் தலைவர்கள் தமது தனிப்பட்ட சொந்த நலன்களைப் பாதுகாக்க அரசாங்கத்துடனும் அரசபடை அதிகாரிகளுடனும் அவ்வப்போது மேற்கொண்டு வரும் சமரசங்கள் மற்றும் பின்கதவால் பெற்றுக் கொள்ளும் சலுகைகள் அனைத்தும் தமிழர்களுக்குத் தெரியாதவாறு மூடி மறைக்கப்படுகின்றன என்பதுதான் உண்மை.

இத்தலைவர்கள் தங்களுக்கு ஒரு நியாயம், தமிழர்களுக்கு ஒரு நியாயம் என்று நடந்ததுதான், நடப்பதுதான், தமிழ் மக்களின் இன்றைய இழிநிலைக்குக் காரணம். **– அபிமன்யு**


ஃபெர்மேட் கோட்பாடு சொல்கிறது: “ஒளியானது, எதிர்ப்பு குறைவாகவுள்ள பாதையில் மட்டுமே செல்லும்”. மனிதனின் தாங்குசக்தியும் மனவலிமையும் பொதுவாக மிகக் குறைவு – அப்படியே அவை இயங்கினாலும் அவை, எதிர்ப்பு குறைவாகவுள்ள, சுளுவான வழிமுறைகளில் மட்டுமே ஈடுபடுபவை.

ஒரு வேலையைத் துப்புரவாகச் செய்வதைவிட, அடுத்தவர் வேலையில் குற்றம்காண்பது சுலபம் – அதே சமயம் அடுத்தவர் வேலையைப் பற்றி ஒரு சுக்கும் தெரியவேண்டிய அவசியமே இல்லை. தாங்கொண்ணா பொறுப்பற்ற தன்மையை, மதிக்கத்தக்க ஒரு நுண்கலையாக மாற்றும் ரசவாதம் இது.

இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க, திடமான திண்மையான முயற்சிகள் செய்வதைவிட, ஆவேசப் பின்னூட்டங்கள், பதிவுகள், போராட்டங்கள் மூலம் இன்பம்காண்பது சுளுவானது. ஏதோ சாதித்தவிட்ட திருப்தியையும் கொடுப்பது.’ ஆவேசங்களை, நம்முடைய மேலான ஆலோசனைகளை யாரும் கண்டு கொள்ளவில்லை என்றால், அய்யோ இந்த இழிநிலையப் பாரீர் எனப் பிலாக்கணம் வைக்கவும் உதவுகிறது.

**– வெ.ராமசாமி**

# நிலைத்துநிற்கும் அபிவிருத்தியையும், அரசியல் உரிமைகளையும் தெரிவுக்குழு யதார்த்தமாக்க வேண்டும்



**“உலகளாவிய பொருளாதார நெருக்கடி சர்வதேசத்தின் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கும் நிலையில் எமது நாடு 6 சதவீதத்துக்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது. எமது நாடு தெற்காசியாவிலேயே சிறந்த பொருளாதார விருத்தி கொண்ட நாடாகமாறி இருப்பது எம் எல்லோருக்கும் பெருமை சேர்க்கிறது.”**

நிலைத்துநிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் மக்களின் நிலையான அரசியல் உரிமைகளை நிலை நிறுத்துவதற்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு வழிசமைக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

கடந்த 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவுசெலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

இன்று உலகில் பல்வேறு நாடுகள் பொருளாதார ரீதியில் பின்னடைவு கண்டு வருகின்றன. ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்லாது அமெரிக்காவும் பொருளாதார ரீதியில் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் நாம் 6 சதவீதத்திற்கும் அதிகமான பொருள்ளாதாரத்தை தொடர்ந்து பாதுகாத்து தென்னாசியாக் கண்டத்தில் சிறந்த பொருளாதார விருத்தி கொண்ட நாடாக இருப்பது எம் எல்லோருக்கும் பெருமை சேர்க்கிறது. இந்த நிலையை நாம் தொடர்ந்து பேணுவதற்கு அடித்தளமாக 2014ஆம் வருடத்தின் வரவு செலவுத் திட்டம் அமையப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது.

எமது பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களில் பெரும்பாலானோர் கமத்தொழிலையும் கடற்றொழிலையும் முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். கடந்த 30 வருட காலத்திற்கு மேலாக நிலவிய அழிவுயுத்தம் காரணமாக எமது பகுதிகளில் பாரிய அழிவுகள் ஏற்பட்டதுடன், எமது மக்கள் அனைத்துதுறைகள் சார்ந்தும் பல தசாப்தங்களுக்கு பின்நோக்கிச் சென்ற நிலையிலேயே வாழ்ந்து இருந்தவர்கள். அந்த வகையில் கமத்தொழில் உட்பட கடற்றொழில் மாத்திரமன்றி ஏனைய அனைத்து துறைகளும் மிகுந்த பின்னடைவையே கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் கடுமையான முயற்சிகள் காரணமாக எமது பகுதிகளில் சுமுகநிலை உருவாக ஆரம்பித்ததிலிருந்து எமது பகுதி மக்கள் தற்போது தலைநிமிர்ந்து வாழக்கூடிய வகையில் தங்களது வாழ்வாதாரங்களை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

அந்த வகையில் இந்த வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் கமத்தொழில்சார்ந்த எமது பகுதி மக்களுக்கும் உரிய நிவாரணங்கள் கிட்டும் என எதிர்ப்பார்க்கின்றேன்.

அதேபோன்று குருநகர் இறங்கு துறையை விரைவில் பூர்த்தி செய்வதாகக் கூறப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். அத்துடன், எமது கடற்றொழிலாளர்களுக்கு இன்னும் பல்வேறு தேவைகள் உள்ளன. குறிப்பாக படகுகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் அவர்களுக்குத் தேவையாகவுள்ளன.

எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்ற இந்திய இழுவலைப் படகுகள் எமது கடல்வளத்தை அழிப்பது மாத்திரமன்றி எமது கடற்றொழிலாளர்களின் வலைகளையும் சேதப்படுத்துகின்றன.

இவ்வாறான நிலைமைகள் கருத்தில் கொள்ளப்பட்டு, இவற்றை தடுத்து நிறுத்துவதற்கும், எமது கடற்றொழிலாளர்களின் தொழில் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கௌரவ சபாநாயகர் அவர்களே

கடந்த கால அழிவு யுத்தம் எமது பகுதிகளில் பெருந்தொகையான வலுவிழந்தோரை உருவாக்கித் தந்துள்ளது. எனவே, வலுவிழந்தோரை தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவித்திட்டத்தில் அதிகளவு பயனாளிகளை எமது பகுதிகளில் இருந்து தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என இந்த உயரிய சபையில் கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே

கடந்த கால யுத்தநிலை காரணமாக 1985, 1990, 1996 ஆகிய வருடங்களில் யாழ். மாவட்டத்திற்குள்ளேயே இடம் பெயர்ந்து, நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் மற்றும் நண்பர்களது இல்லங்களிலும் இன்னமும் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தவகையில் பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 07 நலன்புரி நிலையங்களில் 227 குடும்பங்களைச் சேர்ந்த 786 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 05 நலன்புரி நிலையங்களில் 221 குடும்பங்களைச் சேர்ந்த 895 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 09 நலன்புரி நிலையங்களில் 384 குடும்பங்களைச் சேர்ந்த 1372 பேரும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களைத் தவிர பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 648 குடும்பங்களைச் சேர்ந்த 2186 பேர் உறவினர்கள் மற்றும் நண்பர்களது இல்லங்களிலும் தங்கி வருகின்றனர்.

சொந்த இடங்களில் இவர்கள் வாழ்ந்திருந்த போது பெரும்பாலும் கமத்தொழிலையும், கடற்றொழிலையும் தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர். தற்போது இவர்களுக்கு அத்தகைய வாழ்வாதார துறைகளில் ஈடுபட பௌதீக வளங்கள் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதால், இம் மக்கள் பல வருட காலமாக மிகவும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களது அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு அரசு ஒரு தொகை நிதியை கடந்த வருடம் ஒதுக்கியிருந்ததை இங்கு நான் நினைவு கூறுவதுடன், மீண்டும் இம்மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படும் வரையில் அவர்களது நலன் சார்ந்த திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமானது.

அதுமட்டுமல்லாது அதுவரையில் இம் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கவும் அல்லது மாற்று வாழ்வாதார வழிகளை உண்டு பண்ணவும் வேண்டியிருப்பதன் அவசியத்தையும் இந்த உயரிய சபையில் முன்வைக்கின்றேன்.

அத்துடன் இதுவரையில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு உட்கட்டமைப்பு முதற்கொண்டு பல்வேறு வசதிகளை அரசாங்கம் செய்து வருகிறது. எனினும் இப்பணிகள் இன்னமும் அம் மக்களது தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்பதை நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். தற்போது பருவ மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் அம் மக்கள் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் தான் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, இம் மக்கள் அசௌகரியங்கள் இன்றி வாழக்கூடிய வகை யில் அனைத்து வசதிகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதையும் இங்கு உணர்த்த விரும்புகின்றேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே

கடந்த கால யுத்தம் காரணமாக கணவர்மாரை இழந்த பெண்களின் எண்ணிக்கை எமது பகுதிகளில் அதிகரித்துக் காணப்படுகிறது. பல குடும்பங்கள் பெண்களையே தலைமைத்துவமாகக் கொண்டும் வாழ்ந்து வருகின்றன. இக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டிய கட்டாய பொறுப்பில் நாம் இருந்து வருகின்றோம். எனவே இவர்களுக்கான சுயதொழில் முயற்சிகளை அதிகமாக உருவாக்கிக் கொடுக்க வேண்டியுள்ளது.

இம்முறை வரவு செலவுத்திட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வட்டியில்லாக் கடன் தொகைகளை வழங்க நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதால், அதில் போதிய வாய்ப்புக்களை எமது பகுதிக்கும் வழங்க ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நமது நாட்டின் கலைஞர்களின் வசதிகருதி அமைக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ள விடுமுறை விடுதிகளில் ஒன்றை யாழ்மாவட்டத்திலும் அமைக்கும்படி இந்த உயரிய சபையில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

யுத்தம் முடிவடைந்து எமது பகுதிகளில் படிப்படியாக சுமுகநிலைஏற்பட்டு வருகிறது. சட்டமும் ஒழுங்கும் ஒழுங்குற நிலைநாட்டப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அந்த வகையில் சகல துறை சார்ந்தும் நாம் இதனை உறுதிப்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எமது பகுதிகளில் இயல்புநிலை தோன்ற ஆரம்பித்த பின்னர் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது யாவரும் அறிந்த விடயமாகும். தென்பகுதியை விட அபிவிருத்திப் பணிகள் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தென்பகுதி மக்கள் கூறுகின்றனர். இவ்வாறான அபிவிருத்திகளால் மாத்திரம் எமது மக்கள் திருப்தி காண்பவர்களாக இல்லை என்பதை நான் உயரிய சபையில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கடந்த கால கசப்பான அனுபவங்களிலிருந்து எமது மக்கள் இன்னமும் மீண்டு வரவில்லை. அதற்கு இன்னும் காலம் எடுக்கும் என்பதை நாம் அனுபவப்பூர்வமாக உணர்ந்து வருகிறோம்.

எனவே எமது நாட்டில் அனைத்து தரப்பினராலும், ஏற்றுக் கொள்ளப்பட்ட எமது மக்களுக்கு ஏதுவான அரசியல் உரிமைகள் எமது மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களது காலத்திலேயேகிடைக்க வேண்டுமென்பதையே இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அந்தவகையில் அமைக்கப்பட்டு நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை துரிதப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை இங்கு வலியுறுத்துகின்றேன்.

பாரிய பின்னடைவுகளில் இருந்து மீண்டுள்ள எமது மக்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும் தனித்துமாகவும் வாழக்கூடிய சூழல்வளர்த்தெடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். என்றும் அவர் தெரிவித்தார்.

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

6. நீர்வீழ்ச்சி ஒன்றில் காண முடியாதது.
   1. நீர் மேலிருந்து கீழ்நோக்கி விழுதல் 2. படகுகள் செல்லும் காட்சி
   3. கற்களின் மேல் நீர் விழுதல் 4. கண்ணைக் கவரும் காட்சி


7. புதிதாகப் பிறந்த குழந்தையிடம் இல்லாதது.
   1. சிவப்பு நிறமான தோல் 2. தலை நிறைய முடி
   3. சிறு பற்கள் 4. நன்றாகப் பார்க்கக்கூடிய கண்கள்


8. மலர்களில் இல்லாதது
   1. விதம் விதமான வடிவங்கள் 2. பல்வேறுபட்ட இதழ்கள்
   3. நீண்ட தண்டு 4. பல்வேறுபட்ட நிறங்கள்

9. நாஸர் கடைக்குச் செல்வதற்கு வீட்டில் இருந்து பி.ப. 4.45 இற்குப் புறப்பட்டார். அவர் கடைக்குச் சென்று வீடு திரும்பியபோது நேரம் பி.ப.6.35 மணியெனின், அவருக்குக் கடைக்குச் சென்று திரும்ப எடுத்த மொத்த நேரம் யாது?
   ..............................................................


10. என்னிடம் 25 சத நாணயங்கள் 6 உம், 50 சத நாணயங்கள் 8 உம், 2 ரூபாய் நாணயங்கள் 6 உம், ரூபாய் 5 நாணயங்கள் 4 உம் உள்ளன. அதன்படி என்னிடமுள்ள நாணயங்களின் மொத்தப் பெறுமதி யாது?
   ..............................................................

11. ஒருவர் தனது பயணத்தின் 1/8 பங்கைத் துவிச்சக்கர வண்டியிலும், 1/2 பங்கைப் பேருந்திலும், 3/8 பங்கை முச்சக்கர வண்டியிலும் பயணஞ் செய்தார். அவ்வாறாயின் அவர்,
   1. மிகக் குறைந்த தூரம் பயணஞ் செய்த வாகனம் எது?..............................
   2. மிகக் கூடிய தூரம் பயணஞ்செய்த வாகனம் எது?..............................


12.

இவ்வுருவில் உள்ள சிறிய சதுரம் ஒன்றின் பரப்பளவு 1 சதுர சென்ரிமீற்றர் எனின், இவ்வுருவின் சுற்றளவு யாது? ..............................

13.


இவ்வுருக்களில் காணப்படும் முறையில், 3 பாத்திரங்களில் தண்ணீர் ஊற்றப்பட்டுள்ளது. அதன்படி, மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் முழு அளவை லீற்றர், மில்லி லீற்றரில் தருக.
   1. லீற்றர் :.............................. 2. மில்லி லீற்றர் :..............................

14.


இச்சில்லு 1/4 பங்கு சுழலும்போது அது பயணம் செய்யும் தூரம் 25 cm எனின், இச்சில்லு இரண்டு முறை சுழலும் போது பயணம் செய்யும் மொத்தத் தூரம் எவ்வளவு? ......
   ..............................................................

15.


இச்செவ்வகத்தின் சுற்றளவு 30 m எனின், Aயிலிருந்து Bவரையுள்ள தூரம் எத்தனை மீற்றராகும்?
   ..............................................................

16.

இந்தக் கனவுருவினால் வெட்டியெடுக்கக்கூடிய ஒரு பக்க நீளம் 3 cm ஐ கொண்ட சதுரமுகிகளின் எண்ணிக்கை யாது?..............................

17. **“நாங்கள் புகைவண்டியில் செல்வதற்காக புகையிரத நிலையத்தை அடைந்தோம். அப்போது எனது நண்பர்கள் சிலரும் அங்கு நின்றனர்.”** இதனைத் தொடர்ந்து நடந்தவற்றை விபரிக்கும் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
   1. ..............................
   2. ..............................
   3. ..............................
   4. ..............................
   5. ..............................



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



**01. கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

நெருப்பு உருண்டை போலச் சூரியன் வானத்திலிருந்து பூமியைச் சுட வைக்கிறது. சூரிய ஒளிபட்ட முகில்கள் தங்க நிறமாகக் காட்சி தருகின்றன. காற்று வீசவில்லை. மலைகளில் ஊற்றுக்கள் வற்றிப் போகின்றன. ஆற்று நீர் குறைவடைகின்றது. ஆற்றின் அடியிலுள்ள கற்கள் ஓட்டகத்தின் முதுகைப் போன்று காட்சி தருகின்றன. பகலில் வெப்பத்தைத் தாங்க முடியாதுள்ளது. வியர்வை உடம்பை நனைக்கின்றது. நெருப்பினருகே இருப்பதைப் போன்று உள்ளது. வாவிகளோ வற்றி, வெடித்துக் காட்சி தருகின்றன.

01. மேலே கூறப்பட்ட சம்பவமானது பெரும்பாலும் எக்காலத்திற்குரியது?
   ..............................
02. இப்பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உலோகமொன்றின் பெயர் தருக.
   ..............................
03. இங்கு விலங்கினமொன்றின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அது என்ன?
   ..............................
04. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நீர்நிலைகள் இரண்டின் பெயர் தருக.
   1) .............................. 2) ..............................
05. மனிதனிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள் ஒன்றை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக. ..............................
06. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை மேலுள்ள பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
   1. பகலோன் .............................. 2. விண் ..............................
   3. தேகம் .............................. 4. தீ ..............................
07. ‘முகில்கள் தங்க நிறமாகக் காட்சி தருகின்றன’ இவ்வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக மாற்றி எழுதுக.
   ..............................
08. ‘வியர்வை உடம்பை நனைக்கிறது’ இவ்வாக்கியம் எக்காலத்திற்குரியது?
   ..............................

**02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

01. பேராடிய / அகிம்சை வழியில் / வெள்ளையருக்கு / மாமனிதர் / ஆவர் / மகாத்மாகாந்தி / எதிராக
   ..............................
02. அதிகாலையில் / அடிவானம் / இருந்தது / செக்கச் செவேலென / சிவந்து
   ..............................

**03. பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

01. சீரும் சிறப்பும் ..............................
02. நட்டாற்றில் விடல் ..............................

**04. அடைப்புக்குள் உள்ள சொற்களிலே சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொற்களைத் தெரிவு செய்க.**

01. குப்பி (விளக்கினை, விழக்கினை) பயன்படுத்துவது ஆபத்தானதாகும்.
   ..............................
02. பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறுவதற்கு (பயிற்ச்சி, பயிற்சி)களை போதியளவில் செய்ய வேண்டும்.
   ..............................

**05. நெல் வயல்களில் அல்லது பண்ணைகளில் பின்வருவனவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சொல் எழுதுக.**

01. வயல் :.......................................
02. மாடுகள் :.......................................
03. கலப்பை :.......................................
04. கதிர் அறுத்தல் :.......................................
05. வைக்கோல் குவியல் :.......................................

**06. சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

01. வீதி விளக்கில் செம்மஞ்சள் நிறம் பயணத்தை ஆரம்பிக்கலாம் என்பதற்கான சமிக்ஞையாகும் ( )
02. ஆடையில் தீப்பற்றினால் விரைவாக ஓட வேண்டும் ( )
03. மின்னினால் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக செயற்கைச் சுவாசம் அளிக்க வேண்டும் ( )
04. இலங்கையின் மிகப் பெரிய மின் உற்பத்தி நிலையம் விக்டோரியா வலு நிலையம் ஆகும். ( )
05. ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் இடம் கழிமுகம் எனப்படும். ( )

**07. பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

**(லக்சபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)**

01. இலங்கையில் மிக நீளமான ஆறு.............................கங்கை ஆகும்.
02. நீர் மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வலு நிலையம்.............................ஆகும்.
03. மிக உயரமான நீர்வீழ்ச்சி ............................. நீர்வீழ்ச்சியாகும்.
04. மலை நாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப் பெறாதது .............................ஆகும்.
05. மகாவலி கங்கை உற்பத்தியாவது .............................' மேட்டுநிலத்திலிருந்து ஆகும்.

**08. மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**

01. மீனை மிக நீண்ட காலத்திற்குப் பாதுகாத்து வைத்திருக்கக்கூடிய முறைகளில் சிறந்தது.
 1. அவித்து வைத்தல் 2. குளிரூட்டியில் வைத்தல்
 3. புகையிட்டு வைத்தல் 4. காயவைத்து வைத்தல்
02. 'சுசல்' என்று அழைக்கப்படும் பிராணியின் முதற் பருவம்.
 1. கறையான் 2. வண்ணத்துப்பூச்சி
 3. புழு 4. குடம்பி
03. பின்வரும் எந்த விளையாட்டில் மிகக் குறைந்த போட்டியாளர்கள் பங்குபற்றுவார்கள்.
 1. காற்பந்தாட்டம் 2. மேசைப்பந்து 3. கூடைப்பந்து 4. துடுப்பாட்டம்
04. நீருடன் சேர்க்கும்போது நீருக்கடியில் செல்லக்கூடிய திரவம் பின்வருவனவற்றுள் எது?
 1. இரசம் 2. வினாகிரி 3. தேங்காய்ப்பால் 4. மண்ணெண்ணெய்
05. அனுராதபுரத்தில் அமைந்துள்ள அபயகிரி விகாரையைக் கட்டுவித்த மன்னன்.
 1. மகாசேனன் 2. வலகம்பா 3. தாதுசேனன் 4. துட்டகைமுனு

**09. பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

01. பச்சை நிறம் :.......................................
02. நத்தார் வாழ்த்துக்கள் :.......................................
03. நதி :.......................................

**10. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01. ஆயுபோவன் :.......................................
02. இந்தி ஆப்ப :.......................................
03. வாடிவென்ன :.......................................



**11. பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. அசுத்தமான நீரைப் பருகுவது தடுக்கப்படல் வேண்டும். அதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
 1. அசுத்தமான நீர் சுவை குறைந்தது என்பதால் ஆகும்
 2. நோய்கள் பரவும் என்பதால் ஆகும்
 3. அசுத்தமான நீர்த் தட்டுப்பாடு என்பதால் ஆகும்
2. இலங்கை ஒரு தீவு ஆகும். அவ்வாறு கூறப்படுவது.
 1. இலங்கையைச் சுற்றிக் கடல் இருப்பதனால் ஆகும்
 2. இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் ஆகும்
 3. இலங்கை மாங்காய் வடிவில் அமைந்திருப்பதனால் ஆகும்
3. இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் பல் துலக்குதல் வேண்டும். அதற்குக் காரணம்
 1. பல் துலக்கிய பின் நன்கு தூங்கலாம் என்பதால் ஆகும்
 2. பல் பாதுகாக்கப்படும் என்பதால் ஆகும்
 3. பற்கள் சக்தி பெறுகின்றன என்பதால் ஆகும்
4. மாணவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் வாசிப்பது சிறந்த ஓர் பழக்கமாகும். காரணம்.
 1. புத்தகங்கள் வாசிப்பதனால் அறிவு விருத்தியடையும் என்பதால் ஆகும்
 2. புத்தகங்கள் விலை குறைவு என்பதனால் ஆகும்
 3. ஆசிரியர்களும் புத்தகங்களையே வாசிக்கின்றார்கள் என்பதனால் ஆகும்
5. 0.001, 0.01, 0.1, 0.0001 இவைகளில் பெரிய எண்
 1. 0.001 2. 0.01 3. 0.1
6. நூறாயிரத்துப் பதினைந்து இதனை இலக்கத்தில் எழுதுக.
 1. 10015 2. 100015 3. 1500000

**12. பின்வரும் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.**

1.
 1. வாழை ஒரு மரம். வாழை எமது நாட்டில் வளர்கின்றது.
 2. அரிசி ஒரு வகைத் தானியம். நெல்லைக் குற்றினால் அரிசி கிடைக்கும்
 3. புடோலங்காய் ஒரு வகைக் காய்கறி. புடோலங்காய் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றது
2.
 1. நாய் வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது
 2. காகம் ஒரு பறவை. அது தாவர உண்ணி
 3. மனிதன் இரண்டு கால் விலங்கு. அவன் முலையூட்டிக்குரியவன்

**13. இப்படங்களில் சரியான ஒழுங்கு வரிசையைக் காட்டுகிற விடையின் கீழ்க் கோடிடுக.**

1. 'கடி நாய் கவனம்' என்பது ஒரு
 1. கட்டளை 2. வேண்டுகோள் 3. ஆபத்தைக் குறிக்கும் வாக்கியம்
2. எனது வயது 36. எனது அம்மாவின் வயது எனது வயதின் இரண்டு மடங்கிலும் 6 வயதுகள் குறைவாகுமெனின் நான் பிறந்து 4 வருடங்களின் பின்னர் எனது அம்மாவின் வயது என்னவாக இருந்திருக்கும்?
 1. 30 2. 34 3. 36
3. அஜித் என்பவன் சஜித் என்பவனையும்விட இரு டொபிகள் அதிகமாகவும், ரஜித் என்பவனையும் விட நான்கு டொபிகள் அதிகமாகவும் வைத்துள்ளான். அஜித்திடம் 10 டொபிகள் இருப்பின் மூவரிடமும் உள்ள டொபிகள்
 1. 12 2. 24 3. 36
4. தேங்காயின் விலை அதிகரிக்கின்றமைக்கான காரணம்.
 1. தென்னை மரங்களுக்கு உரம் போடாமை
 2. தென்னங் காணிகள் பெருமளவில் விற்கப்படுதல்
 3. தென்னை உற்பத்தி குறைவது
5. ரமணியின் வயது ருபினியின் வயதின் அரைவாசியாகும். ருபினியின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும் மூவரினது வயதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் எனில், தர்சினிக்கு எத்தனை வயது?
 1. 15 2. 18 3. 20
 1. 18 2. 19 3. 21

# மன்னாரில் அடுத்த வருடம் மேலும் இரு எண்ணெய் கிணறுகள் தோண்டப்படும்

## அமைச்சர் தினேஸ் குணவர்த்தன

மன்னாரை அண்டிய கடற் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப் பட்ட இயற்கை எரிவாயு கிணற் றிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்வது தொடர்பில் தொழில் நுட்ப மற்றும் நிதிச் சாத்திய கற்கை நடத்தப்படுகிறது.

அடுத்த வருடத்தில் மேலும் இரு கிணறுகள் அகழ்வு செயயும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் தினேஷ் குண வர்தன தெரிவித்துள்ளார். மன்னாரை அண்டிய கடற் பகுதியில் எண் ணெய் அகழ்வு மேற்கொள்ளப் படுவது குறித்து ரோஸி சேனாநாயக்க எம்.பி. எழுப்பிய கேளவிக்குப் பதி லளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னார் கடற்பரப்பில் பெற் றோலிய வளம் உள்ள 9 இடங்கள் அடையாளங் காணப்பட்டுள் ளன. கெய்ன் லங்கா நிறுவனம் 4 கிணறுகளில் அகழ்வு மேற் கொண்டது.

அதில் 2 கிணறுகளில் இயற்கை எரிவாயு மற்றும் உண வுப் பொருட்கள் (Condensate) காணப்பட்டன. 2013 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் கெய்ன் நிறு வனம் இரு கண்டுபிடிப்பு கிணறு கள் தொடர்பில் மதிப்பீட்டுத் திட்டமொன்றை சமர்ப்பிக்க உள்ளது. அதன் பின் குறைந்த பட்சம் மேலும் இரு கிணறு களில் அகழ்வுப் பணிகள் ஆரம் பிக்கப்படும்.

மின் உற்பத்திக்கான இறக்கு மதி செய்யப்படும் எரிபொருட் களுக்கான செலவைக் குறைக் கும் வகையில் பெற்றோலியப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட இரு கிணறுகளில் ஒன்றிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை தொடர்பில் ஆய்வு நடத்தப்படுகிறது.

கெய்ன் லங்கா நிறுவனத் துடன் செய்துகொண்ட ஒப்பந் தத்தின் பிரகாரம் எண்ணெய் கிணறுகள் நிர்வகிக்கப்படுகின் றன. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆய்வுகள் மேற்கொள்ளப் படும் பகுதியும் உரிமையும் கண்டுபிடிக்கப்படும் வளங் களின் உரிமையும் இலங்கைக்கு உள்ளது.

வாணிப உற்பத்தி குறிப்பிட்ட அளவில் இலங்கை அரசாங்கத் திற்கும் கெய்ன் கம்பனிக்கும் இடையில் பகிரப்படும். என்று அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

# வவுனியாவில் கையெழுத்து வேட்டை



வவுனியாவில் சோசலிஸ இளைஞர் சங்கம் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டிருக்கிறது.

பலஸ்தீனத்தின் சுதந்திர ஒருமைப்பாட்டை சீர்குழைத்து பலஸ்தீன் மக்களின் மனித உரிமைகளை துண்டிக்கப்பட்டு இஸ்ரேலும் அமெரிக்காவும் ஏகாதிபத்தியம் நடத்துகின்ற தாக்குதல்களுக்கும் அநியாயங் களுக்கும் எதிராக சுதந்திரமான பலஸ்தீனத்தை நிர்மாணிப் பதற்கான போராட்டம் என தெரிவித்து சோசலிஸ இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கையெழுத்து வேட்டை நேற்று முன்தினம் வவுனியாவில் இடம் பெற்றது.

வவுனியா பெரிய பள்ளிவாச லுக்கு முன்பாக இடம்பெற்ற கையெழுத்து போராட்டத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னரும் சோசலிஸ இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாள ருமாக பிமல் ரட்நாயக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இதன் போது பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டு ஆதரவு தெரிவித்திருந்தனர்.

# பின்தங்கிய பாடசாலைகளுக்கு கணனி ஆய்வுகூடங்கள்

பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் மத்தியில் தகவல் தொழில்நுட்ப அறிவை மேம் படுத்தும் நோக்கில் நாடளா விய ரீதியில் கணனி ஆய்வு கூடங்களை நிறுவும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் இவ் வாரம்ப வைபத்தின்போது பாதுக்க வட்டரக்க கனிஷ்ட வித்தி யாலயத்தில் முதலாவது கணனிக கூடம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சர்வதேச தொலை தொடர்பு கள் சங்கம்- இலங்கை தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் இணைந்து ஆரம்பித்துள்ள இத்திட்டத்தின் கீழ் இலங்கையின் 25 மாவட்டங் களிலுள்ள 25 பாடசாலைக்கும் தோட்டப்பகுதியிலுள்ள 8 பாடசாலைகளுக்கும் கணனி ஆய்வுக்கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இத னால் 8500 மாணவர்கள் பயன் பெறுவர்.

சுமார் 288 மில்லியன் செல வில் ஆரம்பிக்கப்படவுள்ள இத் திட்டத்தினால் கிராமப்புற பாட சாலைகளிலுள்ள மாணவர்கள் இணையத்தளத்தில் பிர வேசித்து கல்விக்குத் தேவை யான தகவல்களை சேகரிக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாரம்ப வைபவத்தில் ஜனாதிபதி செயலாளர் - தொலை தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் - லலித் வீரதுங்க- தொலை தொடர் புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட- கல்வி அமைச் சின் செயலாளர் சர்வதேச தொலைத்தொடர்பு கள் சங்கத் தின் ஆசிய பசுபிக் பிராந்திய தலைவர் யூன் நூகிம் உட்பட் பல உயரதிகாரிகள்- அமைச்சின் செயலாளர்கள்- பாடசாலை அதி பர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

# ரயிலுடன் மோதி இளைஞன் மரணம்

(கொழும்பு)

வென்னப்புவ -வாய்க்கால ரயில் நிலையத்திற்கு அருகில் ரயில் முன் பாய்ந்த ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள் ளார். நேற்று முன்தினம் வெளளி இரவு நீர்கொழும்பிலிருந்து சிலாபம் நோக்கி பயணித்த ரயிலில் மோதியே இவர் உயிரி ழந்துள்ளார்.

வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் நீர்கொழும்பு வைத் தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது. பிரேதப் பரிசோதனை கள் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

# தேங்காய் விழுந்ததில் 3 மாதக் குழந்தை பலி

அம்பாறை மாவட்டத்தின் நற்பிட்டி முனைப் பிரதேசத்தில் நேற்று முன் தினம் முற்பகல் வீட்டின் முன்னாலுள்ள தென்னை மரத்திலிருந்து தேங்காய் விழுந்ததில் 3 மாதக் குழந்தையொன்று பலியாகியுள்ளது.

காயமடைந்த நிலையில் கல்முனை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட குழந்தை மட்டக்களப்பு போதனா வைத்தி யசாலைக்குக் கொண்டு வரும் வழியில் மரணமாகியுள்ளது.








## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்


# தமிழர்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தும் இனவாத அரசியலை தொடர்கின்றது கூட்டமைப்பு



தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் இன்னல்களை ஏற்படுத்தி தமது இனவாத அரசியலை கூட்டமைப்பு நடாத்தி வருகிறது.. என ஈழமக் கள ஜனநாயகக் கட்சியின் பொலி கண்டி பிரதேச இணைப்பாளர் கணேசமூர்த்தி விஜியந்தன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி, பொலிகண்டி கிழக்கு அம்பிகை மழலைகள் கல்விப் பூங்கா புனரமைப்பிற்காக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒதுக் கப்பட்ட நிதிக்கான காசோலை கையளிக்கும் நிகழ்வு கடந்த மூன்றாம் திகதி பொலிகண்டி அம்பிகை சனசமூக நிலையத் தலைவர் சி.சிவஞானம் தலை மையில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய மாநாட்டுக்கு வரு கையைத் தடுத்ததன் ஊடாக தமிழரகளுக்கான அரசியல் தீர்வு மற்றும் வடக்கு மாகாணத்திற் குரிய அதிகாரத்தை வலுப்படுத்து வதற்கான வாய்ப்பை கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம் பந்தன் தடுத்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு தொடர்ந் தும் இன்னல்களை ஏற்படுத்தி தமது இனவாத அரசியலை கூட டமைப்பு நடாத்தி வருகிறமை இதன்மூலம் தெளிவாகிறது

அம்பிகை மழலைகள் கல்விப் பூங்கா சமூகத்தால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனத் திற்கு கொண்டு செல்லப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக கௌரவ நாடாளுமன்ற உறுப் பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதியை ஒதுக்கியுள்ளார் என்றார்.

மழலைகள் கல்விப் பூங்கா புனரமைப்பிற்கான இந்நிதியை கணேசமூர்த்தி விஜியந்தன் சன சமூக நிலையத்தின் செய லாளர் தம்பிராசா சுந்தரமூர்த்தியிடம் வைபவ ரீதியாகக் கையளித் தார்.

இந்நிகழ்வில் நிலையத் தன் பொருளாளர் சு.முருகமூர்த்தி, ஆசிரியை செல்வி தர்மராஜா சர்மிளா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(116)

### – 24 மணி நேரத்தில் –

# 500 கோடி தொலைபேசி உரையாடல்களை பதிவு செய்துவரும் அமெரிக்கா



நாளொன்றுக்கு 500 கோடி தொலைபேசி உரையாடல்களை அமெரிக்காவின் உளவு அமைப்பான என்.எஸ்.ஏ. பதிவு செய்து வருவதாக 'தி வொஷிங்டன் போஸ்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்க உளவுத்துறை ஒட்டுக் கேட்கும் பணியில் ஈடுபட்டு வருவது குறித்து என்.எஸ்.ஏ. அமைப்பின் முன்னாள் ஊழியர் எட்வர்ட் ஸ்னோடென் வெளியிட்ட இரகசிய ஆவணங்கள் மூலம் தெரியவந்தது.

அந்த ஆவணங்களை ஆராய்ந்து பார்த்ததில் கோடிக் கணக்கான தொலைபேசிகளை அமெரிக்க உளவு அமைப்பு ஒட்டுக் கேட்டு வருவது தெரிய வந்துள்ளது. சம்பந்தப்பட்ட நபர் எங்கிருக்கிறார் என்பதை கண்டறிவதற்காகவே இது போன்ற ஒட்டுக்கேட்பு நடவடிக்கைகளில் அந்த அமைப்பு ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக பெயர் வெளியிட விரும்பாத என்.எஸ்.ஏ.வுடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் கூறுகையில்,

'நாங்கள் உலகெங்கும் இருந்து ஏராளமான தரவுகளை பெற்று வருகிறோம். அமெரிக்கா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த செல்போன் வலையமைப்புகளை தீவிரமாக கண்காணித்து தகவல்களை சேகரிக்கிறோம். இவை அனைத்தும் சம்பந்தப்பட்டவர் எங்கிருக்கிறார் என்பதை அறிவதற்காகத்தான் செய்துள்ளோம்.

பல்வேறு வெளிநாடுகளுக்கு இலட்சக்கணக்கான அமெரிக்கர்கள் சுற்றுலா செல்கின்றனர். அவர்களின் தொலைபேசிகளையும் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்' என்றார். உளவு அமைப்பின் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் சட்டப்பூர்வமானது என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# மதுபானப் போத்தலில் நடனமாடும் நடராஜர்

## உலக இந்துக்கள் கடும் எதிர்ப்பு




அமெரிக்க நிறுவனம் ஒன்று மதுபான போத்தல் ஒன்றுக்கு இந்து கடவுளான சிவனின் பெயரை வைத்ததுடன் அவரது புகைப்படத்தை போத்தலில் ஒட்டியுள்ளதற்கு உலக இந்துக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க, அவுஸ்ரேலிய நிறுவனங்கள் தங்களின் மதுபான போத்தல்களில் இந்து கடவுள்களின் புகைப்படங்களை பிரசுரித்து சர்ச்சையில் சிக்கின. பின்னர் அதற்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டனர்.

இந்நிலையில் அமெரிக்காவின் வட கரோலினாவில் உள்ள நிறுவனம் ஒன்று புது சர்ச்சையில் சிக்கியுள்ளது.

ஆஷ்வில் ப்ரூயிங் கம்பனி தயாரித்துள்ள ஒன்றுக்கு இந்து கடவுளான சிவனின் பெயரை வைத்து சிவா பீர் என்ற பெயரில் விற்பனை செய்கிறது. மேலும் பேத்தலில் சிவன் நடராஜர் கோலத்தில் இருக்கும் புகைப்படத்தை ஒட்டியுள்ளது.

மதுபானத்திற்கு சிவனின் பெயரை வைத்து அவரின் புகைப்படத்தை ஒட்டியுள்ளதற்கு இந்துக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# இலங்கைத் தமிழர் விடயத்தில் தி.மு.க– அ.தி.மு.க இரட்டைவேடம்

## தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அ.தி.மு.க.,வும் தி.மு.க.,வும் இரட்டை வேடம் போடுகின்றன என்று தே.மு.தி.க., கட்சித்தலைவர் விஜயகாந்த் குற்றம்சாட்டினார்.

தமிழகம் பொன்னேரியில் நேற்று முன்தினம் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் சார்பில் 14 ஏழை மணமக்களுக்கு இலவசத் திருமணத்தை நடத்திவைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தலைநகர் டில்லியில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் தே.மு.தி.க., போட்டியிட்டது. இதில், கட்சிக்கு வெற்றி முக்கியம் அல்ல. தமிழர்களின் நலன் காக்கத்தான் எங்கள் கட்சி போட்டியிட்டது.


எங்கள் கட்சி சார்பில் மாநாடு நடத்திய பின்பே கூட்டணி குறித்து முடிவு எடுக்கப்படும். முள்ளிவாய்க்கால் போரின்போது ஆட்சியில் இருந்த கருணாநிதியும் முள்ளிவாய்க்கால் முற்றத்தை இடித்த ஜெயலலிதாவும் இலங்கை தமிழர் பிரச்சினையில் இரட்டை வேடம் போடுகின்றனர் என்றார்.

நிகழ்ச்சியில் விஜயகாந்த் மனைவி பிரேமலதா, கும்மிடிப்பூண்டி எம்.எல்.ஏ., சி.எச்.சேகர் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பங்கேற்றனர்

உலகச் செய்திகள்

# கட்டுக்கோப்பான பா.ஜ.கட்சியின் பலத்தை குறைத்து மதிப்பிட முடியாது

## இந்தியப் பிரதமர்



பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி சவாலாக விளங்கக் கூடியவர்தான். கட்டுக்கோப்பான நிலையில் உள்ள அந்தக்கட்சியின் பலத்தை நாம் குறைத்து மதிப்பிடமுடியாது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில் 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி தோல்வி எப்படி இருந்தாலும் திடமான மன உறுதியுடன் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை காங்கிரஸ் கட்சி எதிர்கொள்ளும் எதிர்க்கட்சியினரும் பலம் மிக்கவர்கள்தான் என்கிற கருத்து உடையவர்களில் நானும் ஒருவன். இப்போதைய செயல்பாடுகளில் திருப்தி அடைந்து மெத்தனமாக இருந்து விடக்கூடாது.

அரசியலில் உள்ள அனைவருமே ஊழல்வாதிகள், தன்னலம்மிக்கவர்கள், அயோக்கியர்கள், மக்கள் விரோதிகள் என்று முத்திரை குத்த சிலர் முயற்சிக்கிறார்கள். இது கண்டிக்கத் தக்கது. கடந்த 2 ஆண்டுகளாகவே நல்லது செய்வது போல இவ்வாறு தீங்கு இழைக்கிறார்கள். இந்தியாவுக்கு ஜனநாயகம் நன்மை பயக்கவில்லை என்ற தோற்றத்தை ஏற்படுத்தவும் முயற்சி நடைபெறுகிறது. நாடாளுமன்றத்தின் தீர்ப்பையும் ஏற்க மறுத்து நாடாளுமன்ற அமைப்பு மீதே தாக்குதல் நடத்துகிறார்கள் என்றார்.

# மண்டேலாவின் மறைவுக்காக இந்தியாவில் 5 நாட்கள் துக்கம்

தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா மறைவையொட்டி, அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்தியாவில் 5 நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தின்போது, நிற வெறிக்கு எதிராகப் போராடிய மண்டேலாவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் மணீ திவாரி கூறுகையில், "மண்டேலா அவரது தலைமுறையினருக்கு மட்டுமல்லாமல் அனைத்துத் தரப்பினருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.

நிற வெறியைப் அகற்றுவதற்காக அவர் தனிப்பட்ட முறையில் ஆற்றிய பணி முன்னுதாரணமாக விளங்குகிறது. அவரது மறைவுக்கு இந்தியாவும் இரங்கல் தெரிவித்துக் கொள்கிறது" என்றார்.

# வருமானத்தை அள்ளிக்குவித்த "நெல்சன் மண்டேலா" திரைப்படம்



தென்னாபிரிக்காவில் வெளியான மண்டேலா சினிமா திரைப்படம் பெரும வருமானத்தை குவித்துள்ளது.


தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா கறுப்பினத்தவர்களின் உரிமைக்காக நிறவெறி போராட்டத்தில் ஈடுபட்டார். அதற்காக 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தார். அவரது வாழ்க்கை வரலாற்றை தென்னாபிரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளி இயக்குனர் ஆனந்த்சிங் சினிமா படமாக தயாரித்துள்ளார். இதற்காக அவர் நெல்சன் மண்டேலாவுடன் 20 ஆண்டுகள் கழித்துள்ளார்.

சுதந்திரத்துக்காக மண்டேலாவின் நீண்ட பயணம் என பெயரிடப்பட்டுள்ள இந்தப் படம் மண்டேலா மரணம் அடைவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு தென்னாபிரிக்காவில் திரையிடப்பட்டது.

இப்படம் வெளியான ஒரு வாரத்தில் வருமானத்தை குவித்தது. பாக்ஸ் ஆபீஸ் ஹிட் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.முதல் வாரத்தில் மட்டும் ரூ.2 கோடியே 60 இலட்சம் ரூபா வருமானம் ஈட்டியுள்ளது. இந்தப் படம் பல நாடுகளில் தலைவர்களுக்கு விசேடமாக திரையிட்டு காண்பிக்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுக்கு வெள்ளை மாளிகையில் திரையிடப்பட்டது. மேலும் லண்டனில் நடந்த சிறப்பு காட்சியில் இங்கிலாந்து இளவரசர் வில்லியம், இளவரசி கேத்மிடில்டன், மண்டேலாவின் மகள், ஷிண்டஷி மண்டேலா ஆகியோர் பங்கேற்றனர். மண்டேலா மரணம் குறித்து அவரது வாழ்க்கையை சினிமா படமாக எடுத்த ஆனந்த்சிங் கூறுகையில்,நாங்கள் எங்களது தந்தையை இழந்து விட்டோம் என்றும் அவர் உலகின் நாயகனாக திகழ்ந்தார் எனவும் கூறியுள்ளார்.

# இணையத்தில் குவியும் மண்டேலாவுக்கான அஞ்சலிகள்



உலகம் பூராகவும் இருந்து நாடுகளின் தலைவர்கள், பொது நிறுவனங்கள், மற்றும் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் தென்னாபிரிக்கா முன்னாள ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு இணையத்தில் நினைவஞ்சலிகள் குவிந்த வண்ணமுள்ளன.

மண்டேலா மரணமடைந்த முதல் சில மணி நேரங்களிலேயே இந்தக் குறும்பதிவு 800 முறைக்கு மேல் பதிவானது. உலகத் தலைவர்கள் மட்டும் அல்லாமல் ஹொலிவுட் பிரபலங்கள் மற்றும் விளையாட்டு நட்சத்திரங்களும் மண்டேலாவுக்கு புகழஞ்சலி தெரிவித்துவருகின்றன.

ஹாலிவுட் நடிகரும் முன்னாள் கலிபோர்னியா கவர்னருமான அர்னால்டு ஸ்வாஸ்நேகர், மடிபாவின் (மண்டேலாவின் இனக்குழு பெயர்) வாழ்க்கை கடவுள் இருப்பதற்கான நிருபனத்திற்கு மிகவும் அருகாமையிலானது என தெரிவித்திருந்தார். தனது ஆன்மாவின் அடியாழத்தில் இருந்து வேதனை கொள்வதாக நடிகை சார்லைஸ் தீரான் கூறியிருந்தார்.

புகழ்பெற்ற ஆவணப்பட இயக்குனரான மைக்கேல் மூர், "மண்டேலாவால் சிறையில் இருந்து வெளியே வர முடியாது என நினைத்தேன். ஆனால் அவர் விடுதலையாகி ஜனாதிபதியான பின்பு எதுவும் முடியும் என நம்புகிறேன் எனத் தெரிவித்திருந்தார்.

டிவிட்டர் பயனாளிகள் பலரும் மண்டேலா மறைவின் சோகத்தை டிவிட்டரில் பகிர்ந்து கொண்டு வருகின்றனர். தென்னாபிரிக்க வரலாற்றின் இனவெறி எனும் இருண்ட யுகத்தை முடிவுக்கு கொண்டுவந்த மண்டேலாவின் புகழ் டிவிட்டர் வெளியில் குறும்பதிவுகளால் மின்னிக் கொண்டிருக்கின்றன.

# கசினோவிற்கு அனுமதி இல்லையெனில்; 400 மில்.முதலீடு மியான்மாருக்கு மாறும்

## அரசுக்கு பாக்கர் எச்சரிக்கை

கசினோ வர்த்தகத்துக்கான மாளிகை மற்றும் ஆடம்பர ஹோட்டல் என்பனவற்றை அமைப்பதற்கு முறைப்படியான அனுமதி நாடாளுமன்றில் பெறப்படாவிட்டால் தனது 400 மில்லியன் முதலீட்டை மியன்மாருக்கு மாற்றப் போவதாக அவுஸ்ரேலிய கசினோ வர்த்தகர் ஜேம்ஸ் பாக்கர் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் இந்த மாளிகை மற்றும் ஹோட்டல் என்பன அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் எதிர்க்கட்சிகள், மதத்தலைவர்கள், சிவில் சமூகத்தினர் மற்றும் அரசிலுள்ள ஜாதிக ஹெல உறுமய என்பன இலங்கையில் கசினோ சூதாட்ட நிலையத்தை அமைப்பதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்த நிலையில், இந்தச் சூதாட்ட நிலையத்தை இலங்கையில் நடத்தும் வகையில் நாடாளுமன்றில் கொண்டு வரப்படவிருந்த கசினோ சட்ட மூலம் தாமதமடைந்தது.

அரசின் இந்தத் தாமதத்தை அடுத்து தனது உள்ளூர் வர்த்தகப் பங்காளருடன் கலந்துரையாடி பாக்கர் இது விடயமாக மத்திய வங்கி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புச் சபையுடன் பேசுமாறு தெரிவித்திருந்தார். இந்த நிலையில் உள்ளூர் வர்த்தகப் பங்காளர் மேற்படி நிறுவனங்களின் தகவலுடன் அவுஸ்ரேலியா சென்றுள்ளார்.

இதன்படி குறித்த பகுதியில் பாக்கர் தனது கட்டடப் பணிகளை ஆரம்பிக்குமாறும், நேரம் வரும் வேளை எவ்வித பிரச்சினைகளுமின்றிக் கசினோ சட்ட மூலம் நிறைவேற்றப்படுமென உறுதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

# அமெரிக்க அதிகாரிகளுடன் சிவில் சமூகம் சந்திப்பு

அமெரிக்க இராஜாங்க அதிகாரிகளுக்கும் யாழ். சிவில் சமூகத்திற்கும் இடையிலான சந்திப்பொன்று யாழ். இரண்டாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள செனட் அமைப்பின் இணைப்பாளர் டிமய்ன் மெ.்.பிப், வோஸிங்டன் நகர அதிகாரி மரியா றெக்கோ, அமெரிக்க தூதரக அரசியல் ஆலோசகர் மிக்கல் கொனிக்ஸ்றின் ஆகியோருன் சிவில் சமூகத்தினர் சந்திப்பினை மேற்கொண்டிருந்தனர். (25)

# சிகிச்சை பலனின்றி ; இளைஞர் உயிரிழப்பு

மோட்டார் சைக்கிளில் இன்னொருவருடன் சென்று கொண்டிருந்த போது தவறி வீழ்ந்து தலையில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மரணமானார்.

நல்லூர் நாவலர் வீதியைச் சேர்ந்த செல்வராசா கிருபாகரன் (வயது-25) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார்.

சில தினங்களுக்கு முன்னர் இவர் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்திருந்தார். உடனடியாக வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டார்.

இவரது தந்தையார் சில நாட்களுக்கு முன்னரே காலமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# இரு கைக்குண்டுகள் தம்பசிட்டியில் மீட்பு

(வடமராட்சி)

தம்பசிட்டி கதிர்வேற்பிள்ளை வீதியி லுள்ள காணியிலிருந்து இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

காணி துப்புரவுசெய்யும் வேளையில் கண்டு பிடிக்கப்பட்ட இக்கைக்குண் டுகள் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து இவ்விரு கைக்குண்டுகளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன. (116)

## இன நல்லிணக்கத்திற்கு...

இன முரண்பாடுகளைத் தூண்டி விட்டு அரசியல் நடத்த முற்படுவோர் எவராக இருந்தாலும் அவர்களை நாம் அனுமதிக்க முடியாது.

போலியான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கிவிட்டுத் தேர்தல் வெற்றிகளை மட்டும் பெற்றுக் கொள்ள மக்கள் தொடர்ந்தும் கூட்டமைப்பினரை அனுமதிக்கமாட்டார்கள்.

பிரிட்டன் பிரதமர் யாழ்ப்பாணம் சென்றவேளை, அவரைச் சந்திப்பதற்கான ஏற்பாட்டை மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தால் கூட்டமைப்பிற்கு எதிராக மக்கள் திரும்பிருக்க மாட்டார்கள் என்பதுடன், பிரிட்டன் பிரதமருடன் என்ன பேசினோம் என்ற தகவலைக் கூடத் தமக்கு வாக்களித்த மக்களுக்கு இன்றுவரை கூட்டமைப்பு தெளிவுபடுத்தவில்லை.

அத்துடன், வடமாகாண சபையை நடத்துவதற்கு அடுத்தவர்கள் தடையாக இருப்பதாகப் போலிப் பிரசாரம் செய்கிறார்கள். மாகாண சபை ஆட்சியும், அதிகாரங்களும் எமது கனவு மட்டுமல்ல, எமது மக்களின் கனவுகளும் அதுதான்.

எனவேதான், வடமாகாண சபையைச் சிறப்பாக நடத்த எமது ஒத்துழைப்பை வழங்குவோமெனப் பகிரங்கமாகவே நேசக்கரம் நீட்டியிருந்தோம். மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் மற்றும் சட்டவிதிகள் எவை எனத் தெரிந்துகொண்டும், அதற்கு மாறான கருத்துக்களை பரப்பி வ்ருகின்றனர் கூட்டமைப்பினர்.

நாங்கள் கட்டி வைத்த கட்டடங்களுக்கு நீங்கள் விளக்கேற்றி நாடாவெட்டித் திறந்து வைப்பது சரியெனில், எங்களது பங்களிப் போடும் மாகாண சபையை திறம்பட நடத்தக் கூட்டமைப்பு முன்வர வேண்டும் எனவும் அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

அதேவேளை, மறைந்த தென்னாபிரிக்க விடுதலை வீரன் நெல்சன் மண்டேலாவிற்கான தனது அஞ்சலியையும் அமைச்சர் தெரிவித்தார்.

## இலங்கைக்கு...

அரசின் முயற்சி வெற்றி பெறவில்லை. அமெரிக்கா இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றது என கூறுகின்றீர்கள். கியூபா அமெரிக்காவிற்கு எதிராக ஐ.நா.வில் பிரேரணை கொண்டு வருகிறது. இதன் போது கியூபாவுக்கு 108 வாக்குகள் ஆதரவாக கிடைத்தன. அமெரிக்காவிற்கு 2 வாக்கு களே கிடைத்தன.

எனவே ஐ.நா.வை அமெரிக்கா ஆட்டுவிக்கின்றதென்ற உங்கள் கருத்தை ஏற்க முடியும். இலங்கைக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் உள்ளன. இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. சூடானுக்கும் கிழக்குத் திமோருக்கும் எதிராக ஐ.நா.வில் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டன. இறுதி யில் அந்நாடுகள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டன.

இந்தியா எமக்கு ஒத்துழைப்பு வழங்கும். எமக்கு எதிராக பிரேணைகள் முன் வைக்கப்படமாட்டாது எனகிறீர்கள். ஆனால் அனைத்தும் இடம்பெற்றன. கமரூனின் கருத்தை இலகுவாக எண்ண வேண்டாம். எமக்கெதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டால் சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடும்.

பராக் ஒபாமாவின் அலுவலகத்தில் 20 இற்கு மேற்பட்ட தமிழர்கள் தொழில் புரிகின்றனர். நெல்சன் மண்டேலா யுத்தம் முடிந்தவுடன் மன்னிப்புக் கேட்டார். சிறையிலிருந்து மண்டேலா விடுதலையாகி ஜனாதிபதி பதவியேற்ற போது சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

ஆனால் யுத்தத்திற்கு பின்னர் நீங்கள் என்ன செய்தீர்கள்? பாற்சோறு உட் கொண்டு வெற்றிவிழா கொண்டாடினீர்கள். உயிரி ழப்புக்களுக்காக மன்னிப்பு கோராது விழா கொண்டாடினீர்கள்.

மனித உரிமை மீறல் கேள்விகளுக்கு அதிவேக பாதை நிர்மாணித்துள்ளோம். விமான நிலையம், துறைமுகம் நிர்மாணித்துள்ளோம் என சர்வதேச விசாரணைகளின் போது கூற முடியாது.

அடுத்த மார்ச் மாதம் நாட்டுக்கு பாரிய நெருக்கடி யான மாதமாகும். சர்வதேச மனித உரிமைகள் தொடர்பாக பேசும் போது துரோகிகளாக முத்திரை குத்துகிறீர்கள். பதிவு செய்ய அரசு ஊடகங்களே நேரடியாக அங்கு சென்றன. தனியார் ஊடகங்கள் செல்லவில்லை. அப்படியானால் அரச ஊடகங்களே சாட்சியங்களை வெளிநாடுகளுக்கு வழங்கின என அவர் மேலும் தெரிவித்தார்.

## நிபந்தனைகளை...

சில நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் இலங்கை அரசாங்கத்தின் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் முனைப்புக்களில் பங்களிப்பு வழங்க முடியும்.

பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் மெய்யாகவே முயற்சிக்க வேண்டும்

இந்தியா, அமெரிக்கா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகள் இந்த பிரச்சினையில் உதவி வழங்கத் தயாராக உள்ளன. அந்த உதவிகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்பட முனைப்பு காட்ட வேண்டும்.

இந்த நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகிய விவகாரத்தில் பூரண ஒத்துழைப்பை எமது கட்சி வழங்கும்.

எவ்வாறெனினும், அரசாங் கம் தொடர்ந்தும் அழுத்தங்களை பிரயோகித்தால் அது பாதக விளைவுகளையே ஏற்படுத்தும்.

தமிழ் மக்களுக்கு சமவுரிமைகளை வழங்க அரசாங்கம் விரும்பினால், ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்த முடியும்.

அனைத்து மக்களினாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஓர் தீர்வுத் திட்டத்தை பெற்றுக் கொள்ள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தும் நீடிக்கும்.

மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் கூடுதல் முனைப்பு எடுத்துக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவுப்...

என்ற கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினை கையளித்தனர்.

மேற்படி மகஜரினை பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு இதனைக் கொண்டு செல்வதாகத் தெரிவித்ததுடன் நடைபெற்ற கொலைச்சம்பவம் தொடர்பாக உண்மையான குற்றவாளி எத்தரப்பாக இருப்பினும் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டுமென்பதே எமது நோக்கமாகும்.

இவ்வாறான செயற்பாடு எமது கட்சியின் கொள்கையல்ல அது வொரு தனிநபர்சார்ந்த குற்றச் செயலாகவே காணப்படுகின்றது இவ்வாறான செயல்களை நாம் இதுவரை அனுமதித்ததும் இல்லை இனிவரும் காலங்களில் அனுமதிக்கப் போவதும் இல்லை அந்தவகையில் எமது கட்சியின் உறுப்பினர்களை மீளாய்வு செய்ய வேண்டு மென்று கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா முடிவு எடுத்திருக்கின்றார். இதனடிப்படையிலேயே நெடுந்தீவு அலுவலகம் தொடர்பாக ஆய்வு எடுக்கப்பட்டது.

ஆயினும் இந்த மக்களு டைய அபிவிருத்திப் பணி, அன்றாட வாழ்வாதார பிரச்சினைகளிலிருந்து தீவகப் பகுதி மக்களின் வாழ்வுக்காக என்றென்றும் உழைப்போம் அத்துடன், நெடுந்தீவு மக்கள் எம்மோடு சகோதரங்களாக பின்னிப் பிணைந்திருப்பதனால் மேற்படி மகஜரினை அமைச்சரிடம் கையளித்தே அவருடைய பதிலை வெகுவிரைவில் பெற்றுத் தருவதாகவும் கூறினார்.

## அனைத்து வித...

என்ன நடக்கிறது? என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப் பேச்சாளர் மேரி ஹாப்பிடம் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த மேரி ஹாப்,

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை, நடைமுறைப் படுத்தும் தமது கடப்பாடுகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும், மனிதா பிமான மற்றும் மனிதஉரிமை சட்டமீறல்கள் குறித்த மோசமான குற்றச்சாட்டுகள் தொடர்பாக, பதிலளிக்கும் வகையில் நம்பகமான நீதிப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா நீண்டகாலமாகக் கோரி வருகிறது.

ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் தொடர்பான கட்டுப்பாடுகள் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்தும், சட்டத்தின் ஆட்சி சிதைக்கப்படுவது, மதசிறு பான்மையினருக்கு எதிரான வன்முறைகள் குறித்தும் நாம் தொடர்ந்து கவலை கொண்டுள் ளோம்.

மனிதஉரிமை ஆர்வலர்களைப் பழிவாங்கும் நடவடிக்கை கள் தொடர்வது குறித்தும் கரிசனை கொண்டுள்ளோம்.

வெளிப்படையாக இவை முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டிய தேவை உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விக்கியின்...

குறுகியகாலம் முன்னதாகவே நாம் அறிவிப்பது வழக்கம். இதற்கு முன்னரும் அவ்வாறு தான் செய்திருக்கிறோம்.

எனவே இந்தக் கேள்விக்கு முன்கூட்டியே பதில் எதிர்பார்க்கக் கூடாது.

எனினும், அடுத்தவாரத்தில் இவர்களின் பயணத்துக்கு வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கடற்றொழிலுக்குச்...

அடுத்தே கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவ தாகவும் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் விடுத்துள்ள அறிவுறுத்தலுக்கமையவே இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரு நாட்களுக்கு முன்னர் கடலுக்குச் சென்ற இரு மீனவர்கள் கடல் கொந்தளிப்பு ஏற்பட் டதை அடுத்து அவர்கள் சென்ற படகு பாறையுடன் மோதிச் சேதமடைந்துள்ளதுடன், மீனவர் களும் தெய்வாதீனமாக உயிர் தப்பிய சம்பவம் இடம்பெற்றுள் ளது.

எனவே மீனவர்கள் அறிவித்தல் வரும் வரை கடலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தொண்டைமானாறு முதல் சுண்டிக்குளம் வரையான கரையோரக் கடற்பகுதியில் கடல் கொந்தளிப்புக் காணப்படுவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட் டுள்ளதாகவும், இதனால் மீனவர்கள் அன்றாட வாழ்வதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (109, 116)

## திருடர்களின்...

உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை திருடர்களின் கடுமையான தாக்குதல்களுக்கு இலக்கான குறித்த மாணவனின் தாயார் ச.நாகேஸ்வரி (வயது-48) வீடு திரும்பியுள்ள நிலையில் தலைப்பகுதியில் கடுமையான தாக்குதல்க ளுக்குள்ளாகிய தந்தையார் செ.சண்முகநாதன் (வயது-54) தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (பா, 48)

# ஆட்சியை தக்க வைப்பதற்கு ஊட்டப்படுகிறது பிரிவினைவாதம்

## அரசு மீது பாய்கிறது ஜே.வி.பி



(கொழும்பு)

அரசாங்கத்தை தக்க வைப்பதற்காக சிங்கள மக்களின் மனதில் பிரிவினைவாதம் ஊட்டப்படுவதாகவும், இன்று தமிழர்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் அரசாங்கம் கொடுமைப் படுத்துவதாகவும் ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளதாவது,

வடக்கில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதென்பதைப் போன்று ஏனைய பகுதிகளிலும் இடம்பெறுகின்றதென்பதையும் சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்

நாட்டில் வாழும் சிங்கள , முஸ்லிம்களைப் போன்றே தமிழர்களும் வாழ்கின்றனர் . வடக்கில் வாழும் தமிழர்களை விடுதலைப் புலிகளென்றோ தீவிரவாதிகளென்றோ, சித்தரித்து புறக்கணிக்கக்கூடாது . விடுதலைப்புலிகள் வடக்கில் இருந்ததனால் வடக்குத் தமிழர்கள் தீவிரவாதிகளல்ல. அரசாங்கம் இன்றும் தமிழர் களைத் தீவிரவாதிகளென்ற நிலையில் சித்தரித்து வைத்துள்ளதனாலேயே இன்றும் வடக்கில் இராணுவ ஆட்சி இடம் பெறுகின்றது .

இலங்கையில் பெரும்பான்மை இனத்தவரினால் தமிழர்கள் அடக்கி ஆளப்படுகின்றனர் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் . இதற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சிங்கள மக்களின் மனதில் இன்று பிரிவினையினை வளர்த்து அரசாங்கத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இன்று தமிழர்களை மட்டுமன்றி சிங்கள மக்களையும் அரசாங்கம் கொடுமைப்படுத் துகின்றது.

இன்று அரசாங்கம் தமது இருப்பினை தக்க வைத்துக் கொள்வதற்காக விடுதலைப் புலிகளைப் பற்றியும், சர்வதேச அத்து மீறல்களை பற்றியும் பேசி வருகின்றது. ஆனால் இன்று நியாயம் பேசும் கட்சிகள் அன்று தீவிரவாத செயற்பாடுகளையே செய்தனர் என்பதை மறந்து விடக்கூடாது. ஐக்கிய தேசியக் கட்சியும் அரசாங்கமும் அன்று மனித உரிமை மீறல்கள் பலவற்றினை செய்தனர். 1983 கலவரத்தில் தமிழர்கள் கொல்லப்பட்டமைக்கும் தாக்கப்பட்டமைக்கும் ஐக்கிய தேசியக்கட்சியே காரணம் என்பது இன்று மறக்கப்பட்டு விட்டது.

மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பகாலங்களில் ஓர் இயக்கமாகச் செயற்பட்டாலும் நாம் உரிமைகளை வென்றெடுக்கவே போராடினோம். விடுதலைப்புலிகளும் தமது உரிமைகளை வென்றெடுக்க போராடிய இயக்கமே . எனினும் இரு இயக்கத்தினதும் செயற்பாடுகள் வித்தியாசமாக அமைந்ததே இன்று விடுதலைப் புலிகள் அழிவிற்கும் நாம் அரசியல் நடத்துவதற்கும் காரணம்.

எனினும் கடந்த கால சம்பவங்களை மறந்து அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகள் கடக்கின்ற நிலைமையில் இன்னமும் விடுதலைப் புலிகளைப்பற்றி பேசி தமிழர்களின் நிம்மதியினை கெடுத்து விடக்கூடாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை மீனவர் 98 பேர் 13 நாளில் இந்தியக் கடலில் கைது



இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கடந்த 13 நாட்களில் இலங்கை மீனவர்கள் 98 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய கடற்படைக் கப்பலான ICGS விஸ்வா இருவேறு கடற்பகுதியில் கடந்த 5 ஆம் திகதி 16 இலங்கை மீனவர் களை கைது செய்துள்ளது. இதில் முதலாவது கைதுச் சம்பவம் சென் னையிலிருந்து 118 கடல் மைல் தொலைவிலும், இரண்டாவது கைதுச் சம்பவம் ஆந்திரா பிரதேசம் கிருஷ்ணபட்டினம் கடற்கரையிலிருந்து 116 கடல் மைல் தொலைவிலும் நடந்துள்ளது. இதன்போது மூன்று மீன்பிடிப்படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறுகைப்பற்றப்பட்ட படகுகள் தமிழ்நாட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தியக் கடற்பரப்பில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடும் இலங்கை மீனவர்கள் கைது அண்மைக்காலமாக அதிகரித்திருப்பதனையே இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கரையொதுங்கினர் இந்திய மீனவர்கள்

இந்திய மீனவர்கள் 4பேர் நேற்றுக் காலை 10.30 மணியளவில் நெடுந்தீவுக் கடற்கரையில ஒதுங்கியுள்ளனர்.

கரையொதுங்கிய மேற்படி நான்கு மீனவர்களும் தற்போது நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக இவர்கள் வந்த படகு சேதமடைந்ததுடன், மீன்கள் பாதுகாத்து வைக்கும் பெட்டிக ளின் உதவியுடன் இவர்கள் கரையினை அடைந்ததாகப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

(25)

# சவுதியில் ஒன்பது வருடங்களாக சிறையிலிருக்கும் இலங்கைப் பணிப்பெண்

சவுதி அரேபிய, ரியாத் நகரில் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் 5 வருடங்களாக சம்பளம் வழங்கப்படாது, 9 வருடங்களாக இலங்கைக்கு அனுப்பாது பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. 43 வயதான குணவதி என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர் பணி புரிவதற்காக சென்ற வீட்டின் உரிமையாளர் மற்றும் அவரது 6 பிள்ளைகளால் இப்பெண் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பணியாளர்களது கடவுச்சீட்டு புதுப்பிக்கும் நடவடிக்கைளை சவுதியிலுள்ள இலங்கை தூதுவராலயம் மேற்கொள்வது வழமை. இவ்வாறான சந்தர்ப்பத்தின் போதே குனவதியின் துன்பங்கள் தெரியவந்துள்ளதாகத் தூதுவராலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடவுச்சீட்டு புதுப்பிப்பதற்காக குணவதி செல்லாது அவரது வீட்டு உரிமையாளரே சென்றுள்ளார். இதன்போது தூதரக அதிகாரிகள், கடவுச்சீட்டை புதுப்பிக்க முடியாது எனவும் கடவுச்சீட்டின் உரிமையாளர்கள் வரும் பட்சத்திலேயே புதுப்பிக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் குணவதிக்கு தொழில் பெற்றுக் கொடுத்த முகவர் நிலையத்தை தூதுவராலயம் தொடர்பு கொண்டு இவ்விடயம் குறித்து கேள்வி எழுப்பியுள்ளது.

இதன்போது, குறித்த பெண்ணிற்கு சம்பளம் கொடுக்காமை, வீட்டிற்கு செல்ல அனுமதிக்காமை, துன்புறுத்தப்படுகின்றமை போன்ற தகவல்களைத் தெரிவித்துள்ளனர். இதன்பின்னதாக தூதரக அதிகாரிகள் சவுதி அரேபிய ஊடகம் ஒன்றின் மூலமாக இந்தச் சம்பவம் குறித்த தகவலை வெளிப்படுத்தியுள்ளனர்.

சவுதி அரேபியாவிற்கு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் இலங்கை பணிப் பெண்கள் இவ்வாறு பல துன்பங்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐந்து இலங்கையர்கள் மெக்சிக்கோவில் கைது



மெக்சிக்கோவில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த ஐந்து இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இலங்கையர்களுடன் இரண்டு சிறுவர்களும் இருந்துள்ளனர். மெக்சிக்கோவில் அமைந்துள்ள செதுமல் ஹோட்டலில் 4 நாட்கள் தங்கியிருந்த இவர்களிடம் உரிய பயண ஆவணங்கள் இருக்கவில்லை எனத் தெரியவருகிறது.

அங்கு தங்கியிருந்த சிறுவர்களைத் தவிர பெரியவர்களான சந்திரிகா நிரோசன் (34 ), தூரந்திகா நிரோசன் (31), சிவபாதம் (27 ) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்

# மரபணு பரிசோதனை அறிக்கை ஜனவரி முதல் விரைவில் பெறலாம்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

அடையாளம் காணப்படாத சடலம், நுட்பமான முறையில் செய்யப்படும் கொலைகளைக் கூட கண்டறியக் கூடிய மரபணுப் பரிசோதனை தொடர்பான அறிகையை, மக்கள் துரிதமாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நீதியமைச்சு, சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மரபணுப் பரிசோதனை அறிக்கைகளை இலங்கை மக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இலகுவாகவும் உடனடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

கடந்த மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட மரபணுப் பரிசோதனை ஆய்வு கூட்டத்தில் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை போதைப் பொருள் வழக்குகள் தொடர்பாக 4 ஆயிரத்து 491 அறிக்கைகள் கிடைத்துள்ளன. மேலும் 593 அறிக்கைகளே கிடைக்க வேண்டியுள்ளது என்றார்.

# ரவைகள் மீட்பு

(சுன்னாகம்)

யாழ். சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலைய வாசிகசாலைக் கட்டடத்திற்குள் இருந்து 35 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

வாசிகசாலையினை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது, இந்த துப்பாக்கி ரவைகள் இருப்பது அவதானிக்கப்பட்டு, சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் மேற்படி ரவைகளை மீட்டுச் சென்றனர்.இது ஏற்கனவே அங்கு இருந்தவையா அல்லது யாராவது கொண்டு வந்து அங்கு போட்டார்களா என்பது தொடரபான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழிலுக்குச் சென்றவர் கடலில் மூழ்கி உயிரிழப்பு

## மன்னார் சவேரியார்புரம் கடலில் சம்பவம்

முசலிப் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட சவேரியார் புரம் கடற்பரப்பில் நேற்றுக் காலை தொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக சிலாபத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சவேரியார்புரம் கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான மத்தேஸ் பிரான்சீஸ் சகாயம் (வயது-55)என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுக்காலை 5.30 மணியளவில் குறித்த நபர் சவேரியார் புரம் கடற்பரப்பில் " தெப்பம் "ஒன்றில் தொழிலுக்குச் சென்றுள்ளார் இதன் போது பலத்த காற்றின் காரணமாக தெப்பம் கவிழ்ந்து நிலையில் குறித்த நபர் கடலினுள் வீழ்ந்துள்ளார்.

இந்த நிலையில் காலை 6 மணியளவில் குறித்த நபர் சென்ற"தெப்பம் " கரை ஒதுங்கியுள்ளது .

அதனைக்கண்ட சவேரியார் புரத்தைச் சேர்ந்த சக மீனவர்கள் சுமார் 20 படகுகளில் சுமார் 30 இற்கும் மேற்பட்டவர்கள் சென்று தேடுதலில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் 6.30 மணியளவில் குறித்த நபர் மீட்கப்பட்டு சிலாபத்துறை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் . எனினும் அவர் சிகிச்சை பலனின்றி மன்னார் பொது வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் .



மேலதிக விசாரனைகளை சிலாபத்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.